


KALKI ரூ. 3.00
15.10.95
கல்கி
சிறுகதை
ஸ்பெஷல்!
தீபாவளிச் சிறப்பிதழ்


இது தெள்ளத் தெளிவு. ஒரு இந்திய பிராண்ட்
காத்திருக்கிறது சர்வதேச போட்டிக்காக
சிகரத்தின் உச்சியிலே தனித்து நிற்கும் ஒனிடா கேஒய்.
தன்னிகரற்ற டிவியின் அனைத்து சிறப்பம்சங்களுடன் காத்திருக்கிறது.
சரி நிகர் போட்டிக்காக ... கடுமையான சவாலுக்காக
சவால் எனில் எப்படிப்பட்ட பிராண்டுகளிடமிருந்து ...
ஒனிடா கேஒய்யின் மகா சக்தி வாய்ந்த மாஸ்டர் கமாண்ட் கண்ட்ரோல் ...
உலகின் முதன் முதலான கராவ்கே தேர்வுடன் கூடிய
53 செமீ டிவியின் வெல்ல முடியாத தரம்...
அல்லது வீட்டிலேயே அரங்க ஒலியின் அனுபவத்தைத்
தரும் இதன் ஜி-ஹான் ஒலி.



"ஒரு ரூபா சம்பளம் வாங்கறவங்களே ஊரைக்
கூட்டி அசத்தறாங்க... உங்க சம்பளத்துல
ஒரு கம்பி மத்தாப்புதான் வாங்க முடிஞ்சுதுன்னா
நம்பச் சொல்றீங்களா...?"

\- கிச்சா

● தன்னாலபேசி, நோனிதள்ளி, சல்லிநாகராஜ், பிராக்கரி, சின்னக்கசிவான், பெரியகசிவான், சின்னக்குதிலு, பெரிய குதிலு, தண்ணி வண்டி முருகன், குருத்துக்காதன், பச்சை மூக்கன், மூக்குறிஞ்சி, மொனங்கி, மண்ணூதி, அத்திரி, ஓூசு சுப்பரை, பீதிராண்டன்- என்ன இவையெல்லாம்?
எங்கள் ஊரில் இருக்கும் சிலருக்கு உள்ள பட்டப் (புனைப்) பெயர்கள்!

● ஒரு காலத்தில் பேனாவுக்குப் பதிலாக இறகை வைத்துத் தான் எழுதி வந்தார்கள். அப்போது இறகு கூர் மழுங்கிப் போய் விட்டால், அதனைச் சீவிச் சரி செய்வதற்காகச் சின்னதொரு கத்தி ஒன்றினை வைத்திருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதனைப் 'பென் நைஃப்' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். பேனாவுக்கு உபயோகிக்கப்பட்ட சிறு கத்தி நாளடைவில் பேனாக்கத்தி என்றாயிற்று.

ஆதாரம்: 'தெரிந்த பெயர்; தெரியாத விளக்கம்'
–மு. பாலமுருகன், மேல்மங்கலம்.

● எங்கள் ஊரில் கல்லடி, குவாரி என்று 'கல்' அறுக்க, ஊரே ஆடிக் கொண்டு இருக்கிறது! காரணம், வெறும் மலையாகவே உள்ள எங்கள் ஊரில் அவ்வாறு அறுத்து, வேட்டு வைத்து, தகர்த்து எடுக்கும் போது பக்கத்தில் உள்ள வீடு களில் வெடிப்பு ஏற்படுகிறது; ஓடுகள் உடைகின்றன. அங்கே வைக்கும் வெடியில் கற்கள் ஊருக்குள்- ஆட்கள் மேல்- வந்து விழுகின்றன! இவற்றையெல்லாம் போலீசில் சொல்லியும் பயனில்லாமல், தவிக்கின்றனர் ஊர் மக்கள்.

– எம்.எஸ்.கே, மேலூர்.

● மதுரையில் சொந்தமாக ஒரு பைனான்ஸ் அலுவலகம் வைத்திருக்கும் என் நண்பர் ஒருவர், தன் அலுவலகத்தில் மாட்டி வைத்திருந்த வாசகம் சற்று எசகுபிசகாக இருக்கிறது. "இங்கு நீங்கள் தாராளமாகப் புகைப் பிடிக்கலாம். ஆனால் தயவு செய்து புகையை மட்டும் இங்கு வெளியே விடாதீர்கள்!"

– வி.ரா., மதுரை–1.

● ரஜினி முதல்வரானால்? மதுரையில் நிலவும் சில ஹேஷ்யங்கள்:

1. சினிமா உலகைச் சேர்ந்த எவரும் (ரஜினியைத் தவிர) அமைச்சரவையில் இருக்க மாட்டார்கள்.
2. எம்.எஸ். உதயமூர்த்தி, எம்.எஸ். சுவாமிநாதன் போன்ற அறிவு ஜீவிகளை அமைச்சரவைக்கு இழுக்க முயற்சிப்பார். இயலாவிடில் ஆலோசகர்களாக வைத்துக் கொள்வார்.
3. தன் மனைவி, உறவினர்களை அரசியல், ஆட்சி விஷயங்களில் தலையிடச் சற்றும் அனுமதிக்க மாட்டார்.
4. மாணவர்களின் படிப்பில் ஆன்மீகம் ஒரு முக்கிய இடம் பெறுமாறு பார்த்துக் கொள்வார்.
5. ஊழல் பேர்வழிகளைப் பக்கத்தில் அண்ட விடாமல், முடிந்த வரை, நேர்மையான ஆட்சியை நடத்த அந்தரங்க சுத்தியுடன் பாடுபடுவார்.

– எஸ். சீனிவாசன், மதுரை–10.

அணுகுண்டு இட்லி சாப்பிட்டதுண்டா?

● மதுரை டிஎம் கோர்ட் ஸ்டாப் அருகில் ஒரு இட்லிக் கடை இருந்தது. பெரிய அண்டாவில் மூங்கில் தட்டைப் பொருத்தி, அதில் மண் கலயங்களைப் பதித்து, அதன் மீது வெள்ளைத்துணி போட்டு, இட்லி மாவை அதில் ஊற்றி, மல்லிகைப் பூவாய், மிருதுவான இட்லி சுட்டு எடுத்து, மூன்று வகைச் சட்டினி + ஒரு சாம்பாருடன் மலிவாகக் கிடைக்கும் அந்த இட்லி. அது குண்டாக இருந்ததால் 'அணுகுண்டு இட்லி' என்பார்கள்! காமராஜருக்கு அந்த இட்லி மிகவும் பிடிக்கும். அவர் முதல்வரான பிறகும்கூட மதுரை வந்தால், விடுதியிலிருந்தே அந்த இட்லியையும், அம்சவல்லி பவன் கோழி குருமாவையும் வரவழைத்துச் சாப்பிடுவாராம்!

● மதுரையில் ஏராளமான அப்பளக் கம்பெனிகள் ஜாம் ஜாம் என்று நடைபெறுகின்றன. இந்தியா மட்டுமின்றி, வேறு பல நாடுகளுக்கும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. ஆனால் இந்த அப்பளங்கள் தயாராகும் முறையை அணுகிப் பார்த்தால் அதிர்ச்சிதான் ஏற்படுகிறது. பெரிய அப்பளக் கம்பெனிகளுக்கு, அப்பளம் தயாரித்துக் கொடுக்கும் ஏஜெண்டுகள் உள்ள



னர். அவர்கள் சிறு குழந்தைகளையும் பெண்களையும் காற்றோட்டமில்லாத அறையில் அல்லது கூடத்தில் வைத்தே அப்பளம் போட்டுத் தரச் செய்கின்றனர். காலை முதல் இரவு வரை போட்டுத் தரும் அப்பளத்தை எடை போட்டு அதற்காக ஊதியம் தரும்போது தான் அதிர்ச்சி ஏற்படுகிறது!

கிலோ ஒன்றுக்கு ஊதியம் என் பதை விட்டு வீசை ஒன்றுக்கு கூலி எனத் தருகிறார்கள். ஒரு வீசை என்பது 1400 கிராம்!

– இரா. கல்யாணசுந்தரம், மதுரை.

• பத்தாவது படித்துக் கொண்டிருந்தபோது பள்ளியில் ஒரு விழா. 'எல்லோரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்' என்று கூறியும் பெரும்பாலானோர் (நான் உட்பட) 'கட்' அடித்து விட்டு சினிமா சென்று விட்டோம். மறுநாள் எங்கள் வகுப்பு ஆசிரியர், "நேத்து விழாவுல நெறைய டெஸ்க், நாற்காலி உடைஞ்சு போச்சு. விழாவுக்கு வந்த எல்லோருக்கும் நூறு ரூபாய் ஃபைன் போட்டுள்ளோம். அதனால நேத்து விழாவுக்கு வந்த எல்லோரும் மரியாதையா எழுந்து வாங்க" என்று மிரட்ட, விழாவுக்கு வந்த எல்லோரும் பயந்து கொண்டே வெளியில் எழுந்து சென்றனர். விழாவுக்கு வராத நாங்கள், சந்தோஷமாக உள்ளே அமர்ந்திருக்க, வகுப்பு ஆசிரியர் மெதுவாகக் கதவைச் சாத்தினார்.


"ஏண்டா! விழாவுக்கு வாங்கன்னா வராம, எங்கடா போனீங்க?" என்று கத்தியபடி அடித்தாரே, அடி எல்லோரையும்! இப்போது நினைத்தாலும் வலிக்கிறது.

–மு. பாலமுருகன், மேல்மங்கலம்.

• மதுரை கட்ட பொம்மன் சிலையருகே காவல துறையின் விளம்பரப் பலகையொன்று பெரிய வடிவில் உள்ளது. அதில் வாகன விபத்துக்கள், உயிரிழந்தோர் பற்றிய புள்ளி விவரங்கள் இருந்தன. கடந்த ஆண்டு கலைஞர் கருணாநிதி மதுரை வந்ததையொட்டி அதில் பெரிய பெரிய போஸ்டர்களை ஒட்டினார்கள் கட்சிக்காரர்கள். அதன் பிறகு தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, ஜெயலலிதாவைப் புகழ்ந்து அவரது கட்சிக்காரர்கள் போஸ்டர் ஒட்டினர். சில மாதங்களில் 'வை.கோ' வைப் புகழ்ந்து போஸ்டர்கள். இப்போது அந்தப் பிரம்மாண்ட போர்டு அளவுக்கு ஜெயலலிதாவின் படமும், புகழாஞ்சலியும் கொண்ட ஆயில் பெயிண்டிங் ஒன்றை ஆளும் கட்சிக்காரர்கள் அதில் மாட்டி, போர்டை ஒரே அமுக்காய் அமுக்கி விட்டார்கள்!

• மதுரை வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் மிகப் பெரியதாகவும் அழகாகவும் உள்ளது. அதில் மண் மேவியுள்ளதாலும் தண்ணீர் கசிவதாலும் நீர் நிலைத்து நிற்பதில்லை. தை மாதம் நடக்கும் தெப்பத் திருவிழாவுக்குப் பல லட்சம் செலவில் தண்ணீரைத் தேக்குவார்கள். அடுத்த மாதமே தண்ணீர் காணாமல் போய்விடும். இப்போது அந்தத் தெப்பக் குளத்தின் கதி என்ன தெரியுமா? பகலில் விளையாட்டு மைதானம். இரவில் காதலர்கள் வந்து பேசி, இணைந்து செல்லும் ஸ்பாட். அத்துடன் சமூக விரோதச் செயல்கள் என்னென்ன உண்டோ, அத்தனைக்கும் ஏற்ற இடம்! டூரிஸ்ட்டுகள் வந்து போகும் இந்தத் தெப்பக்குளம் தேறுமா?

– க. முத்தம்மாள், மதுரை.



மதுரை துணுக்குகள் இந்த இதழுடன் நிறைவடைகின்றன.

சிறப்புப் பரிசு ரூ. 100/-

பெரும் துணுக்காளர்

மு. பாலமுருகன், மேல்மங்கலம்.

(விழாவுக்கு வராதவர்கள்).

வையவன்

சில முகங்களைப் பார்த்ததும் சௌந்தரபாண்டியின் மனசில் ஒரு சந்திரோதயம் நேரும். ஒரு குளிர்ச்சியான பரிபூரணம் நிலவும். வத்சலாவின் முகம் அவற்றில் ஒன்று.

வாய் விட்டு அவளிடமே சொல்லி வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறான் அவன்.

"தத்... நீ ஒரு காலாவதியான கவிஞன்!"

"என்ன செய்யலாம்? காதலிக் கிறவன் கவிஞனாகித் தொலைய வேண்டி இருக்கிறது."

"பேட்டை வஸ்தாத் மாதிரி ஒரு மீசை. 'பாடி பில்டர்' மாதிரி உடம்பு. இதிலே காதல் வேறு. அதுவும் கோழிக் குஞ்சு மாதிரி இருக்கிற கோகிலாவை?"

"வத்சலா... ஒனக்குப் பொறாமை!"

"த பாரு! இந்தக் காதல் கத்திரிக்காயிலே எனக்கு நம்பிக்கை போயி ரொம்ப காலம் ஆயிடுச்சி."

நர்ஸிங்ஹோம் கட்டிலில் பத்து நாள் தாடியோடு முதுகு நிமிர்த்திக் கால் நீட்டிப் படுத்திருந்தான் சௌந்தரபாண்டி. வத்சலா உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் எல்லாம் நினைவுக்கு வந்தன.

இன்றும் அவன் மனசில் சந்திரோதயம் நேர்ந்தது. என்ன வித்தியாசம்!

கனல் கக்கி எரிந்து அணைந்த எரிமலை ஒன்றின் சாம்பல் பாதையில் உதித்த மாதிரி சந்திரோதயம்.

அவர்கள் கண்கள் சந்தித்தன.

"ஹாய்" என்று ஒன்றுமே நேராதது போல் ஒரு வருத்தமான சிரிப்புடன் ஒரு சின்ன ஹாய் போட்டு அவன் உள்ளே வந்தான்.

அவன் பக்கத்தில் ஸ்டூலில் அமர்ந்திருந்த அப்பா பட்டாபிராமன் மூக்குக் கண்ணாடியைப் பின்னால் தள்ளிவிட்டுக் கொண்டு இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"வத்சலா. எங்க கிளாஸ்மேட்.. இது எங்க அப்பா."

அவன் புன்னகையோடு கைகூப்பினான்.

அவர் வேண்டாவெறுப்பாக பதிலுக்குக் கைகூப்பினார்.

ஜிப்பாவும் பைஜாமாவும் இருபுறமும் வழுக்கை ஓடிய நெற்றியும் தீட்சண்ணியமான பார்வையும் அவர் ஒரு மேதை என்ற உண்மையை வத்சலாவுக்கு உணர்த்தின.

''கோகிலாவுடைய ஃபாதர் வெளியே



திக்கறாரு" அவரை ஒருமுறை பார்த்து விட்டு சௌந்தரபாண்டியிடம் அனுமதி வேண்டுவது போல் கேட்டாள்.

''வரச் சொல்லுங்க'' பட்டாபிராமன் பதிலளித்தார்.

"செய்யலாமா?" என்று இசைவு கோருவது போல் அவன் கண்களைப் பார்த்தாள் வத்சலா.

அவனுக்குத் தொண்டை அடைத்தது. சின்னதாகத் தலையாட்டினான்.

அவள் திரும்பி வெளியே போனாள்.

அவன் கீழுதட்டைக் கடித்துக் கொண்டு இரண்டு முழங்கால்களிலும் முட்டுக் கொடுத்த கைகளால் தலையைப் பிடித்துக் கொண்டான்.

அவன் மனதில் சூறாவளி பிறக்கத் தொடங்கி விட்டது. பட்டாபிராமன் புரிந்து கொண்டார். எழுந்து அவனது பரந்த முதுகின் மேல் இரண்டு கைகளையும் வைத்தார். மிக மிக லேசாகத் தட்டிக் கொடுத்தார்.

"நான் வேணும்னா அவங்களை வெளியே அழைச்சுட்டுப் போயிரட்டுமா?"

அவன் பதிலளிக்கவில்லை. வேண்டாம் என்று தடுப்பது போல் தலையை அவர் கண்களைப் பார்க்காமல் அசைத்தான்.

அவர் ஷெல்பின் மேல் வைத்திருந்த மாத்திரைப் புட்டியைத் திறந்து ஒரு மாத்திரை எடுத்தார்.

'ஜக்'கிலிருந்து ஒரு தம்ளரில் சிறிது தண்ணீரை ஊற்றி இரண்டையும் அவனிடம் நீட்டினார்.

அவன் மாத்திரையை வாங்கி வாயில் போட்டுத் தண்ணீரை விழுங்கவும் அவர்கள் திரும்பி வரவும் சரியாக இருந்தது.

தலை திருப்பி வத்சலாவோடு வந்தவரைப் பார்த்தான். குள்ளம். விவசாயி என்று தெரிவிக்கிற உடல்வாகு. முகத்தில் கிராமீயம்.

முக்கால் கைச் சட்டை. தோளில் துண்டு. முகத்தில் வேதாந்தி போல் ஒரு நிர்ச்சலனமான பாவம்.

"ஐயா வணக்கம். நீங்க?"

"பட்டாபிராமன். சௌந்தரபாண்டியின் அப்பா."

"நான்தான் கோகிலாவுடைய தகப்பனார். முத்துமாணிக்கம்."

அவர் திரும்பி சௌந்தரபாண்டியைப் பார்த்தார். ஒரு சில விநாடிகள். அதன்பின் அது எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்று கண்டுபிடிக்க முடியாத வேகத்தில் சட்டென்று முத்துமாணிக்கம் சௌந்தரபாண்டியைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

பட்டாபிராமனுக்கு நம்ப முடியாத ஏதோ கண்ணெதிரில் நடப்பது போல் ஒரு பிரமிப்பு.

வத்சலாவின் வயிற்றிலிருந்து நெஞ்சுக் குழிக்கு உருண்டையாக ஏதோ ஒன்று உந்தி வந்து தொண்டை அடைத்தது.

உணர்ச்சிகளை எல்லாம் விலகி நின்று வேடிக்கை பார்க்கிற அறிவுக் கூர்மை எங்கே போயிற்று? இதென்னது நானும் ஒரு சராசரி மாதிரி...!

அவன் கட்டுப்படுத்த முயன்றாலும் கண் மீது ஒரு திரை படலமிட்டது. முத்துமாணிக்கத்தின் கண்களிலிருந்து வயது மீறிய ஒரு கிராமத்து வெளிப்படை போல் மாலை மாலையாக நீர் உருண்டது.

''அந்தப் புண்ணியவதி தலையெழுத்து அவ்வளவுதான். அதுக்காக நீங்க இப்படிச் செஞ்சிடலாமா?''

முத்துமாணிக்கம் வாயில் துண்டைப் புதைத்து விம்மலை அடக்கிக் கொண்டே பேசினார்.

ஓரிரு நிமிடங்கள், நாலு பேர் இருந்த அந்த அறையில் ஜன்னல் கதவுக்குப் போட்டிருந்த கொக்கிகள் காற்றினால் சப்திக்கும் ஒலி மட்டும் விட்டு விட்டுக் கேட்டது.

அந்த நேரமே எவ்வளவோ நினைவுகள் புரள, வத்சலாவுக்குப் போதுமானதாயிருந்தது.

ஒரு கார்த்திகை தீபத்துக்கு கல்லூரி ஹாஸ்டலில் விளக்கேற்ற கோகிலா நிறைய அகல் வாங்கி வந்திருந்தாள்.

''ரெண்டு அகலை 'ஸ்பேர்' பண்ணி வையேண்டி கோகி!''

"எதுக்கு... அடுத்த வருஷத்துக்கா?"

"இல்லே.. நீ ஒரு அகலை ஏத்து. உன்னுடைய பேட்டை பிஸ்தா ஒரு அகலை ஏத்தட்டும்."

''நீங்க எல்லாம் கும்பலா நின்னு கைத்தட்டுவீங்களா?''

"அப்படி ஒரு ஆடியன்ஸ் வேணும்னா சொல்லு. ஜமாய்ச்சுடலாம்."

''ஷட் அப்! ஆமா... நீ என்ன சொன்னே?''

"எது?"

தீபம் ஒன்று



''மசால் ரோஸ்ட் என்ன விலைப்பா?''

''உங்க டேபிள் சர்வர் வருவார். அவர்கிட்ட கேட்டுக்கங்க சார்!''

- ஞா. ஞானமூர்த்து

"சௌந்தரபாண்டியைப் பத்தி."

"ஏன் இன்னொரு தடவை என் வாயாலே கேக்கணுமோ!"

''பேட்டை பிஸ்தர்வாமே பேட்டை பிஸ்தா...''

''ஹை... என்ன ரோஷம் வருதுப்பா ஒனக்கு!''

"சௌந்தரபாண்டி ரொம்ப மாறியாச்சு."

"கோகிலாம்பிகை கைங்கரியமோ?"

"என்னமோ அவனுக்குப் புரிஞ்சுட்டது. அந்த ஒடம்பில இருக்கிற எல்லா வயலன்ஸுக்கும் முரட்டுத்தனத்துக்கும் மத்தியிலே கண்ணாடிக் குடுவை மாதிரி ஒரு மனசு."

கோகிலாவின் பிரியம் சௌந்தரபாண்டியைக் கண்ணியமுள்ள கனவானாக மாற்றி வருவதை அணுஅணுவாகக் கவனித்தவள் வத்சலா.

அதனால் எல்லாம் புதியதாக காதல் என்ற வஸ்துவின் மீது அவளுக்குப் புது நம்பிக்கை வந்து விடவில்லை.

மயக்கம். அசட்டுத்தனம். இதுதான் அவள் தீர்வு.

எனினும் ஒரு கோரமான ரயில் விபத்தில் மாண்டு விட்ட கோகிலாவின் நினைவுச் சுமை தாள முடியாமல் தூக்க மாத்திரைகள் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயலும் அளவு அதற்கு ஒரு வலிமை இருக்கும் என்பதை அதுவரை வத்சலா கண்கூடாகக் கண்டதே இல்லை.

அதுவும் சௌந்தரபாண்டி!

"வாட் த ஹெல் இஸ் ராங் வித் திஸ் யங்கர் ஜெனரேஷன்" என்றுதான் புரொபசர் ராமு அதிர்ந்து போய்க் கத்தினார். நல்ல வேளை. காப்பாற்றி விட்டார்கள்.

மயக்கம் திரும்பாத நிலையில் ஒருநாள் வந்துவிட்டுப் போனாள் வத்சலா. அடிக்கடி போய்ப் பார்க்க மனசு துடித்தது. எனினும் தவிர்த்தாள்.

'மனசு நொறுங்கி விட்ட மனிதனை சாட்சியமாக நின்றவள் சந்திப்பது எப்படி' என்ற தயக்கம்தான்.

"ஐயா வாங்க! கொஞ்சம் போய் வெளியே ஒலாத்திட்டு வருவோம். நீங்க இருக்கிற நெலையிலே சௌந்தரபாண்டி மனசு இன்னும் சங்கடப்படும்."

பட்டாபிராமன் முத்துமாணிக்கத்தின் தோளைத் தொட்டார்.

"ம்ம்... வாங்க வாங்க..."

முன்னால் அவர் நடக்க, முத்துமாணிக்கம் பின்தொடர்ந்தார்.

அறையில் கொக்கிகள் மீண்டும் கிறீச்சிட்டன. மின்விசிறியின் ஓசையும் துல்லியமாய்க் கேட்டது.

"உட்கார்" என்றான் சௌந்தரபாண்டி.

வத்சலா ஸ்டூலில் அமர்ந்தாள்.

எங்கே சௌந்தரபாண்டி தன் எதிரில் குமுறி விடுவானோ என்ற கலக்கம் அவளுள் முளைத்தது.

அவன் முழங்கால்களின் மீது முகம் கவிழ்த்துக் கொண்டான்.

அவள் தொண்டையைச் செருமி விட்டு பேச ஆயத்தம் செய்து கொண்டாள்.

"இதெல்லாம் என்ன பாண்டி?"

அவன் தலைநிமிரவில்லை.

"அப்ஸொல்யூட் நான்சென்ஸ்!"

அவள் குரல் உயர்ந்தது. பள்ளி ஆசிரியை போல.

அவனது கவிழ்ந்த தலையையே பார்த்தாள் வத்சலா. தான் குரல் உயர்த்தியதற்கு அவளுக்கே வெட்கமாக வந்தது.

"ஸாரி... பாண்டி! உங்கிட்டே இதை நான் எதிர்பார்க்கலே."

அவனிடமிருந்து பதில் இல்லை.

"காலேஜை விட்டுப் போறதுக்கு டீஸி கேட்டு அப்ளிகேஷன் கொடுத்திருக்கியாமே!"

"........"

"நடந்தது ஒரு விபத்து. நூத்துக்கணக்கிலே ஜனம் போயிருக்கு. கோகிலா என்ன பெரிய கோகிலா!"

வத்சலாவுக்கு சௌந்தரபாண்டியிடம் அபாரமான உரிமை உண்டு. எதையும் பேசலாம். எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம்.

"இதுதான் உன்னையும் உன் காதலையும் நிரூபிக்கிற லட்சணமா?"

சௌந்தரபாண்டி தலையை நிமிர்த்தி ஒரு கைநீட்டி, போதுமென்று காட்டினான்.

அவள் தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள். மீண்டும் ஸாரி சொன்னாள்.

பிறகு ஸ்டூலில் இருந்து எழுந்து குப்பையாகக் கட்டில் மூலையில் குவிந்திருந்த போர்வையை உதறி நான்காக மடித்துக் கால் பக்கம்




"கதை நல்லாத்தான் இருக்கு. கடைசி காட்சியில் கதாநாயகன் குடும்பத்தோடு மத்தாப்பு கொளுத்தற காட்சியை லஷ்மி வெடி வெடிக்கிறதா மாத்திடலாம்!"

"ஏன்?"

"தியேட்டரில் தூங்கிக்கிட்டிருக்கிற வங்க எழுந்து வீட்டுக்குப் போகச் சௌகரியமாயிருக்கும்!"

- ஞா. ஞானமுத்து



போட்டான்.

"என்னிக்கு டிஸ்சார்ஜ்?"

"நாளைக்கு."

"நேரே ஊருக்கா?"

கவிழ்ந்திருந்த அவன் தலை அசைந்தது.

"எப்ப திரும்பி வருவே?"

அவன் பதிலளிக்கவில்லை.

"பாம்பே போறியாமே!"

"......................"

அவள் மீண்டும் ஸ்டூலுக்கு வந்தாள். பெரு மூச்சு விட்டாள்.

"கோகிலாகிட்டே நான் எப்பவும் கமெண்ட் அடிச்சுக்கிட்டிருப்பேன். நிஜமாக் கிட்டே."

அவன் நிமிர்ந்து ஜன்னலுக்கு வெளியே முகத்தைத் திருப்பினான். என்ன, ஏது என்று விசாரிக்கவில்லை.

"கோகிலா, நீ சௌந்தரபாண்டியைக் கோழையாக்கிட்டே. காதல், கோழைகள் சமாசாரம்னு தோணுதும்பேன். அவ பதிலுக்குச் சொல்வா - அது கோழைகள் சமாசாரமோ கோழைகளை மேலும் கோழையாக்குகிற சமாச்சாரமோ இல்லேம்பா..."

சௌந்தரபாண்டி முகம் திருப்பி வத்சலாவை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்தான்.

"வந்தாரே கோகிலாவுடைய அப்பா! விஷயம் கேள்விப்பட்டதும் பதறிப் போய்ட்டாரு. ஏதோ பண்ணத்தகாத குற்றத்தைத்தான் பண்ணிட்ட மாதிரி ஆடிப் போய்ட்டாரு."

சௌந்தரபாண்டி கண்ணைக் கவிழ்த்துக் கொண்டான்.

"அவரு ஒன்னை 'கன்ஸோல்' பண்ண வரலே. பொண்ணு போனது அவருக்கே பெரிய சூன்யம்."

அவன் மௌனமாகவே இருந்தான்.

"உயிரை மாய்க்கிற அளவு ஓவரா தன் பொண்ணு மேல மனசு வச்சுருக்கிறானே ஒருத்தன்னு உருகிப் போயி வந்திருக்கிறார்."

காற்று வெளியே வேகமாக வீசியதால் கொக்கி மாட்டத் தவறியிருந்த கடைசி ஜன்னல் கதவு படாரென்று அறைந்து மூடிக் கொண்டது.

வத்சலா எழுந்து போய் அந்தக் கதவைத் திறந்து கொக்கியை மாட்டினாள்.

திரும்பி வந்து ஸ்டூலில் உட்கார்ந்தாள்.

"விரக்திக்குப் பதிலடி விரக்தி இல்லே. தப்பி ஓடி ஒளிஞ்சுக்கிறதும் இல்லே. இது கோகிலா மாதிரி ஒரு பொண்ணுக்குத் தர்ற கௌரவம் இல்லே."

ஆறுதல் தரவோ, பார்த்துப் போகவோ வந்தவள் இப்படி இரக்கமின்றி நடந்து கொள்வது பற்றி எந்தச் சலனமும் காட்டாது அவன் அமைதியாக இருந்தான்.

வத்சலா ஒன்றும் பேசாமல் நினைவுகளில் மூழ்கினாள்.

கார்த்திகை விளக்குகளை ஒவ்வொன்றாகக் கோகிலா ஒரு அகலைப் பிடித்துக் கொண்டே ஏற்றிச் சென்றதும், பின்னாலேயே வந்து தான் ஊதி அணைத்ததும் "உனக்கு ஒரு வக்கிரபுத்தி." என்று செல்லமாகக் கடிந்து கொண்டே சிறிது கூடப் பொறுமை இழக்காமல் அவள் மீண்டும் அகல் கொண்டு ஏற்றியதும் நினைவில் வந்து மறைந்தன.

வெளியே போனவர்கள் திரும்ப வெகு நேரமாகி விட்டது. முத்துமாணிக்கம் சௌந்தரபாண்டியைப் பார்த்துக் கைகூப்பி விடைபெற்றார்.

அவளையறியாமல் பட்டாபிராமனின் கைகளும் உயர்ந்ததை வத்சலா கவனித்தாள்.

"ஸாரி" என்று மெதுவாகச் சொன்னது போல் சௌந்தரபாண்டியன் வருத்தமாய்ச் சிரித்தான்.

முத்துமாணிக்கத்தைப் பஸ் ஏற்றி விட்டு, ஹாஸ்டல் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு தலையணையில் வாய் புதைத்து வெகுநேரம் வத்சலா கதறிக் கதறி அழுதாள். கோகிலாவுக்கா, சௌந்தரபாண்டிக்கா... இல்லை தனக்கேவா என்று அவளாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

அட்டை வண்ணப்படம்: ராஜூ நாராயண்
நடிப்பு: பொற்கொடி, சுப்ரியா

என்னுயிரும் நீயல்லவோ

28

அந்த வட இந்தியனின் மனைவி அரை மணி நேரத்தில் நாற்பது சப்பாத்தி செய்தாள். தணலில் வாட்டி எடுத்துக் கொண்டாள். வெங்காயமும் காய்கறியும் கணவன் அரிந்து தர, சப்பாத்தி செய்யும் போதே சப்ஜியும் செய்து கொண்டாள்.

"சகோதரா வா. நீயும் கொஞ்சம் எடுத்துக் கொள்" என்று பரிமாறினாள். அவர்கள் இருவரும் சாப்பிட்டுக் கொண்டே காப்பித் தோட்டம் பற்றிப் பேசினார்கள். மறு நாளே காப்பித் தோட்டம் கூட்டிப் போவதாகக் கதிரேசன் சொன்னான். தனக்கு காப்பித் தோட்டம் இருப்பதாகச் சொல்லாமல் வட இந்தியனைப் பற்றிய எல்லா விஷயமும் தெரிந்து கொண்டான்.

இந்தியாவின் விரல் விட்டு எண்ணக் கூடிய பணக்காரக் குடும்பங்களில் அந்த வட இந்தியனின் குடும்பமும் ஒன்று. அவனுக்கு இருபது வயதில் திருமணம் செய்து வைத்து, 'தனியே வியாபாரம் செய்' என்று இருபத்தி மூன்று வயதில் துரத்தியுள்ளார்கள். அவன் ஜாதி சனத்தின் போட்டி வட இந்தியாவில் அதிகம் என்பதால் அவன் தென்னிந்தியாவை நோக்கிப் படையெடுத்து இருக்கிறான். இந்தியப் பொருளாதாரம் படித்து, கரைத்துக் குடித்தவன் போல் பேசினான்.

"இந்தியாவில் ஒரு பொருள் விலை ஏறினால் மறுபடி விலை குறைவது என்பதே இல்லை. சதாம் உசேன் போட்ட சண்டையால் பெட்ரோல் விலை உலகம் எங்கும் ஏறியது. சண்டை நின்ற பிறகு எல்லா நாடுகளும் விலை குறைத்தன. இந்தியாவில் இன்னும் விலை அதிகமாகியது. அதே போல் காப்பிக் கொட்டை விலை குறையாது. நிலத்தின் விலை இதை விட அதிகமாக ஏறுவதற்கு முன் எனக்கு சீதனமாகக் கிடைத்த பணத்தில் காப்பித் தோட்டம் வாங்கப் போகிறேன். வேலை தெரிந்தவருக்குக் கூலி கொடுத்து, விவசாயம் செய்யப் போகிறேன். பம்பாயிலிருந்து சென்னை; சென்னையிலிருந்து மதுரை; மதுரையிலிருந்து கார் மூலம் போடி நாயக்கனூர், அரை நாளில் வந்து விடலாம்."

மறுநாள் நாராயணனை, கதிரேசன் மெள்ள உலுக்கி எழுப்பினான். மலைக்குப் போய் அவன் மனைவியை அனுப்புவதாகச் சொன்னான். தலையணைக்கு கீழ், செலவுக்கு ஆயிரம் ரூபாய் வைத்தான்.

"தம்பி; ராத்திரி முழுக்க தூக்கமேயில்லீங்க. கெட்ட, கெட்ட கனவா வந்தது. நான் விநாயகத்தைக் கொன்னது இந்நேரம் போலீஸுக்குத் தெரிஞ்சுருக்குமா!"

"தெரிஞ்சுருக்காது. எந்தப் போலீஸ் அந்தப் பள்ளத்துக்குள்ள இறங்கும்? இறங்கினாலும் இந்த நேரத்துக்கு என்ன தெரியும்? அப்படியே கண்டு புடிச்சாலும், நான் இருக்கிற வரைக்கும் உன்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது நாராயணா! அப்படியே போலீஸ் இங்க வந்து உன்னைக் கேட்டாலும் நான்தான் வெட்டினேன்னு சொல்லு. மிச்சத்தை கோர்ட்ல பாத்துக்கலாம்!"

"முதலாளி" நாக்கு தழுதழுக்க நாராயணன் கதிரேசன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"என் ஏலக்காய் தோட்டத்தை உன் தோட்டம் மாதிரி நீ கவனிச்சுட்டு வந்த. எங்கப்பா உனக்கு என்ன பண்ணார்னு தெரியாது. அவரு உனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சது உனக்குப் பெரிய விஷயமாயிருக்கலாம். வேற ஜாதிப் பொண்ணைக் கல்யாணம் பண்ணி, குறைஞ்சாப் போயிட்ட? அதே மாதிரி, நான் கல்யாணம் பண்ணா தப்பாயிடுமா? காப்பித் தோட்டத்தை விக்கப் போறேன். வித்து, ஏலத் தோட்டம் வாங்கப் போறேன். எங்கப்பா வாங்கணும்னு ஆசைப்பட்ட எஸ்டேட் வாங்கற போது நீ கூட இருக்கணும். நீதான் வேலி பிரிக்கணும். நீதான் எல்லா எஸ்டேட்டையும் ஒண்ணாக்கி கவனிக்கணும்.

"நான் வேற இடத்துல அகலமா, ஆபீஸோட, வீடு கட்டப் போறேன். எனக்குக் கட்ற போது உன் வீட்டையும் பெரிசு பண்ணித் தரேன். வீடு சுத்தியிருக்கிற தோட்டத்தையும் இறக்கத்துல இருக்கிற ஏலக்காய் எஸ்டேட்டையும் உனக்கு எழுதித் தரேன். என் எஸ்டேட், உன் எஸ்டேட். உடம்பு பாத்துகிட்டு வா. டாக்டருக்குக் காசு கொடுக்காத. இது என் செலவு. உங்க வீட்டுக்காரம்மாவை வாடகைக் காரில் அனுப்பி வைக்கிறேன். ரெண்டு நாள் இருக்கட்டும். நீ மேஸ்திரி மாதிரியிருக்காத. முதலாளி மாதிரி இரு. என்னைக் கதிரேசான்னு கூப்பிடு."

யார் தொந்தரவாக நினைத்தானோ, கதிரேசன், அந்த மனுஷனை அன்பினால் திணற

பாலகுமாரன்

அடித்தான். 'வினாயகத்தின் கொலையைப் பற்றிப் பேசினால் போதும். நாராயணன் எதிர்ப்பே காட்டமாட்டான்' என்று கதிரேசனுக்குத் தெரிந்து போயிற்று.

"இதுதான் காப்பிச் செடியா, இதுதான் காப்பிப் பழமா, இதுதான் காப்பிக் கொட்டையா" வட இந்தியன் வியந்து கொண்டே வரும் போது 'இந்த எஸ்டேட் ஓனர் யார்' என்று அவன் மனைவி கேட்க, நான்தான் என்று கதிரேசன் கைகட்டிச் சொல்ல, புருஷனும் மனைவியும் புலியைப் பார்த்தது போல் பயந்து நின்றார்கள்.

"உண்மையாகவா?"

"ஆம். சமீபத்தில் தான் வாங்கினேன்!"

"ஏன் விற்கிறீர்கள்?"

"வாங்கியதே விற்பதற்குத்தான்."

"ஏன், காப்பி விவசாயம் செய்தால் என்ன?"

"ஏலம் அனேகமாய் எங்கள் குலத் தொழில். அதை விஸ்தரிப்பதே என் நோக்கம்."

"என்ன விலை சொல்லுகிறாய்?"

"இன்று மார்க்கெட் ரேட் என்னவோ அது!"

"எப்படித் தொகை எதிர்பார்க்கிறாய்?"

"பாதி வெள்ளை, பாதி கறுப்பு."

"எப்போது ரிஜிஸ்ட்ரேஷன் வைத்துக் கொள்ளலாம்?"

"நீ எப்போது தயார் என்று சொல்லுகிறாயோ, அப்போது."

"என் மாமனாரை பம்பாயிலிருந்து வரவழைக்க வேண்டும்."

"என் எஸ்டேட்டுக்கு வா."

சொர்ணலட்சுமியைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண் என்று அறிமுகப்படுத்திய கதிரேசன், பகவதியைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டான். பகவதி மனம் நொந்தாள். செண்பக மரத்து நிழலில் போய் பாய் விரித்துப் படுத்துக் கொண்டாள். அவள் நகர்ந்த ஐந்தாவது நிமிடம் சொர்ணலட்சுமி சமயலறையை ஆக்கிரமித்துக் கொண்டாள்.

தட்டுத் தடுமாறி ஆங்கிலத்தில் என்ன வித சமையல் பிடிக்கும் என்று கேட்டாள். வியாபாரத்துக்குப் புதியவனான அந்தப் பனியா, உபசாரத்தில் மனம் நெகிழ்ந்தான்.

மறுநாள் பம்பாயிலிருந்து மாமனார், மைத்துனர், மேனேஜர் என்று ஆட்கள் வர, பள்ளிக்கூட வாத்தியார் ஆறுமுகத்தின் மனைவி ஜெயந்தியும் துணைக்கு வந்தாள்.

காசு கைமாறியது. பத்திரம் பதிவாகியது.

புள்ளையார் கோவிலை இடிக்க வேண்டாம் என்று பத்திரத்திலேயே ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டது.

"நான் பம்பாய்க்காரன்! பிள்ளையார் கோவிலை இடிப்பேனா? சலவைக் கல்லில் கோவில் கட்டுவேன். அது உன் கோவில், என் கோவில் அல்ல. இந்த ஊர் மக்களின் கோவில்."

அவன் வாங்கிய மூன்றாம் நாள் காப்பி விலை மறுபடியும் ஏறியது. எந்தக் காப்பித் தோட்டமும் விற்பனைக்கு இல்லை என்பதாய்ப் பேசப்பட்டது.

ஏலத் தோட்டத்தில் தனியே உலவிக் கொண்டிருந்த பகவதியைத் தடுத்து அழைத்துக் கொண்டு வந்து கதிரேசன் காசோலையும் கரன்சி கத்தையும் காட்டினான்.


"சொர்ணலட்சுமியைக் கூட்டிகிணு மதுரைக்குப் போறேன்; அம்மாகிட்ட பேசப் போறேன். நீங்களும் வர்றதாயிருந்தா வாங்க. நான் உங்களை அவமானப்படுத்தலை. அன்னியப்படுத்தலை. இந்த வீடு, இந்த எஸ்டேட் எல்லாம் உங்களது. ஆனால், ஒரு எஸ்டேட்டுக்கு மூணு முதலாளி இருக்க முடியாது. ஒத்தை ஆளா வண்டி ஓட்டினாத்தான் குடைசாயாமயிருக்கும். எப்போ மலைதான் வாழ்க்கைன்னு ஆகிப் போச்சோ, அப்ப உடனே கல்யாணம் கட்டறதுதான் உத்தமம். அம்மா பாத்து நூறு பவுனோட ஒரு பொண்ணு கட்டி, மதுரையில வாழணும்னு தான் சொல்லும். மலைன்னு சொன்னாலே மயக்கம் வருதுன்னு நடிக்கும். அதனாலதான் மலை புடிச்ச பொண்ணா, என் மனசுக்குப் புடிச்ச பொண்ணா இவளைத் தேர்ந்தெடுத்தேன். இத்தினி காசு காட்டியும் கல்யாண விஷயத்தில நான் தப்பு பண்ணிட்டதா எல்லாரும் மூஞ்சியைத் தூக்குவாங்க! எனக்குத் தெரியும்! இந்தக் காசு காட்டலைன்னா என்னைக் கடிச்சுக் குதறி வாங்க! அதுவும் எனக்குத் தெரியும்! நீங்க வந்த வேளை, அப்பா ஏலக்காய் எஸ்டேட் பெரிசு பண்ணார். சொர்ணலட்சுமி வந்த வேளை இந்த ஏலக்காய் எஸ்டேட், பிரம்மாண்டமா ஆகப் போறது."



"நான் மதுரையில் வீடு வாங்கப் போறேன். நீங்க அங்கப் போய் இருக்கலாம்! அல்லது இங்கேயே இருக்கலாம். எனக்கும், சொர்ணலட்சுமிக்கும் தனியா வீடு கட்டப் போறேன். உங்களை ஏத்துக்கிட்ட அம்மா, சொர்ணலட்சுமியை ஏத்துக்க மாட்டாங்க! அதனால சொர்ணலட்சுமி தனக்குன்னு ஒரு இடம் வைச்சுக்கிறது நல்லது. நான் அப்பா மாதிரி அப்பப்போ மதுரை போயிட்டு வருவேன். ஒரு

வித்தியாசம் - சொர்ணலட்சுமி என்னுடைய மனைவி. என்னுடைய ஒரே மனைவி. இன்னும் உங்களுக்குக் கோபம் போகலைன்னா என்னைத் திட்டுங்க. சொர்ணலட்சுமியை விட்டுறுங்க. புருஷனோட சொந்தக்காரங்களுக்குப் பொண்டாட்டி பயப்படும்படியிருந்தா அந்தப் பொண்டாட்டிக்கு புருஷன் மேல மதிப்பு வராது. மதிப்பு வரலைன்னா, அன்பு வராது. அன்பு வரலைன்னா, அது குடித்தனம் ஆகாது!

"என் பொண்டாட்டி எனக்கு பயந்தா போதும்! வேற யாருக்கும் அவ பயப்பட



வேணாம்! ஏன் எனக்குக் கூட அவ பயப்பட வேண்டிய அவசியம் இல்லை! பயப்படாத பொண்டாட்டிதான் உதவியாயிருக்க முடியும். புருஷன், பொண்டாட்டிக்குள்ள ஒத்துமையில் லைன்னா, தெருவில போறவன் தொடையில கை வைப்பான். எங்கப்பா இருந்த போது இந்த இடத்துக்கே வரப் பயந்தவனுங்க இப்ப எப்படி நடந்துகிட்டான் பாத்தீங்களா? பொம்பளை தனியாயிருந்தா மேல கை வைக்கலாம்னு நினைச்ச ஆம்பிளையைக் கூட மன்னிச்சுட லாம். நம்ம சோத்தைத் தின்னுட்டு, நம்ம மேல எகிறுர நாயை நாம உயிரோட விட்டு வைக்கக் கூடாது! இது உங்கிட்டயிருந்து வினாயகம் எடுத்துனு போன நகை. வினாயகம் மறுபடி வரமாட்டான். நீங்களும், நானும் அவனைச் சொர்க்கத்துலயோ, நரகத்துலயோ, இந்த ரெண்டுத்துக்கும் போற வழியிலதான் பார்ப் போம்.

"என்ன சின்னம்மா பாக்கறீங்க? ஒரே வெட்டு! தலைவேற முண்டம் வேற போச்சு! வெட்டின கத்தியோ, வெட்டுப்பட்ட ஆளையோ கண்டு பிடிக்க முடியாது. எத்தினி தேடினாலும் கிடைக்காது.

"சின்னம்மா, நான் இப்ப ஜெயிச்சது வெறும் லக்! சின்ன கணக்கு, நிறைய அதிர்ஷ் டம். நான் ஜெயிச்சுட்டேன். ஆனா எனக்குத் தெரியும், இனிமேதான் எனக்கு சோதனை யிருக்கு. ஒரு தடவை ஜெயிச்சதோட வாழ்க்கை முடிஞ்சு போகலை. தொடர்ந்து ஜெயிக்கணும். என் தலையில கை வைச்சு, 'நல்லாயிரு கதி ரேசா'ன்னு சொல்லுங்க சின்னம்மா."

தன் வலது கையை பகவதி கதிரேசன் தலையில் வைத்தாள். 'நீ பிறந்த ஐந்தாவது வருடம் நான் உன் சிறிய தாய். உன் தந்தையின் வைப்பாட்டி என்று கூடத் தெரியாமல் என் கழுத்தைக் கட்டிப் பிடித்து தூங்கி, கன்னத்தில் முத்தமிட்டு, மடியில் உட்கார்ந்து, மார்பில் சாய்ந்து என் தாலிக் கொடியைப் பிடித்தபடி தூங்கியவன் நீ. எனக்கு வயிறு வளராது போனாலும் உன் வரவால் என் நெஞ்சு மலர்ந் தது. நானும் ஒரு அம்மா என்ற கர்வம் வந்தது. அந்த கர்வம் கொடுத்த சந்தோஷத்தால் உன்னை ஆசீர்வதிக்கிறேன். வெற்றிகள் ஆயிரம் பெற்று நீடூழி வாழ்வாயாக.' உள் ளிருந்து உணர்வு கிளப்பி அவன் தலைக்குள் இறக்கினாள்.

அவன் அந்தக் கருணை தாங்காமல் விசும்பி, விசும்பி அழத் துவங்கினான். அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து மதுரைக்கு அனுப்பி வைத்தாள். அவனோடு போகும் சொர்ணலட்சுமிக்கு ரெண்டு தங்க வளையல் போட்டான். கதிரேசன் இறங்கிப் போனதும் பயம் வந்தது. 'தனியாக இருக்கிறோம்' என்கிற எண்ணம் அவளுக்கு முதன் முதலாக ஏற் பட்டது.

தன் வெள்ளைத் துணிகளை ஆரஞ்சு நிற சாயத்தில் முக்கினாள். பிழிந்து வேலிகளில் உலரப் போட்டாள். வாசலில் உக்கிர பைரவி ஆஸ்ரமம் என்று எழுதினாள். வெகு நாளாய் வீட்டிலிருந்த ஒரு மாட்டு எலும்பு முகத்தை வாசலில் கொம்பு நட்டு மாட்டினாள்.

இது காப்பாற்றுமா? இது வீட்டைக் காப் பாற்றும். தன்னைக் காப்பாற்ற கண்மூடி தியா னத்தில் உட்கார வேண்டும். உள்ளுக்குள் இருக் கிற உயிர்ச் சக்தியை உலுக்கி எழுப்பி, தன் னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். 'வாடி' என்று எவனுமே தன்னை இழுக்கக் கூடாது. தன்னைப் பார்த்தால் அப்படி இழுக்கிற எண் ணமே வரக்கூடாது. பகவதி கிழக்கு திசை பார்த்து கண்மூடி அமர்ந்து கொண்டாள்.

"பகவதி நின்னு நடத்தி வைச்சாளா கல் யாணத்தை?" ஆச்சி சீறினாள்.

"இல்லை. இவ தலைமுடியைப் பிடித்து இழுத்து அடிச்சு வெளியே போடின்னு சொன் னாங்க."

"அப்படி இன்னாத்தை கண்டுட்ட இந்தப் பொண்ணுகிட்ட? என்னண்ட ஒரு வார்த்தை சொன்னா நான் முடிச்சிருக்க மாட்டேனா?"


"ஒரு கல்யாணத்துல ஆயிரம் உறவு, இருபது பங்காளி சுத்தி நின்னு இங்க வா, அங்க வான்னு கழுத்தை நெரிச்சுருப்பாங்க. இப்போ என் பொண்டாட்டியைத் தவிர வேற யாரும் உறவில்லை. இது ஒரு நிம்மதி. அவளைத் தொட்ட வேளை எனக்கு நல்ல காசு வந்தது."

"உன் தங்கச்சிக்கு கல்யாணம் ஆவ ணும்பா!"

"ஒரு மாசம் பொறுத்துக்க. ஏலக்காய் தோட் டம் மொத்தம் எத்தினி ஏக்கர் அப்படின்னு கணக்கு சொல்றேன். மதுரை - திருச்சி ரோடுல வீடு வாங்கிட்டு சொல்றேன். இன்னும் ரெண்டு வருஷம் பொறுத்துக்க. இப்ப இருக்கிற சொத்து மாதிரி இன்னும் ரெண்டு மடங்கு காட்டு றேன். சொத்து சேர்ந்தா தங்கச்சி கல்யாணம் தானா நடக்கும்."

"இனிமே மதுரைக்கு வரவே மாட்டியா?" ஆச்சி குரல் தழதழத்தது.

"இது என்னம்மா கேள்வி? உன்னை விட்டு நான் எங்கப் போவேன்! அப்பா மாதிரி மலைக் கும் மதுரைக்கும் ஓடிக்கிட்டுத்தான் இருப்பேன். இன்னா, மலையில கொஞ்ச நாள் அதிகமா தங்குவேன். தங்கச்சி கல்யாணம் முடிஞ்சதும் நீயும் மலைக்கு வந்துடு. பாத யாத்திரை வுட் டுறு. கோவில் கோவிலா சுத்தாதே. மலைக்கு வா, எங்க கூட இரு. இல்லை, பகவதியோட இரு. அப்பா ஒரு நாளும் பாதயாத்திரை போன தில்லை. ஆனா அடிக்கடி அமைதியா உட்



"ஸ்வீட்டெல்லாம் புதுசா?"
"இப்பத்தான் போட்டது சார்!"
"அடுக்கியிருக்கீங்களே... அதன் அழகே தனிதான் போங்க..."
"அம்மாவா.. இப்படி அடுக்கவே நாலு நாள் ஆச்சு சார்!"

— எம். அசோக்ராஜா

கார்த்துருவாங்க. அந்த வித்தை சின்னம்மா வுக்குப் புரிஞ்ச போச்சுன்னு நினைக்கிறேன். மலைக்கு வர்றியா?"

"அது அப்புறம் உண்டான கதை. எங்கி யாவது லாட்ஜ்ல வைச்சு தாலி கட்டாத. புள்ளையார் பட்டிக்குப் போயிடு. அப்படியே திருச்செந்தூர் போ. கன்னியாகுமரி காணி மடத்துக்குப் போய் கும்பிட்டுக்க. அப்புறம் உன் வேலையைக் கவனி."

"உனக்கு சம்மதமில்லையா?"

"நான் ஆளுக்கு தகுந்தாப்போல சொல்லிக் குவேன்! உன்கிட்ட சம்மதம் இன்னுவேன். அதெப்படின்னு வேற யாரும் கேட்டா, 'ஆமா எனக்கு புடிக்கலை'ன்னுவேன். எந்த தாயும் புள்ளை நல்லாயிருக்கணும்னுதான் நினைப்பா. நல்லாயிரு கதிரேசா. இந்தப் பொண்ணு வூட்டுக்கும் போ. அவங்க ரொம்ப அச்சப் பட்டா, என் கிட்ட வந்து பேசச் சொல்லு."

ஒரு பெரிய ஹாரமும், முத்துமாலையும் சொர்ணலட்சுமி கையில் போட்டாள்.

அவர்கள் ஊரெல்லாம் சுற்றி விட்டு மலைக்குப் போனார்கள்.

நாராயணன் அடுத்த எஸ்டேட் ஆளைக் கூட்டி வந்திருந்தான். அவர்கள் விலை பேசத் துவங்கினார்கள். விலை படிந்தது. ஒரே தொகையாய்த் தர வேண்டும் என்று விற்பவன் சொன்னதில் பேச்சு இழுத்தது.

"மலை மொத்தமும் வாங்கிப் போட ணும்னு முடிவு பண்ணிட்டீங்க. ஆனா ஆளுங் களுக்குக் கூட கூலி கேட்டா கொடுக்கமாட் டேன்றீங்க."

"அதெப்படி மாட்டேன்னு சொல்ல முடி யும்? கொடுத்துத்தானே ஆகணும்? கூலி அதிக மாச்சுன்னா ஏலக்காய் விலை அதிகமாகும். ஏலக்காய் விலை அதிகமாச்சுன்னா அடிவாரத் துல ஹோல்சேல்ல வாங்கிறவன் குறைவான். ஹோல்சேல்ல வர்றவங்க குறைஞ்சா பாம் பேவுல, மெட்ராஸ்ல, இன்னும் விலை அதிக மாகும். இப்ப ஒரு ரூபாய்க்கு நாலு காய் கொடுக்கறீங்க. அப்ப ஒரு ரூபாய்க்கு ஒண்ணு கொடுப்பீங்க. பத்து ரூபா பாயசத்துல நாலு ரூபாய் வாசனை போடணுமான்னு ஜனம் யோசிக்கும்! ஏலக்காய் இல்லேன்னு யாரும் செத் துடமாட்டாங்க! ஏலக்காயிலிருந்து ஊசி மருந்தோ, உரமோ செய்யறதில்லை. ஏலக்காய் வாண்டாம்னு சொல்ல, காசு இல்லைன்னு சொல்ல மனசு வராது. ஏலக்காய் அதிகம் சாப் பிட்டா ஜாண்டிஸ் வரும்னு சொல்லுவாங்க; பித்தப்பை கெட்டுரும்னு செய்தி பரவும் - அவ்வளவுதான். நான் கூலியா காசு கொடுக்கற துக்குப் பதிலா ஏலக்காய் அளந்து போட்டுட றேன். எல்லாம் யூனியன்ல போய் வித்து நீங்களே சாப்பிடுங்க!"

கேரளத்தை சேர்ந்த யூனியன்காரர்கள் அரை மணி நேரம் கத்தினார்கள். ஆளுக்கு ஆள் வசனம் பேசினார்கள். ஒரு அளவுக்கு மேல் ஏலக்காய்க்கு விலை வைக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

அடுத்த வருடத்திலிருந்து கூலி உயர்வு தருவ தாகக் கதிரேசன் சொன்னதும் ஏற்றுக் கொண்டு போனார்கள். நாராயணன் வேலி பிரித்தான். பகவதி அடுத்த எஸ்டேட்டில் காலை எடுத்து வைத்தாள். 'கதிரேசா' என்று விம்மினாள். அம்மா என்று அவன் ஓடி வந்து புஜம் பிடித்துக் கொண்டான்.

"ஒவ்வொரு செடியும் உயிரா பாவிக் கணும்னு செட்டியார் சொல்லுவாங்க. ஒரு விஷயத்தை உயிரா நினைக்கறதுன்னா இன்னா? அது வளரணும்னு அக்கறைப் படணும். 'நல்லா வாழணும்'னு அக்கறைப்படணும். எல்லாத்து மேலயும், எல்லா நேரமும் பிரியமா நடத்துக்க கதிரேசா!"


கதிரேசன் செடி, சொர்ணலட்சுமி, சின் னம்மா மூவரையும் மாறி, மாறிப் பார்த்தான். உயிர் மாதிரி பிரியம் உள்ளவர்களிடம் கொஞ்சிக் கொண்டிருப்பார்களா. கதிரேசன் புதிதாய் வாங்கிய எஸ்டேட்டுக்குள் நுழைந் தான். செடிகள் வாடியிருந்தன. பிளாஸ்டிக் டியூபைச் சொருகி ஸ்பிரிங்க்ளரை சுழல விட்டான். குளுமையான மழை நீர் ஏலச் செடியை, சின்னம்மாவை, சொர்ணலட்சுமியை நனைக்கத் துவங்கியது. அது செலுத்திய குளிர் ஒரு பிரியம் போல் உயிரை சிலிர்க்கப் பண்ணி யது. அந்த உயிர்க்குளுமையை, ஏலச் செடிக ளோடு அவர்களும் உணர்ந்தார்கள். தன்னை, தன் உயிரை நேசிப்பது போல் பிறரை நேசிக்க அந்த நேரம் முடிந்தது.

அப்படிப்பட்ட நேசிப்பை ஒரு முறை தெரிந்து கொண்டால் போதும், அது வாழ்க்கை முழுக்கத் தொடர்ந்து வரும்.

(முற்றும்)

KALKI SHOPPING PAGE

தரமான மதுரை சுங்குடி புடவைகள் தள்ளுபடி விற்பனை





RANI V. SUNDARA RAO
Founder of
RANEE SAREES

பர்வதாஸ் சாரீஸ்

மதுரை சுங்குடி புடவைகள்
1, வடக்கு மாடவீதி,
மைலாப்பூர், சென்னை - 4.

DISCOUNT UPTO DEEPAVALI

RANEE SAREES

JSV TEX
MADURAI - 12

Stockists :

தேவேந்திரா சாரீஸ்
சென்னை - 3

உறுதியான சாயம், தரத்தின் உறைவிடம்



SREE KRISHNA

CUT PIECE COLLECTION PVT. LTD.


THE SHOP FOR WHOLE FAMILY
39 GODOWN STREET, MADRAS - 1 PH: 589596

EXCLUSIVE FOR READY MADE
EXCLUSIVE MATCHING BLOUSES
EXCLUSIVE FOR UNIFORM

specialists in suitings, shirtings, cut-pieces, summer cotton sarees, madurai chungudi cotton, belgaum pattu silks, benaras silks, venkatagiri bengal cotton and churidar

Avail 10% Discount till Deepavali.
Shop open on all Sundays till Deepavali. Even at midnight

KALKI SHOPPING PAGE



1995 அக்டோபர் 15
யுவ புரட்டாசி 28
மலர் : 54
இதழ் : 11

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ம.பொ.சி : ஒரு கம்பீர வாழ்க்கை

ம.பொ.சி. என்றதுமே கம்பீர மீசையும் கூர்மையான கண்களும் தும்பைப்பூ கதராடையு மாக நிற்கும் உருவம் நினைவுக்கு வரும்.

ஆளும்கட்சிக்கு ஏற்ப வளைந்து கொடுக்கத் தயங்காததால், சில சந்தர்ப்பங்களில் அவர் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளானதும் நினைவுக்கு வரத்தான் செய்யும்.

எனினும், இந்தக் குறையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், அவர் வாழ்க்கை எத்தனையோ விதங்களில் இன்றைய இளைஞர்களுக்கு முன்னோடியாக அமைந்திருக்கிறது என்பது தெரியவரும்.

மிக மிக எளிய குடும்பத்தில் பிறந்து, முழுக்க முழுக்க சொந்த முயற்சியில் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டவர் ம.பொ.சி.

அச்சுக் கூடத்தில் கிடைத்த கம்பாஸிடர் வேலையே இவரைத் தமிழின்பால் கவனமும் ஆர்வமும் செலுத்தத் தூண்டியது. பள்ளி/கல்லூரி நிழலைக் கூட அறியாதவர். புத்தகங்களைத் தேடிப் படித்துத் தம்மை வளர்த்துக் கொண்டார். பல்கலைக்கழக செனட் உறுப்பினர் ஆகும் அளவுக்கு உயர்ந்தார்.

வாய்ப்புகள் வரவேண்டும் எனக் காத்திருக்காமல், கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் வெற்றி வாய்ப்புகளாக்கிக் கொள்ளலாம் என்பதற்கு வேறு உதாரணம் வேண்டுமா என்ன?



தம்மை வளர்த்துக் கொண்ட திருப்தியில் லயித்து விடாமல், அந்த அறிவையும் தமிழ்ச் சுவையையும் பரிமாறிப் பகிர்ந்து கொள்வதைக் கூட ஒரு கலையாகவே வளர்த்தார் சிவஞானம்.


இடுப்பில் ஒரு கையும் தலைக்கு மேல் உயர்த்திய ஒரு கையுமாக நின்று அவர் தமிழைப் பிரவாகமாகப் பொழிவதைக் கேட்டு, எண்ணற்றவர்கள் மயங்கினார்கள். அவரது சிலப்பதிகாரத் தொடர் சொற்பொழிவுகள் ஏராளமான தமிழ் அன்பர்களையும் ஆர்வலர்களையும் உருவாக்கின... பாரதியாரையும் வள்ளலாரையும் அவரளவுக்கு ஆழமான பார்வையுடன் பயின்று, எளிமையாகப் பயிற்றுவித்தவர்கள் வேறு யாரும் இல்லை.

'என் உயிரினும் மேலான தமிழ் மக்களே...' என்று தமிழால் சீராட்டி விட்டு, சுரண்டலைத் தொடர்கிறார்கள், இன்றைய அரசியல் தலைவர்கள். ஆனால் ம.பொ.சி. மெய்யான தலைவராக இருந்தார். அவர் தமிழ்த் தொண்டு, மொழிப் பணியோடு முடிந்து விடவில்லை. தமிழ்நாட்டின் மேன்மைக்கு அதே அர்ப்பண உணர்வுடன் பாடுபட்டார்.

இந்திய மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டபோது, திருத்தணி (ஆந்திர எல்லை) தேவிகுளம் (கேரள எல்லை) போன்ற இடங்கள் நியாயமாய்த் தமிழ்நாட்டுடன் சேர வேண்டும் என்று போராடினார்.

இந்த எல்லைப் போராட்டங்களில் அவருக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது சுயநலக் கலப்பில்லாத லட்சிய நோக்கும் அதன் அடிநாதமாக இருந்த பலமான நியாயமும்தான்.

இந்த சத்திய ஒளியே அவருக்குப் பிற தலைவர்களின் பெருமதிப்பையும் அன்பையும் பெற்றுத் தந்தது. பெருந்தலைவர் காமராஜரும் மூதறிஞர் ராஜாஜியும் அரசியல் வாழ்விலும் சொந்த வாழ்விலும் அவருக்கு மிக நெருக்கமாக இருந்தவர்கள்தான். 'ராஜாஜி ராமன் என்றால் நான் லக்ஷ்மணன்' என்று கூட ம.பொ.சி. சொன்னதுண்டு.



அதே சமயத்தில் கருத்து மாறுபாடுகளைத் தயங்காமல் வெளியிட்டார் ம.பொ.சி. காமராஜரோ, ராஜாஜியோ அவற்றை ஏற்காவிட்டாலும் அவரைத் தொடர்ந்து மதிப்பும் மரியாதையும் நட்புணர்வும் துளியும் குறையாமல்தான் நடத்தினார்கள். அவர்களுக்கிடையே நிலவிய பரஸ்பர உறவு, இன்றைய அரசியல் உலகில் தேடினாலும் கிடைக்காத பண்பாட்டுப் பரிமாற்றம்!

சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு முறை சிறை சென்றவருக்கு தேசப் பற்று மிகுதியாக இருந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் அந்த உணர்வு, வரும் தலைமுறையினரிடையேயும் குறைவின்றி வளர வேண்டும் என்பதற்காகவும் அரும்பாடுபட்டிருக்கிறார் ம.பொ.சி.

தமிழக சுதந்தரப் போராட்ட வரலாற்றை அற்புதமாக எழுதி, சரித்திர உணர்வைப் பெருக்கியிருக்கிறார். வீரபாண்டிய கட்டபொம்மன்தான் முதல் சுதந்தரப் போராட்ட வீரன் என ஆதார பூர்வமாக நிரூபித்திருக்கிறார்.

இத்தனை இலக்கியப் பணிகளையும் மக்கள் பணிகளையும் அவர் பொது வாழ்வில் இருந்தபடியே செய்தார் என்பதுதான் ஆச்சரியமான விஷயம். எம்.எல்.ஏ., எம்.எல்.சி. (மேலவை உறுப்பினர்), மேலவைத் தலைவர் போன்ற பல பொறுப்பான பதவிகளை வகித்த ஒருவருக்கு இத்தனை ஆராய்ச்சிக்கும் எழுத்துக்கும் நேரம் இருந்திருக்கிறது!

Time Management என்று விஞ்ஞான ரீதியாகக் கற்றுத் தரப்படும் நேர நிர்வாகம் அவருக்கு இயல்பாகவும் எளிமையாகவும் கை வந்திருக்கிறது.

நடந்தால் சாதனை, நின்றால் மாபெரும் சாதனை என்று தலைவர்களும் தலைவிகளும் விளம்பரப்படுத்திக் கொள்ளும் இந்தக் காலத்தில் விளம்பரமோ பறைசாற்றலோ இன்றி வாழ்ந்து முடிந்த ம.பொ.சியின் வாழ்க்கை வரலாறு, ஒரு தனி அருங்காட்சியகமே அமைக்கும் அளவுக்கு விஷயம் நிரம்பியது.

அந்த அரிய வாழ்வின் பல சிறந்த அம்சங்களையும் வெறுமே பேசி வியக்காமல் பின்பற்றிப் பயனடைவதுதான் அவருக்கு நாம் செலுத்தக்கூடிய நிறைவான அஞ்சலி.

காலத்தின் கட்டாயம்?

♦ அரசியல்வாதிகளை இஷ்டம் போல் ஆட்டிப் படைக்கும் சந்திராசாமி போன்ற சாமியார்களை இனிமேலும் வளர விட்டால், பிறகு சாமியார்களிடமிருந்து நம் ஜனநாயக நாட்டை மீட்கப் போராட வேண்டிய காலகட்டம் வந்து விடும்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

♦ 'மனிதனை வெல்லுமா கம்ப்யூட்டர் மூளை?' கவர் ஸ்டோரி அருமை. கம்ப்யூட்டர் பற்றி இவ்வளவு விஷயங்களா! இதுபோன்ற வித்தியாசமான கட்டுரைகளை கல்கியால் மட்டுமே தர முடியும்.

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

♦ அடேங்கப்பா, வளர்ப்பு மகன் திருமணம் மாதிரி அட்டை படு கோலாகலம்! ஆனால், அந்த வட்ட முகத்தின் பெயரைக் குறிப்பிடாமல் விட்ட உமது கம்ப்யூட்டர் மூளையை என்ன சொல்ல..!

ஏத்தாப்பூர், ரஜினிசாமி.



♦ 'மனைவி : உங்களுக்கென்ன பைத்தியமா? அந்தக் கம்ப்யூட்டருக்குப் போய் வணக்கம் சொல்றீங்க?

கணவன் : உஷ்... சத்தமா பேசாதே! அதுதான் எங்க கம்பெனி மானேஜர்!'

– 'மனிதனை வெல்லுமா கம்ப்யூட்டர் மூளை?' என்ற அட்டைப் படக் கட்டுரையைப் படித்த போது, நான் 1976-ம் வருட கல்கி எதிர்காலச் சிறப்பிதழில் எழுதிய இந்த ஜோக்தான் ஞாபகத்திற்கு வந்தது. போகிற போக்கைப் பார்த்தால் இப்படியும் நடக்கும் போலிருக்கே!

மங்கைநல்லூர், சின்னஞ்சிறுகோபு.

♦ 'முத்து படம் பற்றிய கார்ட்டூன் கண்டேன். மிகவும் நன்றாக இருந்தது. எல்லோரும் ரஜினியின் அரசியல் பிரவேசத்தால் யாருக்கு நன்மை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் எழுதிக் கொண்டிருக்க, நீங்கள் மட்டும், வரப் போகும் படத்தின் மூலம் அதன் தயாரிப்பாளர் அடையக் கூடிய வெற்றியைக் குறித்து கார்ட்டூன் போட்டு அசத்தி விட்டீர்கள்!

சிதம்பரம், ஜி. துளசி.

♦ 'இளையராஜா இசையமைக்காமல் படம் எடுக்க மாட்டேன்' என்று கூறி, அதனால் சில் படங்களை இயக்கும் வாய்ப்பை நழுவ விட்ட வசந்த், இன்று 'நான் ரஹ்மானின் ரசிகன்' என்று கூறுவதும் காலத்தின் கட்டாயம்தானோ?

சென்னை - 88, கா. சங்கரநாராயணன்.

♦ மதுரை துணுக்குகளில், உஷாதேவியின் கவிதையில் பொருள் இருந்தது. நையாண்டி இருந்தது. நாட்டு நிலை தெரிந்தது. கூடவே அவரது ஏக்கமும் தெரிந்தது. பொதுநல நோக்கமும் இருந்தது. ஆனால் எடுத்தாளப்பட்ட பாரதி பாடலின் ஓசைநயம் மட்டும் தட்டிற்று. இருந்தாலும் பொருள் நயத்திற்காக, நல்ல எண்ணத்திற்காக அவரிட்ட தலைப்பைப் போல – பாரதியார் மன்னிக்கட்டும்!

சென்னை - 14

அய்யாறு வாசுதேவன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

♦ "நான் லிஃப்டினுள் நுழைகிறேன் என்பதற்காக லிஃப்டினுள் இருந்தவரை வெளியே தள்ளியது சரியல்ல" என்று லிஃப்ட் ஆப்பரேட்டரைக் கடிந்து கொண்ட மறைந்த சரண்சிங்கைப் பற்றி வட்டமேஜையில் ஒரு அன்பர் எழுதியதைப் படித்து நெகிழ்ந்து போனேன். தனக்குப் பிடிக்காதவர் என்பதற்காக ஒரு மத்திய அமைச்சரை விமானத்திலிருந்து இறக்கிய நம் ஊர் வி.ஐ.பி.யை இவரோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! என்ன ஒரு முரண்பாடு!

சென்னை – 101, ஜெ. கண்ணன்.

♦ வினை விதைத்தவன் சிறுகதை வித்தியாசமாகவும் சிரிப்பை வரவழைக்கும் விதமாகவும் இருந்தது. ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

குமராட்சி, எம். பிரபு.

♦ வீணான பொருள்களை வைத்துக் கொண்டு சகல வசதிகளோடும் கட்டப்பட்டிருக்கும் வீடு பற்றிய உங்களின் துணுக்குச் செய்தி, நீங்கள் எழுதியிருந்தது போலவே எங்களை மயக்கம் போட்டு விழச் செய்யாத குறைதான்! பெரிய சாதனை.

மொரட்டுப்பாளையம், க. நா. இராஜேஸ்வரன்.

KALKI SHOPPING PAGE

உங்களுக்கு என்ன புத்தகம் தேவையென்றாலும் இங்கே வாருங்கள்!

தியாகராய நகரின் அறிவுச்சுரங்கம்!

'புக்லேண்ட்ஸ்'

எல்லா தமிழ் நூல்களும் இங்கே கிடைக்கும். ஜெயகாந்தன் • ஓஷோ • ஜே.கே. • திலகவதி • ரமணிசந்திரன் • பாலகுமாரன் • மு.வ. • சாண்டில்யன் • நா. பா. • அகிலன் மற்றும் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்!

BOOKLANDS

Foreign & Indian Books of all subjects. Dictionaries, Medical, Engineering, Computer Guides, Greeting Cards etc., under one roof.

52-C, North Usman Road, Basement,
Opp. ARR Complex, Near Panagal Park,
T. Nagar, Madras - 600 017
☎ 828 0466

WE WELCOME YOU TO THE WORLD OF KARISHMA CHURIDARS AND COTTON SAREES

OUR PRODUCTS

1. Karishma Churidars
2. Karishma Sarees
3. Andhra Pochham Palli Cotton Sarees
4. Belgaum Polyster (Saradha) Sarees
5. Banaras cotton sarees
6. Beekay Sarees (New product)

AALURI SAREES

The Shop exclusively for Ladies

(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)
WHOLESALE & RETAIL
4/24 R.K. MUTT ROAD, LUZ BAZAAR,
MYLAPORE, MADRAS - 600 004.
PHONE : 4935791

Avail 10% discount till deepavali with this cutting

WE WELCOME CITIBANK + CARDS

GENUINE DISCOUNT SALE

- RANI SAREES
- BENGAL COTTON
- MADURAI SUNGUDI
- MURSHIDABAD PRINTED
- PURE SILK

10% DISCOUNT

UPTO DEEPAVALI

MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
T. NAGAR (PONDY BAzAAR),
MADRAS-17
(NEAR AGASTHIAR TEMPLE & BRILLIANT TUTORIAL.

KALKI SHOPPING PAGE

49–வது ஆண்டு

குண்டூசி

தீபாவளி மலர்

1995

தீபாவளியன்றே எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.
சிந்திக்க வைக்கும் ஆன்மீகக் கட்டுரைகள், கவிதைகள், நல் உபதேசக் கதைகள் மற்றும் பல சிறப்பு அம்சங்களுடன், ஆர்ட்பேப்பரில் நாலு வண்ணங்களில் சுவாமிகளின் படங்கள் முதலியவைகள் மன அமைதியும் மகிழ்ச்சியும் அளிக்கும் தெய்வீகப் புனித மலராய் வெளிவருகிறது.

மலரின் விலை ரூ. 25

குண்டூசி, சென்னை - 600 014.
போன் : 846434

Vandena TEX

New arrivals in Bangalore Crape Silk, Belgaum Sarees, Bengal Cotton Sarees, Dilip Koyal Sarees, Guntur Sarees, Kora Silk Sarees, Madurai Sungudi Sarees, Mysore Silk Sarees, Poonam Sarees, Sicco Sarees, Tussar Silk Sarees, Matching Blouse bits, Pant & Shirt Bits also available.

Vandena Tex

37-B Arya Gowdar Road,
West Mambalam,
Madras - 600 033. Phone : 4824915
(Postal Colony Bus Stop)
Opp : Amudham Department Stores

Monthly Saving Chits also available. Rs. 25, 50, 75

NATURE'S ANSWER TO YOUR THROAT PROBLEM




Ruchi

SUPER MINT

SHYAM MARKETING
50, GIRIAPPA ROAD, T.NAGAR
MADRAS - 600 017.
PHONE : 826 9290, 826 9438.

ஒரு நிஜமான கற்பனை நிகழ்ச்சி!



ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணச் செலவு பற்றி கணக்குகளை விசாரிப்பதற்காக வருமான வரித்துறையின் உயர் அதிகாரி ஒருவர், போயஸ் தோட்டத்துக்கு வருகிறார்:–

"மேடம்! நான் வருமான வரித் துறையின் துணை கமிஷ்னர். உங்க வளர்ப்பு மகன் திருமணச் செலவு பற்றி விசாரணை செய்யணும்."

"விசாரணையா? எங்க வீட்டுக் கல்யாணச் செலவு பற்றி விசாரணை செய்ய நீங்க யார்? என்னுடைய உடன் பிறவா சகோதரிகூட என்னிடம் கேட்டதில்லை கணக்கு! தெரியுமா உமக்கு?"

"மேடம்! முரண்டு பிடிக்காம ஒத்துழைக்கணும்; அரைமணியில விசாரணை முடிஞ்சுடும்... என்னோட கடமையை நான் செய்தாகணும்."

"சரி! சரி! உங்களுக்கு என்ன வேணுமோ கேளுங்க தரேன்!"

"எனக்கு எதுவும் தர வேணாம். நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொன்னால் போதும்."

"சரி... கேளுங்க."

"கல்யாணத்தின்போது மைல் கணக்கில் வாழை மரங்கள் கட்டி வைக்கப்பட்டிருந்ததே! அதற்கு எவ்வளவு செலவானது?"


"நான் ஒரு ரூபாய் கூட செலவழிக்கலை. அத்தனையும் சென்னை மாநகர கார்ப்பரேஷனின் செலவு."

"என்னது? கார்ப்பரேஷன் செலவா?"

"ஆமாம்! எழில்மிகு சென்னை 2000ன்னு ஒரு திட்டம் இருக்கு தெரியுமா? அதன் கீழ், சென்னை நகரின் ஒரு பகுதியைப் பகமையாய்த் தோன்றச் செய்தால் எப்படி இருக்கும்னு செய்முறை மூலம் பார்க்கிறதுக்குத்தான் வழிநெடுக வாழைமரங்கள் நட்டு வைச்சாங்க. அதனால் அந்தச் செலவு சென்னை கார்ப்பரேஷன் கணக்கில் போய் விட்டது."

"இரவைப் பகலாக்கும்படியாய் அலங்கார விளக்குகள் ஒளிரச் செய்த வகையில் மின்சாரக் கட்டணச் செலவுக் கணக்கு எவ்

செலவுக் கணக்கு தருகிறார் ஜெ...



மதுரையில் ஒரு ஆட்டோவின் பின்னால் எழுதப்பட்டிருந்த வாசகம்:
'ஆமாம்! இது... என் அப்பன் வீட்டு ரோடுதான்!'

-உத்திரட்டாதி

வளவு?"

"அதுவும் நத்திங்!"

"என்ன சொல்லறீங்க மேடம்! எத்தனை விளக்குகள், எத்தனை மணி நேரம் தொடர்ந்து எரிஞ்சுருக்கு? அதற்காகப் பணமே செலவழிக்கலை என்கிறீங்களே?"

"மின்சார லயன்களிலிருந்து நேரடியாய் கரண்ட் எடுத்துக்கிட்டதால் எவ்வளவு கரண்ட் செலவானது என்றே தெரியவில்லை. அப்புறம் எப்படி கட்டணம் எவ்வளவுன்னு கணக்கிட முடியும்?"

"இது சம்பந்தமாய் ஒரு சிலர் கோர்ட்டில் கேஸ் போட்ட போது, மின்சாரத்துக்குக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுன்னு வக்கீல் தெரிவிச்சிருக்கிறாரே!"

"அப்ப அவரைப் போய்க் கேளுங்க. என்னை எதுக்கு தொல்லை பண்றீங்க?"

"சரி! திருமணத்துக்கு, 400 மூட்டை அரிசி செலவழிக்கப்பட்டதாக சமையல் காண்டிராக்டர் ஒரு பத்திரிகை பேட்டியில் சொல்லியிருக்கிறாரே? அதை வைச்சுப் பார்க்கும் போது செலவு எக்கச்சக்கமா ஆயிருக்கும் போலத் தெரியுதே!"

"நாங்க யார் பரம்பரையில் வந்தவங்க தெரியுமா? திராவிட பரம்பரை! பேரறிஞர் அண்ணா, என்ன சொல்லி ஆட்சியைப் பிடித்தார்? ரூபாய்க்கு மூணுபடி அரிசி தருவதாய்ச் சொல்லி! செய்து காட்ட முடியவில்லை. என் ஆட்சியில் ஒரு அரிசி வியாபாரி அதை சாதித்து இருக்கார். எனக்கு ரூபாய்க்கு மூணு படி அரிசி கொடுத்திருக்கார். இந்தச் சாதனையைப் பாராட்டுவதை விட்டுவிட்டு இப்படியொரு கேள்வியா?"

"சரி, சாப்பாட்டுக்கு மொத்தமா எவ்வளவு செலவாச்சு...?"

"என்ன 'செலவு.. செலவு' என்று சொல்லி ஒரு பக்கமாகவே பேசிக்கிட்டிருக்கீங்க? இன்னொரு பக்கத்தையும் பாருங்க! வந்தவங்க எல்லாம் என்னென்ன பரிசு கொடுத்தாங்க, எவ்வளவு மொய் எழுதினாங்க.. அதையும், இதையும் கணக்குப் பார்த்தால் செலவை விட, பல மடங்கு வரவு இருக்கும். அதனால் சாப்பாட்டுச் செலவை செலவாகவே கணக்கில் எடுத்துக்கக் கூடாது!"

"உங்கள் உடன் பிறவா சகோதரி குடும்பத்தினர் எல்லாரும் கல்யாணத்துல லட்சக் கணக்கான ரூபாய் பெருமானமுள்ள நகைகள் போட்டுக்கிட்டிருந்தாங்களே? அந்த செலவுக்கு எங்கேருந்து பணம் வந்தது?"

"எப்படி? நகை எப்படி திருமணச் செலவில் சேரும்? நீங்களும் உங்க மனைவியும் உறவினர் திருமணத்துக்குப் போறீங்க. அப்போ உங்கள் மனைவி போட்டிருக்கிற நகைகளைத் திருமணச் செலவிலா சேர்க்க முடியும்? அதுபோலத்தான். நகைச் செலவு, திருமணத்துக்கு அப்பாற்பட்டது."

"மணமகனின் கோட், சூட்களில் வைரக்கல் பதித்திருந்ததாய் பேப்பரில்...."

"பேப்பரில் ஆயிரம் போடுவாங்க. சயன்ஸ் தெரியாத மண்டூகங்கள் அந்தப் பத்திரிகைக் காரங்க. கோட்டில் இருந்தது கரி... ஆமாம் வெறும் கரி."

"என்ன சொல்றீங்க?"

"கரிதான்... கெமிஸ்டிரி பிரகாரம் அது கரிதான். ஆனால் வர்த்தக ரீதியில் அதன் பெயர் வைரமாம்!"

"மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்தில், சாரட் வண்டி இழுத்த குதிரைக்குத் தங்க லாடம் கட்டினதாச் சொல்லப்படுகிறதே?"

ஜெயலலிதா, வருமானவரி துணைக் கமிஷ்னரை ஆழமாய் ஒரு பார்வை பார்த்துச் சொல்கிறார்:

"குதிரைக்கு லாடம் கட்டினது பற்றியா கேட்கறீங்க? அப்புறம் உங்க முதுகுல டின் கட்டவே வேண்டாம், கூடவே கூடாதுன்னு கழகக் கண்மணிங்களுக்கு உத்தரவு போட்டுடுவேன்..."

துணை கமிஷ்னர் நடுங்கிப் போய் "மேடம்! கடைசியா ஒரே ஒரு கேள்வி... விசாரணை முடிஞ்சுடும்... உங்களுக்கோ மாதம் ஒரு ரூபாய் தான் சம்பளம். அப்புறம் எப்படி...?"

"ஹ...ஹ..." என்று சிரித்து, உடலை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டு, "இந்த ஜெயலலிதா ஒரு கோடி செலவுசெய்தாக்கூட ஒரு ரூபா செலவு செய்த மாதிரிதான். தெரியுமா உமக்கு?"

கற்பனை: **எஸ். சந்திரமௌலி**



மாலை மயங்குகின்ற நேரம்

1

திருமண மண்டபம் களைகட்டியிருந்தது. எங்கு பார்த்தாலும் வண்ண ஒளி விளக்குகளும் இடையே நேர்த்தியாகப் பின்னிப் பிணைந்த மலர் அலங்காரமும் மாவிலையும் தோரணமும்...

சித்தி யசோதாவின் கைவண்ணம்தான். இது போல அலங்கார விஷயங்களில் சித்தி கெட்டிக்காரி என்பது உதயரேகா ஏற்கெனவே அறிந்த விஷயம்தான். தனக்குத் திருப்தியாகும் வரை, 'இப்படிச் செய்; மாற்று; அப்படிச் செய்' என்று வேலையாட்களை விட மாட்டாள். இப்போது இன்னமும் அதிக சிரத்தை தெரிந்தது... பாவம்தான்.

சித்தியிடம் சொல்லாமலே விட்டிருந்திருக்கலாமா என்று தோன்றியது. நாலு ஆண்டுகளாக உள்ளே பூட்டி வைத்திருந்ததுதானே? கடைசி வரை அப்படியே இருந்து விட்டிருக்கலாம். ஆனால் இனி இந்த மாதிரி நினைப்பது முட்டாள்தனம். 'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று அன்றைக்கே வள்ளுவர் சொல்லி விட்டார். சொல்வதற்கு முன் யோசித்திருக்க வேண்டும். சொன்ன பிறகு இப்படி நினைத்துப் பார்ப்பது வீண்.

வெளியே வெடிச் சத்தம் கேட்டது. ஒரு புறத்து வாயில் வழியே ஒளிச் சிதறல்களாக வாண வேடிக்கை வானத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டு இருப்பது தெரிந்தது. மாப்பிள்ளை ஊர்வலம் மண்டபத்தை நெருங்கி விட்டது. இனி இங்கே நின்று, வருகிறவர்கள் கண்ணில் பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. திருமணப் பெண்ணாய், லட்சணமாய் இருக்க வேண்டும். சித்தியின் உத்தரவு.

திருமண ஹாலின் அலங்காரங்களைக் கண்டு ரசித்துக் கொண்டு இருந்த உதயரேகாவுக்கு, அங்கிருந்து மடமடவென்று கல்யாணப் பெண்ணின் அறைக்குள் சென்று அங்கே அவளுக்கென்று போடப்பட்டிருந்த நாற்காலியில் பதவிசாய் அமர்ந்த போது உள்ளூரச் சிரிப்பு துள்ளாட்டம் போட்டது. அடக்கிக் கொண்டு, வருங்கால உறவினர்களை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.


அவர்களில், இந்தப் 'பட்டுக் கட்டு'கிற விழா முக்கியமானது. பல்வகைச் சீர்ப் பொருட்களுடன், விலை உயர்ந்த ஜரி கைச் சேலை ஒன்றை மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வருவார்கள். அதை நாத்தனார் கையால் பெண்ணிடம் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார்கள். அந்தப் பட்டுச் சேலை அணிந்ததும் அவளுக்கு நலுங்கு சுற்றுவார்கள். நெருங்கிய உறவினர் மட்டுமே கலந்து கொள்ளும் இந்த வைபவம் கிட்டத்தட்ட பாதித் திருமணம் போலக் கருதப்படும்.

நலுங்கு சுற்றி, விருந்து முடிந்து, அவரவர் இடங்களில் எல்லாரும் முடங்கியபின் யசோதா, மகளிடம் வந்தாள்.

சற்று நேரம் கேள்வியாய் அவளை நோக்கி விட்டு, "ஏண்டி? ஏன்? ஏன் இந்தப் பிடிவாதம்? மாப்பிள்ளை நன்றாக இல்லை என்று சொல்லவில்லை. நல்ல உயரமும், செதுக்கினாற்போல அவயவங்களுமாக பார்வைக்குப் பிரமாதம்தான். ஆனால் குணம்? இல்லாத தப்பே இல்லை போலத் தெரிகிறதே! இவரைத்தான் மணப்பது என்று என்ன பிடிவாதம்? உன் பேர் கெட்டு விட்டது, அது இது என்று ஏதானும் சொல்லாதே. மற்றவர்கள் ஒன்று சொல்வார்கள் என்று அதற்காக எதையும் செய்கிறவள் நீ இல்லை என்பது எனக்கு நன்றாகவே தெரியும். பின் ஏன்?" என்று கேட்டாள்.

லேசாகத் தலையைச் சரித்து, சிற்றன்னையை நோக்கினாள் உதயரேகா.

"உங்களுக்குச் சரியான பதிலே போல ஒரு கதை படித்தேன், சித்தி. சொல்லட்டுமா? ஒரு பெண் – சுமாராக அழகான, உற்சாகமான, நாகரீகமான, இளமையான... கிட்டத்தட்ட என்னைப் போலப் பெண் என்று வையுங்களேன். அவள் ஒரு துப்பறியும் நிபுணரிடம் வந்தாளாம். ஓர் இளவயதுப் பையன் படத்தை அவரிடம் கொடுத்தாளாம். 'பாருங்கள் சார், இவரோடு எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. இவரைப் பற்றிய முழு விவரங்களும் எனக்கு வேண்டும்' என்றாளாம். நிபுணர் கொஞ்சம் வயதானவர். இவள் வயதில் அவருக்கு ஒரு பெண்




உண்டாம். 'கெட்டிக்காரி; இந்த மாதிரி முன்னெச்சரிக்கை எத்தனை பெண்களுக்கு இருக்கிறது' என்று உள்ளூர சிலாகித்து விட்டு, அலையோ அலை என்று அலைந்து திரிந்து பிள்ளையாண்டானைப் பற்றிய விவரங்கள் அத்தனையும் சேகரித்தாராம். கடைசியில் மனிதருக்கு மனசே சரியில்லாமல் போயிற்றாம். காரணம், பையனுக்கு இல்லாத கெட்ட பழக்கங்களே உலகத்தில் – இப்போது சொன்னீர்களே – அது போல, இல்லாத தப்பே இல்லையாம். சிகரெட், குடி, அப்புறம்... அந்த இன்னொன்று'' என்று கண்சிமிட்டி விட்டு மேலே தொடர்ந்து சொன்னாள் : ''சொன்ன நாளில் பெண் வந்தானாம். இவருக்கு வருத்தம் தாங்கவில்லை! எனக்குப் பணம் எதுவும் வேண்டாம்மா. உனக்கு ஒரு நல்ல சேதி கூட என்னால் தர முடியவில்லை என்று எல்லாம் விலாவாரியாக எடுத்துச் சொன்னாராம். சொல்லி விட்டு, 'ரொம்ப சாரிம்மா' என்றாராம். ஆனால், அவளானால் முப்பத்திரெண்டு பல்லையும் காட்டிப் பளிச்சென்று சிரித்தாளாம். 'வருத்தமா? எதற்கு? எனக்கு இப்போதுதான் சார் உண்மையிலேயே மகிழ்ச்சி. எங்கே, ஒன்றும் தெரியாத ஒரு மக்கு, மண்ணாந்தைக்குப் போய் என்னைக் கட்டி வைத்து விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். அப்பாடி! இப்போதுதான் மனம் நிம்மதியாயிற்று' என்று, இரு மடங்குப் பணத்தை எடுத்து வைத்து விட்டுத் துள்ளிக் கொண்டு கிளம்பினாளாம். ம்ம்... ஏதேனும் புரிகிறதா?''

''புரிகிறது புரிகிறது. ஏதோ நன்றாகத்தான் வளர்த்திருக்கிறோம் என்று இதுவரை நினைத்திருந்தேன். ஆனால், உள்ளே மறை ஒன்று கழன்று கிடப்பது இப்போதுதான் தெரிகிறது'' என்றாள் யசோதா, ஏளனமும் வருத்தமுமாக.

கலகலவென்று உதயாவின் சிரிப்புதான் அவளுக்குப் பதிலாகக் கிடைத்தது.

பெருமூச்சுடன் யசோதா கிளம்புகையில், ''அண்ணி'' என்று மாப்பிள்ளை கிருஷ்ணசந்திரனுடைய தங்கை வசுமதி தலையை நீட்டினாள். ''இந்த அண்ணனைப் பாருங்கள். ராத்திரி என்றாலும் இந்தக் கடிதத்தை அண்ணியிடம் கொடுத்து விட்டுத்தான் தூங்க வேண்டும் என்று விரட்டி விட்டார்!'' என்று யசோதாவிடம் இறங்கிய வண்ணம், ஒரு காகித உறையை உதயரேகாவிடம் நீட்டினாள்.

கடிதத்தைப் பிரித்துப் படிப்பதில் உதயரேகா ஆர்வம் காட்டவில்லை. அதை விடுத்து,



வருங்கால நாத்தனாரிடம், "உனக்குச் சேலை அழகாக இருந்தது, வசு. அந்த மயில்கழுத்து நிறம் பிரமாதம்" என்று சற்றுமுன் அவள் கட்டியிருந்த பட்டுச் சேலை பற்றிப் பேசலானாள்.

வசுமதிக்கு உச்சிகுளிர்ந்து விட்டது. "நல்..ல கலர், இல்லை? உங்களுக்கும் அது போல நிறம் வாங்கலாம் என்று பார்த்தால் அம்மா கூடாது என்று விட்டார்கள். கல்யாணம் சம்பந்தப்பட்ட எதிலும் நீலம், கறுப்பு இரண்டும் இருக்கவே கூடாதாமே! ஆனால் அந்த 'மஜந்தா' கலரில் ஜொலித்தீர்கள் அண்ணி! என்னால் கண்ணைத் தட்டி விழிக்கக் கூட முடியவில்லை. அவ்வளவு அழகாக இருந்தீர்கள்!" என்று பதிலுக்குப் பாராட்டி விட்டு, உதய ரேகாவின் கையைப் பற்றி, "நீங்கள் என் அண்ணியாக வருவது எனக்கு எவ்வளவு சந்தோஷம் என்று தெரியுமில்லையா, உதயா?" என்று ஆர்வத்தோடு கூறிப் பற்றியிருந்த கையில் முத்தமிட்டான்.

இந்த மகிழ்ச்சி விரைவில் இன்னமும் பல மடங்கு அதிகமாகப் போவது இவளுக்கு இப்போது தெரியாது என்று எண்ணுகையில் மீண்டும் உதயாவுக்குள் குதூகலம் குமிழியிட்டது. சொல்லப் போனால், பெருமளவு அதற்காகத்தானே இந்தத் திருமணமே!

எண்ணியதைச் சொல்லாமல், "இவ்வளவு நல்ல நாத்தனார் கிடைத்ததற்கு நான்தான் அதிகமாய் சந்தோஷப்பட வேண்டும். தெரியுமா?" என்று வசுமதியின் கன்னத்தை வருடி முறுவலித்தாள் அவள்.

"மச்சானும் மச்சானும் ஒருவருக்கொருவர் மாலை போட்டுக் கொள்வது போல என்று ஒரு வாசகம் சொல்வார்கள். அது போல, இப்படி ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டே இரவு முழுவதும் இருந்து விடாதீர்கள். தூக்கம் கெட்டுப் போனால், இந்த ஜொலிப்பு, அழகெல்லாம் நாளைக்குக் காணாமல் போய் விடும். நீ போய்த் தூங்கம்மா. உதி, நீயும் படு" என்றாள் யசோதா.


"கரெக்ட்... அ.. அத்தைதானே? எங்கள் அம்மாவும் அப்படித்தான் சொல்லி அனுப்பினார்கள். அரட்டை அடித்து அண்ணி தூக்கத்தைக் கெடுக்காதே என்றார்கள்..." என்று துள்ளி எழுந்த வசுமதி, "வரட்டுமா, அத்தை? டைபை அண்ணி!" என்று குதித்தோடிப் போனாள்.

அவள் கண் மறையும் வரை பார்த்திருந்து விட்டு, "நல்ல பெண், இல்லையா சித்தி?" என்றாள் உதயரேகா.

"ம். ஆனால் உன்னைப் போல இல்லாமல் தாயார் சொல்லைக் கேட்கிறவளாக இருக்கிறாள்.." என்றவள் உதயா சிரிக்கவும், "ஆமாம், சிரித்துக் கொள்! இப்போது கடிதத்தைப் படிக்கப் போகிறாயா இல்லையா?" என்று வினவி



Insync Comm./127/95



"அதோ போறாரே... அவரும் 69 பர்சன்ட் இடஒதுக்கீட்டுக் கொள்கையால ரொம்பவும் பாதிக்கப்பட்டவருங்க!"

"ஏன் அவருக்குக் காலேஜில இடம் கிடைக்கல்லியா?"

"அப்படி இல்லீங்க... வக்கீலை அடிச்ச கேஸில சி.பி.ஐ. இவரையும் தேடிக்கிட்டிருக்காம்!"

— எல். வித்யா

னாள். "எதற்கும் சீக்கிரம் பிரித்துப் படி."

"ஏன் சித்தி, என்ன அவசரம்?"

"அவசரமா?" ஒரு பெருமூச்சு விட்டு, "ஏதாவது முக்கியமான சமாசாரமாய் இருக்கப் போகிறதோ என்றுதான்... உதிம்மா, உன்னிடம் ஒன்று சொல்லியாக வேண்டும். மாப்பிள்ளை முகத்தில் சிரிப்பே இல்லை, என்ன கோபமோ என்று அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். ஆலம் சுற்றுகிற போது அவர் 'உர்'ரென்று இருந்ததைப் பார்த்து பானுக்குட்டி கூடப் பயந்துட்டாளாம். ஆனால் பாரேன், ஆரத்தித் தட்டில் அவர் ஒரு பவுன் காசை வைக்கவும் கழுதைக்கு ஒரே கொண்டாட்டம் ஆகி விட்டது! அந்த ஒரு சவரனுக்கு இதை வாங்கப் போகிறேன், அதை வாங்கப் போகிறேன் என்று ஏதோ காணாததைக் கண்ட மாதிரி அந்தக் குதி குதிக்கிறாள்!" என்று சின்ன மகளைச் செல்லமாக வைதவள், தொடர்பு அறுந்து விடாமல் மீண்டும் பழைய விஷயத்துக்கு வந்தாள். "காலை வரை பொறுக்காமல் இவ்வளவு அவசரமாக அனுப்பி இருக்கிறாரே, ஒருவேளை... ஒருவேளை..."

"ஒருவேளை, திருமணத்தை நிறுத்தி விடும்படி எழுதியிருக்கிறாரோ என்று ஆசையாக எதிர்பார்க்கிறீர்களா, சித்தி? வாய்ப்பே கிடையாது!" என்று நகைத்தாள் உதயரேகா.

முகம் சுருங்க, "ஆமாம்... உன் வாயில் நல்ல வார்த்தை வந்துதான் ஒரு மாதம் ஆகிறதே! என்னவோ, உன் வாழ்வு, உன் விருப்பம்" என்று எரிச்சலாய் மொழிந்து விட்டு வெளியே சென்றாள் யசோதா.

அங்கலாய்ப்புடன் செல்லும் யசோதையை அழைத்துச் சமாதானப்படுத்தலாமா என்ற எண்ணம் உதயரேகாவுக்குத் தோன்றி உடனே மறைந்தது.

ஆதியோடந்தம் அத்தனையும் சொல்லாமல் சித்திக்கு – சித்திக்கு மட்டும் என்ன, யாருக்குமே புரியாது. எல்லாம் விலாவாரியாக விளக்கிக் கொண்டிருக்க இப்போது நேரம் இல்லை என்பதோடு, விளக்கினாலும் சித்தி அதை ஒத்துக் கொள்வாளா என்பதும் சந்தேகமே. ஒத்துக் கொள்ளாவிட்டால் விவாதங்கள் வேறு நடத்தியாக நேரும். இப்போதானால் அடுத்தடுத்து வேலைகளில் ஈடுபடும் போது அவளுக்கு இந்த எரிச்சல் தானாக மறந்து, மறைந்து விடக்கூடும்.

உதயாவின் ஊகம் சரியே போல, மணவறையை அலங்கரித்துக் கொண்டு இருந்தவர்களிடம் சென்று, தொங்க விடப்பட்டுக் கொண்டிருந்த மலர்ச்சரங்களைக் காட்டி யசோதா ஏதோ கூறுவது தெரிந்தது. நிம்மதியற்றவளாக உதயா கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட அவள் எதிர்பார்த்த சமாசாரம்தான். 'இன்னமும் காலம் கடந்து விடவில்லை. தயவுசெய்து பிழைத்துக் கொள்ள முயற்சி செய்.'

வெகு சுருக்கம்! வலப்புறமாய் லேசான சாய்வுடன் கூடிய தெளிவான எழுத்துக்கள்.

அப்படி என்ன அச்சம் அவனுக்கு, சுதந்தரம் பறிபோய் விடும் என்று பயப்படுகிறானா? இஷ்டம் போல ஆடிக் கொண்டு இருக்கிறானே! இனி, இதற்கெல்லாம் இடம் இராமல், கல்யாணம் அவன் காலைக் கட்டி விடுமோ என்ற கலக்கம்! படட்டும். அதற்காகத் தானே அவளும் இந்தப் பாடுபட்டிருக்கிறாள்! உரிமையோடு தட்டிக் கேட்கப் போகிறாளே!

இந்தப் பயமே ஓர் ஆரோக்கியமான விஷயமாய்த் தோன்றவும், இளம் புன்னகையோடு, கடிதத்தை சிறு துணுக்குகளாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டாள்.

மறுநாள், பட்டாடையும் நகைகளுமாகத் தகதகத்தபடி, மணமேடையை வலம் வந்து, கிருஷ்ணசந்திரனின் அருகில் எழிலே வடிவாய் அமர்ந்த போதும் அவள் முகத்தில் அதே முறுவல்தான்.

ஆனால் கிருஷ்ணசந்திரனின் முகம் கடுத்திருப்பதை, மேடையைச் சுற்றிக் கொண்டு வந்தபோதே, கீழ்க் கண் பார்வையில் கண்டு கொண்டவள், அவன் அருகே அமர்ந்ததும், நெற்றிச் சுட்டியைச் சரிசெய்யும் பாவனையில் லேசாக முகம் மறைத்து, "கொஞ்சம் முகத்தைச் சிரித்தாற்போல வைத்துக் கொள்ளுங்களேன். இல்லாவிட்டால் அப்புறமாய் வீடியோ, ஃபோட்டோ பார்க்கும் போது சகிக்காது!" என்று அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படியான மெல்லிய குரலில், தெளிவாக உச்சரித்து முணுமுணுத்தாள்.

கிருஷ்ணசந்திரனும் ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டுதான் இருந்தவன் போல,

கைக்குட்டையால் வேர்வை துடைப்பவன் போல நடித்து, மற்றவர் அறியாமல், "பைத்தியமா உனக்கு? இப்போது – இந்த வினாடி கூட இந்த விலங்கிலிருந்து நீ தப்பிக்க முடியும். என் மேல், நீ எந்தப் பழி சுமத்தினாலும் மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறேன். கடைசி வாய்ப்பையும் வீணாக்கி விடாதே" என்று தணிவான குரலில் வேகமாக உரைத்தான்.

மகளின் முன்புறக் கொசுவத்தை அழகுறப் படிய வைத்தபடி, "மூன்று கோணங்களில் வீடியோ எடுக்கிறார்கள், உதி. ஒன்றில்லா விட்டால் ஒன்றில் விழுந்து விடும். உங்கள் பேச்சைப் பிறகு வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று மென்குரலில் யசோதா எச்சரிக்கவும், அதற்கு மேல் மணமக்கள் இருவருக்கும் இடையே அமைதி நிலவியது.

கெட்டிமேளம் முழங்க, கிருஷ்ணசந்திரன் உதயரேகாவின் கழுத்தில் தாலியை அணிவித்த போது, இந்தத் திருமணத்தின் காரணமான தன் கோரிக்கை நிறைவேறுவதோடு, தங்கள் வாழ்க்கையும் நல்லவிதமாக அமைய வேண்டும் என்று உதயா இறைவனிடம் வேண்டிக் கொண்டாள்.

மாலை வரவேற்பிற்கான அலங்காரங்களைக் களைந்து, கூந்தலைத் தளரப் பின்னி, மென்மையான மைசூர்ப் பட்டணிந்து, கணவன் இருந்த தனியறைக்குள் சென்ற போது, அவன் மற்றதை எல்லாம் மறந்து, ஓடிவந்து அவளை அணைத்துக் கொள்வான் என்று உதயா எதிர்பார்க்கவும் இல்லை.

எனவே, மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு, ஒரு சிலை போல அசையாமல் நின்று, கிருஷ்ணசந்திரன் அவளை வெறித்து நோக்கிய போது, அவள் கலங்கி விடவில்லை. மாறாக, அவன் என்னென்ன கேட்கக்கூடும், அதற்கு எப்படி எப்படிப் பதில் சொல்வது என்று மனத்தினுள் ஒத்திகை நடத்தியபடி, அவளும் அசையாமலே அவனை எதிர்நோக்கி நின்றாள்.

ஆனால், வாதப் பிரதிவாதங்களுக்கு இடம் கொடாமலே கிருஷ்ணசந்திரன் தீர்ப்பு வழங்கத் தொடங்கி விட்டான். "இதோ பாரம்மா, நான் சொல்வதைக் கவனித்து அதன்படி..." என்று அவன் தொடங்கிய தோரணை பிடிக்காமல், "என் பெயர் உதயரேகா" என்று குறுக்கிட்டாள் உதயா.

சலனமற்று, "நல்லது, உதயரேகா, கவனி. இந்தத் திருமணம் ஒரு பெரும் பிழை. எப்படி, என்ன என்று அதை நான் விளக்கப் போவது இல்லை. ஆனால், இதற்காக உன் வாழ்நாள் முழுவதும் வருத்தப்படப் போகிறாய் என்பதும் எனக்கு மிக நன்றாகவே தெரியும். நீ எப்படி எண்ணியிருந்தாலும் சரி. என்னைப் பொறுத்தவரையிலும் இது திருமணம் அல்ல. நீ என் மனைவியும் அல்ல. இந்த அடிப்படை உண்மையை மனதில் வைத்து, மேற்கொண்டு நீ நடந்து கொள்ள வேண்டும். இப்போது சொல். எப்படித் தூங்குவது உனக்கு வசதி?" என்று தெளிவும் திருத்தமுமாகப் பேசி முடித்தான்.

'உன் அணைப்பில்' என்று பதில் சொன்னால் என்ன பண்ணுவான் என்று எண்ணியபடி, கட்டிலில் இருந்து ஒரு தலையணையை எடுத்துத் தரையில் கட்டிலுக்குச் சற்றுத் தூரத்திலேயே போட்டாள் உதயா. ஒரு போர்வையும் அத்தோடு இணைந்தது.


கட்டிலில் படுத்துக் கொள்ள ஆயத்தம் செய்த கணவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி போர்வையைத் தரையில் விரித்த போது, படுகவர்ச்சியாக ஒரு 'போஸ்' கொடுத்துப் படுத்தால் என்ன என்று உதயாவுக்கு யோசனை தோன்றியது.

கிருஷ்ணசந்திரன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் அல்ல. அவளையே முன்பு ஆர்வத்துடன் நோக்கியவனும் கூட...

ஆனாலும் அது அவளுக்குப் பிடிக்கவில்லை. முதலில் கிருஷ்ணசந்திரன் அவளை மனதில் ஏற்க வேண்டும். வெறும் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுப் பெறுகிற வெற்றி கீழ்த்தரமானது. அது அவளுக்குத் தேவையில்லை.

கட்டியிருந்த சேலையை இழுத்து, கழுத்துக்குக் கீழே எந்த பாகமும் தெரியாதபடி, இழுத்து மூடிக் கொண்டு, சுருண்டு படுத்தாள் உதயரேகா.

(தொடரும்)



கே.ஜி. ஸ்ரீதுரை

இரக்கமுள்ள மந்திரங்கள்

எதிர்பாராத தருணத்தில், எதிர்பாராத ஓர் இடத்தில் அந்தக் கடிதம் என் பார்வையில் பட்டது.

படிக்கப் படிக்க என் உடம்பில் திகிலின் டிகிரி கூடியது!

"ஏம்ப்பா சுப்ரமணி! இந்த அப்ளிகேஷன் எப்படி உன் மேஜைக்கு வந்தது?" என்றேன் பரபரப்பு குறையாமல்.

எழுந்து போய்ப் புகையிலையை ஜன்னலுக்கு வெளியே துப்பிவிட்டுச் சாவகாசமாகத் திரும்பி வந்து உட்கார்ந்த சுப்ரமணி, "போன மாசமே லெட்டர்ஸ் செக்ஷனில் இருந்து வந்தது. யாரோ நாகவள்ளிங்கற பொண்ணுக்கு டிரான்ஸ்ஃபர் வேண்டாமாம். அதே ஊரிலேயே இருக்கணுமாம். நடவடிக்கை ஃபைலிலே போட்டுட்டேன். என் செக்ஷன் சம்பந்தப்படாத விஷயம். என்ன நடவடிக்கை எடுக்கிறதுன்னு தெரியலே. அப்பிடியே விட்டுட்டேன்... ஹ்ற... ஹ்ற..." என்று சொல்லிக் காவிக் கறைப் பற்களைப் பரப்பி எக்காளமாய்ச் சிரித்தவனின் வாயை அறைந்து சாத்த வேண்டும் போல் தோன்றியது.

பிரச்னையின் தீவிரத்தைப் பற்றி இவனுக்கென்ன தெரியும்? எண்ணற்ற சர்க்கார் ஆபீஸ் நாற்காலிகளில் ஒன்றைத் தேய்மானப்படுத்தி, புகையிலையும் சீட்டாட்டமுமே தன் வாழ்க்கைப் பயணமாய் வாழும் பதர்.

பாவம் அந்த நாகவள்ளி!

இடமாறுதல் விவகாரங்களை கவனிக்கும் என் செக்ஷனில் இருந்து இன்று காலையில் தான் மாற்றல் உத்தரவு தயாரிக்கப்பட்டு, இயக்குனரின் மேஜையில் குட்டித்தவம் இருக்கிறது – அவரது பச்சைநிறக் கையெழுத்திற்காக.

ஏறத்தாழ நாற்பது பேரின் தலைவிதிகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்த இடமாற்றல் உத்தரவில் நாகவள்ளியின் பெயரும் உண்டு. விருதுநகரிலிருந்து கோயம்புத்தூர் செல்ல வேண்டும் அவள் – அந்த உத்தரவின்படி.

இப்போதுதான் – மிகத் தாமதமாகத் தெரிகிறது, அவளுக்கு இடமாற்றம் வேண்டாம் என்று.

தீவிர யோசனையில் மூழ்கினேன். இப்போது என்ன செய்யலாம்? அந்தப் பெண்ணுக்கு எப்படியாவது உதவ வேண்டும். ஆபீசரின் கையெழுத்து விழுவதற்குள், அந்த ஆணையில் ஏதேனும் செய்ய வேண்டும்...

நேராக என் நாற்காலிக்குச் செல்லாமல், காண்டீனை நோக்கி நடந்தேன், அந்த நாகவள்ளியின் நினைவுகள் துணைக்கு வர.

பத்துப் பனிரெண்டு வருஷங்களுக்கு முன், திருச்சியில் நான் சீனியர் கிளார்க்காக இருந்த பொழுது, அப்போதுதான் புதிதாய் சர்வீஸில் சேர்ந்திருந்தாள் அந்தப் பெண்.

நாகவள்ளி என்ற பெயர் சற்று நாட்டுப்புறமாய் ஒலித்தாலும், நன்கு படித்த, விவரமான பெண்.

எப்போதும் சுறுசுறுப்பும் கலகலப்பும் சேரச் சுழன்று, தான் வளையவரும் வட்டாரத்தையே பளபளப்பாக்கும் சுபாவம்.

நான்தான் அவளுக்கு ஆபீஸ் நெளிவு சுளிவுகளை எல்லாம் சொல்லிக் கொடுத்தது.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி ஒன்றில் தங்கியிருந்த நாகவள்ளி, மாதம் ஒரு முறையேனும் என் வீட்டுக்கு வருவதுண்டு. என் மனைவியை "அண்ணி! அண்ணி!" என்று அழைத்தபடியே, என் குழந்தைகளையும் கொஞ்சிக் குஷிப்படுத்தி விட்டு –

"வர்றேன் சார்! அண்ணி வரேன்! ஹேய் குட்டிப் பிசாசுகளா! அத்தைக்கு முத்தம் கொடுங்கப்பா!" என்று என் குழந்தைகளை அள்ளிக் கொஞ்சி விட்டுக் கிளம்பிய பின்

ளரும் கூட அவளது வரவின் வாசனை - அவளது அடுத்த வருகை வரைக்கும் என் குடும்பத்தில் அனைவரையும் கிறங்கடித்துக் கொண்டிருக்கும்.

திருச்சி வாசத்திற்குப் பிறகு நான் விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் என்று தமிழக 'மேப்'பில் இருக்கும் ஊர்கள் எல்லாம் அதனதன் இடத்தில் ஒழுங்காக இருக்கிறதா என்று ஊர்ஜிதம் செய்து கொண்டு, இதோ சென்னையில், எங்கள் தலைமையகத்தில் ஒரு நாற்காலியில் மூட்டைப் பூச்சிகளுடன் சக வாழ்வு



நடத்திக் கொண்டிருக்கிறேன்.

திருச்சியிலிருந்து நான் கிளம்புகையில், நாகவள்ளியிடம் "மறக்காமல் உன் கல்யாணத்துக்கு என்னையும் கூப்பிடும்மா!" என்று சொன்னதற்கு அதிகமாய் நாணமோ, வேறு எதுவுமோ படாமல், "நீங்கள் இல்லாமல் என் கல்யாணம் நடக்காது சார்! நீங்க வருவதற்குக் கொஞ்சம் லேட்டானாலும் 'கொஞ்சம் பொறுத்துக்குங்க மாப்பிள்ளை சார்! முக்கியமாக ஒருத்தர் வரணும். அப்புறம்தான் நீங்க தாலி கட்டணும். அவர் வரும் வரைக்கு நாம் ஜாலியாக ஒரு டூயட் பாடலாம்'னு சொல்லிடுவேன்!" என்று பளீரெனச் சொல்லிச் சிரித்தாள்.

நமக்கே நட்பு - உறவுப் பராமரிப்பில் சுவாரசியம் நீடிப்பதில்லை. அதிலும் ஆசாமி எதிரில் இருந்தால் ஒரு மாதிரி. கொஞ்சம் தள்ளியிருந்தால் வேறு மாதிரி.

சில அறிமுகங்களை ரயில் சிநேகம் என்று சொல்வது கூட ஜாஸ்தியோ என்று தோன்றும் எனக்கு.

திருப்பதியின் ஜரகண்டி நெரிசலில் யதேச்சையாகச் சிரிக்கும் மொட்டைத் தலையருக்கோ, சினிமா டிக்கெட் கியூவில் காலை மிதித்து விட்டு "சாரி!" என்று இளிக்கும் ஜீன்ஸுக்கோ வருடா வருடம் வாழ்த்துச் செய்தியா அனுப்புகிறோம்?

இப்படித்தான் பல அறிமுகங்

போட்டிக் கதை - 6

களும், நட்புகளும், ஏன் சில உறவுகளே கூட மறக்(கடிக்)கப்படுகின்றன - காலத்தின் வேகத்தில்...

நாகவள்ளியும் கொஞ்சங் கொஞ்சமாக என் நினைவுகளின் ஓரங்களுக்குள் ஒதுங்கினாள்.

நான் போகாமல்தான் அவள் கல்யாணம் நடந்தது.

திருமண அழைப்பிதழ் வந்ததும் போக வேண்டும் என்றுதான் நினைத்தேன். கடைசியில் (மாதக் கடைசி நேரம் வேறு) கல்யாணத்துக்குப் போகாமல் இருக்க எனக்கு ஒரு காரணமும் கிடைத்து - குழந்தைக்கு ஜுரமோ, அல்லது என் கண்டு விரலில் சுளுக்கோ.

குழந்தைகள் (இப்போது வளர்ந்தவர்கள்) எப்போதாவது "நாகு ஆண்ட்டி ஏம்பா இப்பல்லாம் வருவதேயில்லை?" என்று கேட்கும் அபூர்வ வேளைகளில் ஏதோ சொல்லிச் சமாளிப்பேன்.

"அவள் கல்யாணத்துக்குப் போகாமல் விட்டது அநியாயம்!" என்று மனசின் ஓர் நிழல் மூலையில் எப்போதாவது குரல் எழும்.

அந்த நாகு என்கிற நாகவள்ளியின் விண்ணப்பத்தைத்தான் இன்று நான் பார்த்



"வாஸ்தவம்! உங்களுக்குப் பத்தரை ராசியான நம்பர். ஆனா, அந்த நம்பர் உள்ள கார் கேட்டா, எப்படிங்க?"

— ஆர். வசந்த குமார்

தேன் – அக்கவுண்ட் செக்ஷன், சுப்பிரமணியன் டேபிளில்.

மதிப்பிற்குரிய ஐயா என்று ஆரம்பித்து, "என் கணவர் விருதுநகரிலேயே ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதாலும், என் குழந்தைகள் இருவரும் இங்கேயே ஒரு பள்ளியில் படித்துக் கொண்டிருப்பதாலும், என்னை இடமாற்றம் செய்யாமல், இங்கேயே நான் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டுகிறேன்" என்று முடிந்தது. டிரான்ஸ்ஃபர் உத்தரவு எல்லாம் போட்ட பிறகு வந்த இந்தக் கடிதம்.

"என்ன சார்! காப்பி ஆறிடுச்சே! சூடாக இன்னொரு கப் கொண்டாரவா?" என்று அக்கறையுடன் கேட்ட காண்டீன் பையனின் குரலில் நிலை திரும்பினேன்.

"பரவாயில்லைப்பா! இதுவே போதும்" – சர்சர்ரெனக் காப்பியை உறிஞ்சி விட்டு, காண்டீனை விட்டு வெளியே வந்தேன்.

நேராக ஆபீசரின் அறையை உத்தேசித்து நடந்து சென்றேன்.

ஆபீஸர், போன மாதம்தான் பதவி உயர்ந்து சென்னை வந்தவர். பழையவர் மாதிரி அத்தனை சுமுகம் இல்லை. "குட்மார்னிங்" என்று சொன்னால் கூடத் தலையசைத்துப் புன்னகைக்காமல் செல்லும் மேல்தட்டு ரகம்.

அனுமதி யாசித்துப் பெற்று உள்ளே நுழைந்தேன்.

"சொல்லுங்க!"

"இன்னிக்கு காலையில் டிரான்ஸ்ஃபர் ஆர்டர் ஒண்ணு தயாரிக்க அனுப்பிச்சேன்..."

"யெஸ்...!" என்றது எதிர் உருவம், தன் மூக்கைத் திருகியபடியே.

"அதிலே ஒரு சின்னத் திருத்தம். இந்தப் பெண்ணுடைய கேஸ்..." என்று நாகவள்ளியின் விண்ணப்பத்தை நீட்டினேன்.

கண்களைக் கடிதத்தின் மேலோட்டி விட்டு – "இதை ஏன் முதலிலேயே பார்க்கலை?" என்று சினம்பொங்கக் கேட்டார்.

"ஸார்! இது தவறுதலாக வேறு ஒரு செக்ஷனில் போய் மாட்டிக் கொண்டு விட்டது. யதேச்சையா நான்..."

"லுக்!" என்று நிறுத்தினார் மேலாண்மை.

மௌனித்தேன்.

"இதை என்னால் நம்ப முடியாது. யாரோ உங்களுக்கு வேண்டியவங்களுக்கு ஃபேவர் பண்ணுவதற்காக நீங்க ஏதோ லஞ்சம் வாங்கிக்கிட்டு இப்படிச் செய்யறீங்கன்னு நான் சொல்றேன்!"

நேரடித் தாக்குதல் இது. முகமழிந்ததாய் உணர்ந்தேன். தன்மானம் பாதிக்கப்பட்ட உறுத்தலில் –

நானும் குரல் உயர்த்திப் பேசினேன்,

"சார்! உங்கள் வார்த்தையை அளந்து பேசுங்கள். கண்ட இடத்தில் கைநீட்டுவதும், ஊழல் டெண்டர்கள் விடுவதுமாக இருக்கும் உங்களுக்கு, மத்தவங்களையும் ஊழல்காரனாகத்தான் தெரியும். ஒரு நேர்மையான ஊழியனை..."

மேலாண்மை எகிறியது.

"ஐ ஸே, கெட்டவுட்! சாயந்திரம் உங்களுக்கு மெமோ வரும். உங்கள் நடத்தைக்காக நான் உங்களை சஸ்பெண்ட் பண்ணிடுவேன் – ஜாக்கிரதை!" என்று சொல்லி விட்டு எழுந்து பாத்ரும் சென்று விட்டார்.

ரணப்பட்ட நெஞ்சுடன் வெளியே வந்தேன்.

உள்ளே என்ன நடந்தது என்ற ஆவல் மிக்க குரல்களைப் புறக்கணித்தபடியே வந்து, சோர்வுடன் என் ஸீட்டில் அமர்ந்தேன்.

தன்னிரக்கத்தில் நெஞ்சு கனத்தது. தலைவலி கிளம்பியது.

கொண்டு வந்த டிபன் கேரியரைத் தொடாமலேயே கழிந்தது லஞ்ச் டைம். சக ஊழியர்களின் பரிதாபப் பார்வைகள் தொடர்ந்தன.

மதியம், "மேலதிகாரியின் மரியாதையைக் குறைக்கும் வகையில் பேசி, அலுவலக நெறிமுறைகளை மீறியிருக்கிறீர்கள். உங்களை ஏன் பணியிடை நீக்கம் செய்யக் கூடாது என்று ஒரு வாரத்துக்குள் விளக்கம் அளிக்க வேண்டும்" என்று மெமோ வந்தது.

'என்ன செய்யலாம் இதற்கு? மரியாதையாக அந்த ஆபீஸர் சாந்தமாக இருக்கும் நேரம் பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டு விடலாமா? இல்லை யூனியனிடத்தில் கேஸை ஒப்படைக்கலாமா?' என்றெல்லாம் எண்ணம் கூட...

மகிழ்ச்சியின் புது வண்ணங்கள் ...

அவற்றை SSM ரவிக்கையாக அணிந்து மின்னுங்கள் !

SSM ரவிக்கைத்துணிகள்,
இத்தீபாவளிக்கு மேலும் மெருகூட்ட மோனாலிசா (ஷிஃபான்),
நைட்டிங்கேல் (2 x 2 ரூபியா) மற்றும் நந்தினி (பாலியஸ்டர்).
176 வசீகரமான வண்ணங்களில்
அணிந்து அள்ளுங்கள் உள்ளங்களை.




SSM



"பெரியவரே, என்ன வேணும்?"

"அடப்பாவி! நான் உன்னைப் பெத்த அப்பன்தாண்டா! ஏதோ அரசியல் ஊர்வலம்னு டிராஃபிக் மாத்தி விட்டாங்க, இப்பத்தான் வீடு திரும்பறேன்!"

— பா. ஜெயக்குமார்



"வணக்கம் சார்! நல்லா இருக்கீங்களா?" என்ற பெண் குரலில் தலைநிமிர்ந்தேன் – இதயமே ஒரு நிமிடம் 'பந்த்' செய்து விட்டது.

"என்னம்மா நாகு? எப்படியிருக்கிறே? திடீர்னு மெட்ராஸ் பக்கமாக காத்தடிச்சுதா?" என்று கேட்டு வைத்தேன்.

"நல்லாயிருக்கேன் சார்! விருதுநகர்லேர்ந்து கிளம்பி மெட்ராஸ் பஸ் பிடிச்சு, பஸ்ஸை விட்டு இறங்கியதுமே நேராக இங்கேதான் வர்றேன்!"

"..............."

"உங்க மனைவி, குழந்தைங்கள்ளாம் நல்லா இருக்காங்களா? குட்டிப் பசங்க ரெண்டுமே நல்லா வளர்ந்துட்டாங்களா?"

"ஆ..ங்.. வளர்ந்துட்டாங்கம்மா. காப்பி சாப்பிடறியா நாகு?" என்ற உபசரிப்பை ஒதுக்கினாள் அவள். தொடர்ந்து பேசினாள்.

"சார்! இந்த ஆபீஸ்லே நுழைஞ்சதும் உங்களைப் பத்திதான் முதலில் விசாரிச்சேன். நீங்க டிரான்ஸ்ஃபர் செக்ஷன்லதான் இருக்கீங்க என்று தெரிஞ்சதும், ரொம்ப 'த்ரில்'லாயிடுச்சு எனக்கு."

மௌனம் சாதித்தேன்.

"என் அப்ளிகேஷன் கிடைச்சுதா சார்? போன மாசமே அனுப்பி வெச்சுட்டேன். இந்த முறை ஜெனரல் டிரான்ஸ்ஃபர் பட்டியலிலிருந்து என் பேரை எடுத்துட்டீங்களா சார்? விருதுநகர்லே இருந்து என்னை மாத்தி விட மாட்டீங்களே?"

"அது... வந்து... நாகு..." என்று இழுத்தேன்.

"ம்! சொல்லுங்க சார்!"

"வந்து... உன் அப்ளிகேஷன் தவறுதலாக வேற ஒரு செக்ஷன்லே மாட்டிக்கிச்சு. இன்னைக்குத்தான் என் கண்ணில் பட்டது. ஆனால் அதற்குமுன்பே ஆர்டர் எல்லாம் போட்டு, ஆபீசர் கையெழுத்துக்காக அனுப்பியாச்சு. சாரி.. நாகவள்ளி! உனக்கு விருதுநகர் லேயிருந்து, கோயம்புத்தூர் ஆபீஸுக்கு மாற்றல் போட்டிருக்கு!"

"என்ன சார்.. சொல்றீங்க. நிஜமாவா..?" என்று தடுமாறிய நாகவள்ளியின் முகத்தில் திகில் திரை விரித்தது.

"ஸாரிம்மா! விஷயம் என் கை மீறிப் போயாச்சு. கடைசி நேரத்துலே உனக்காக நான் ஆபீஸர்கிட்டே வாதாடி, எனக்கு மெமோ கூட குடுத்திட்டாங்க..."

"நிறுத்துங்க சார்!" என்று குரலுயர்த்தினாள் நாகவள்ளி, இதுவரை நான் அறியாத உக்கிரமூர்த்தியாய்.


அயர்ந்து போய் அவள் முகம் பார்த்தேன். அந்த செக்ஷனின் அத்தனை டேபிளுக்கும் முகம் முளைத்து எங்களைக் கவனித்தன.

"நான் கேள்விப்பட்டது சரியாப் போச்சு சார்! எங்க ஆபீஸ்லே அப்பவே சொன்னாங்க. மெட்ராஸ் ஹெட் ஆபீஸ்லே எல்லாம் பெருச்சாளிங்க. சும்மா அப்ளிகேஷன் அனுப்பிட்டு உக்காரக் கூடாது. நேரே போய் 'சம்திங்' கொடுத்து கவனிச்சாத்தான் எதுவும் நடக்கும்னுட்டு. என் போறாத நேரம், எனக்கு டயம் கிடைச்சுக் கிளம்பி வரக் கொஞ்சம் நாள் பிடிச்சுது. இங்கே அதுக்குள்ளே எல்லாம் முடிச்சுட்டு, கூசாமல் பொய் வேற சொல்றீங்க, என் அப்ளிகேஷன் உங்க கைக்கே வரலைன்னு."

"இதோ பாரும்மா நாகவள்ளி..." என்றேன் அதட்டலாக.

அவள் அசரவில்லை.

"சும்மா இருங்க சார்! ஹெட் ஆபீஸ் லட்சணம் என்னான்னு இப்பத்தான் தெரிஞ்சுக் கிட்டேன். பல நாள் அண்ணன், தங்கையாய்ப் பழகியிருந்தது கூட மறந்துட்டுது இல்லே சார்! இப்ப நான் சொல்றேன் சார்! யாரோ விருது நகர் வேணும்னு பிரஷர் கொடுத்தவங்ககிட்டே லஞ்சம் வாங்கிக்கிட்டு, என்னை அங்கயிருந்து கிளப்பிட்டீங்க! என்னை நேர்ல பார்த்ததும் நீலிக்கண்ணீர் கொட்டறீங்க! நான் வந்து உங்க எதிரே நின்னப்பவே உங்க முகம் பேயறைஞ்ச மாதிரியாச்சே! அப்பவே ஏதோ விவகாரம்னு புரிஞ்சுடுச்சி சார்! ரொம்ப சந்தோஷம் சார்... என் வயித்தெரிச்சல் என்னிக்கும் போகாது!" என்று நெருப்பாக வார்த்தைகளைக் கொட்டி விட்டுக் கண்ணகி போல், அந்த ஆபீஸை அதிரும்படிக் கிளம்பிச் சென்ற நாக வள்ளியைப் பார்த்தபடியே உறைந்து போயிருந்தேன், வெகு நேரம்.



* முத்து (படம் உதவி : ரஜினி ரசிகன்)

ஷார்டு கோடம்பாக்கம்...



* குருதிப் புனல்

வருஷம் முழுக்கப் படங்கள் ரிலீஸ் ஆகிக் கொண்டே இருந்தாலும் தீபாவளி ரிலீஸுக்கு மவுசு ஜாஸ்தி. பெரிய தலைகள் களத்தில் இறங்கிப் போட்டி போடும் 'பாக்ஸிங் ரிங்' அது.

இந்த தீபாவளிக்குக் கிட்டத்தட்ட பத்து படங்கள் ரிலீஸ் ஆகின்றன. ரீ-ரெக்கார்டிங், சென்ஸார் போன்ற இறுதிக் கட்ட சடங்குகள் முடிவடைகிற வேகத்தைப் பொறுத்து இந்த எண்ணிக்கையில் சில கூடவோ குறையவோ செய்யலாம்.

முத்து

ரஜினி படம். பரபரப்பாக நாடு முழுதும் எதிர்பார்க்கப்பட்டு வரும் படம். ஆரம்பத்தில், மலையாளத்தில் மோகன்லால் நடித்த 'தேன்மாவின் கொம்பத்' படத்தைத்தான் ரீ-மேக் செய்வதாகச் சொன்னார்கள். இடையே ஜெயலலிதாவால் ரஜினி வம்புக்கு (அதாவது அரசியலுக்கு) இழுக்கப்பட, படத்தில் நிறைய அரசியல் எஸென்ஸ் தெளிக்கப்பட்டிருப்பதாகக் கேள்வி. மீனா ஹீரோயின் என்பது தெரிந்த சேதி. ரஜினியுடன் வெற்றிகரமாக மூன்றாவது முறையாக ஜோடி சேரும் 'மகா பாக்கியம்'- அவருக்கு.

மூல - மலையாளக் கதையில் ஹீரோவுக்கு இணையாக - கனமான ரோலில் நெடுமுடி வேணு நடித்திருந்தார். இங்கே ஹீரோ ரஜினி என்பதால் இரண்டாவது ஹீரோவுக்குப் படத்தில் எது வாய்ப்பு?



• ஆயுத பூஜை

ஆகவே, நெடுமுடி வேணு நடித்திருந்த ரோலில் நடிக்கக் கேட்டபோது அரவிந்தசாமி, ராஜ்கிரண் இருவரும் சலாமிட்டு, மறுத்து விட்டதாகப் பேச்சு. மெய்யாவா?

தொடர்ந்து வெற்றிப் படங்களாகத் தந்து கொண்டிருக்கும் கே. எஸ். ரவிகுமார் இதன் இயக்குநர் என்பது விசேஷம். கூடுதல் விசேஷம் - ஏ. ஆர். ரகுமான்!

குருதிப் புனல்

இது கமல்ஹாசன் படம். முதல் முறையாக அர்ஜுனுடன் இணைந்திருக்கிறார் என்பதும் இந்தியாவிலேயே முதல் முறையாக டால்ஃபி சவுண்ட் ஸிஸ்டம் இந்தப் படத்தில் அறிமுகமாகிறது என்பதும் படத்தின் சிறப்புகள். ஒளிப்பதிவில் சில சிகரங்களைத் தொட்டிருக்கும் பி.சி. ஸ்ரீராம் இயக்கும் இரண்டாவது படம் இது. அவரது முதல் படம் 'மீரா'- அதன் ஒளிப்பதிவிற்காகப் பேசப்பட்ட அளவுக்கு இயக்குநராக அவருக்குப் பெரிய பெயர் ஏதும் வாங்கித் தரவில்லை.


ஆனால் மிகச் சிறந்த தொழில் நுட்ப வல்லுநரான ஸ்ரீராம், கமலுடன் இணைகிற இந்தப் படம், ஆங்கிலப் படங்களுக்கு இணையான காட்சி அமைப்புகளைக் கொண்டது என்று உறுதியாகச் சொல்லலாம்.

தொலைக்காட்சிகளில் தொடர்ந்து காட்டப்படும் ட்ரெய்லர் சாட்சி!

கமலின் ஆஸ்தான ஹீரோயின் கௌதமிதான் இதிலும். படத்தில் பாடல்கள் இல்லை! (இசை - நம்மவர் மகேஷ்)

மக்கள் ஆட்சி

ஆர்.கே. செல்வமணி இயக்கத்தில் மம்முட்டி நடித்து வெளிவரப் போகிற இந்தப் படத்தில் அரசியல் நெடி எக்கச்சக்கம்! பிக்-பாக்கெட்டாக இருக்கும் மம்முட்டி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பெரிய கிரிமினலாகி (அதாவது அரசியல்வாதி) விடுகிறார். முதலமைச்ச


• ரகசிய போலீஸ்

ராகவே அவரை ஆக்கி விடுகிறது ஊழ்வினை! இவர் அரசியலைத் தூய் மைப்படுத்துகிறாரா, அது இவரைத் 'தூய்மை'ப் படுத்துகிறதா என்பது தான் கதை.

மம்முட்டியின் காதலி யாக ரோஜா, மனைவி யாக ரஞ்சிதா. அஞ்ஞாத வாசத்தில் இருக்கும் ஐஸ் வர்யா இந்தப் படத்தில் ஒரு பாடலுக்குத் தலை காட்டுவது இதில் விசே ஷம்.

ரொம்ப நாளாக 'வரப் போகிறது வரப்போகி றது' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார் கள். "சத்தியமா தீபா வளிக்கு வந்துரும் சார்" என்றார் யூனிட் ஆள் ஒருத்தர். சத்தியம் ஜெயிக் கட்டும்!

ரகசிய போலீஸ்

எல்லா வகையிலும் எம்.ஜி.ஆரைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கும் சரத் குமாரின் இந்த மாத ரிலீஸ் - ரகசிய போலீஸ். இந்தி-தமிழ்-தெலுங்கு என மூன்று மொழிகளில் ஒரே சமயத்தில் ரிலீஸ் ஆகிறது.

ஜேம்ஸ் பாண்ட் ரகப் படம். பெண் முதல் மந்திரியைத் தீர்த்துக் கட்ட முயலும் தீவிர வாதக் கும்பலை ஒழித்து, முதல்வரைக் காப்பாற்றும்(?) போலீஸ் அதிகாரியின் கதை என்பது படத்தின் ஒன்-லைன்.

திரைப்படக் கல்லூரி மாணவர் இளவரசன் இயக்கும் இந்தப் படத்தின் பாடல் காட்சிகள் பிரான்ஸிலும் ஸ்விட்சர்லாந்திலும் படமாக்கப்பட்டுள்ளன.

ஆயுத பூஜை

தீபாவளிக்கு, குருதிப்புனல் தவிர அர்ஜுன் நடித்த இந்தப் படமும் வெளி வருகிறது! கிராமத்துக் கதை. ஊர்வசி-ரோஜா என இரண்டு ஹீரோயின்கள். மலையாள திலகன் (ஞாபகமிருக் கிறதா சத்ரியன்?) வில்லனாக நடித்திருக்கிறார். பாக்யராஜின் சிஷ்யர் சிவகுமார் இயக்கும் இப்படத்தின் இசை வித்யாசாகர்.

"நூற்றுக்கணக்கான படங்கள் பொள்ளாச்சியில் படமாக்கப் பட்டிருந்தாலும் இதுவரை காட்டாத லொக் கேஷன்களை அந்தப் பகுதி யில் - இந்தப் படத்தில் பார்க்கலாம்" என்று அடித் துச் சொல்கிறார் படத்தின் பி.ஆர்.ஓ., செல்வம்.

மாமன் மகள்

இது சத்யராஜ் படம். சத்யராஜ் - மீனா காம்பினே ஷனில் (தாய்மாமன்) குருதன பால் இயக்கும் படம். ஆதித் யன் இசையில் வட இந்திய, பிரபல பாடகர் குருதாஸ் மான் இதில் ஒரு பாடல் பாடி, ஆடி இருக்கிறா ராம்!

ஜெயசித்ரா - மணிவண் ணன் ஜோடியின் பெண் மீனா. பெண்ணும் அம்மா வைப் போலவே பணத்திமிர் பிடித்தவர். "பொய் சொல்லி, என் மகளை மணந்து, அவள் பணத்திமிரை அடக்கு" என்று அப்பா மணிவண் ணன் சொல்ல...

நமக்குத் தெரியாத மீதிக் கதையிலாவது புதுமை இருக்குமென நம்புவோம்!

மேலே குறிப்பிட்ட படங்கள் தவிர பிரபுதேவா-நக்மா நடித்த 'லவ் பேர்ட்ஸ்', பாரதிராஜாவின் 'அந்தி மந்தாரை', பாக்யராஜின் 'ஞானப்பழம்' (சூப்பர் டைட் டில் இல்லை?) விஜயகாந் தின் 'தாயகம்' இவையும் தீபாவளிக்கு வரலாம் என்று பேச்சு இருக்கிறது. வருவ தற்கு எத்தனை சதம் வாய்ப் புள்ளதோ அதே அளவுக்கு வராமலிருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது.

எது எப்படியோ- பத்தில் அஞ்சு பழுதில்லாமலிருந் தால் நமக்கும் மகிழ்ச்சி தான்!

- ஜி.எஸ்.எஸ்.




மூன்று புண்ணிய நதிகள் கலக்கும் இடத்திற்குத் திரிவேணி சங்கமம் என்று பெயர். பல ஜன்மங்களில் செய்த பாவங்களும் அங்கு நீராடினால் இல்லாமல் போகும் என்பது ஐதிகம். ஆனால் அடிக்கடி அங்கு போய் எப்படி நீராடுவது? நாம்தாம் அடிக்கடி பாவம் செய்கிற பழக்கம் உடையவர்கள் ஆயிற்றே! திரிவேணி சங்கமத்தில் குளித்து முடித்து ரயில் ஏறும்போதே பாவம் செய்கிறவர் பலர் உண்டே! இந்தப் பிரச்னைக்கு விடிவு கண்டவர் ஆதி சங்கர பகவத் பாதர். அம்பிகையின் அழகான விழிகளை நோக்கினார். ஜலம் கோத்த ஈரப்பசையுடன் எப்போதும் அது இருப்பதால் அதுதான்

கொக்கின் கீழே குயில்!

திரிவேணி சங்கமம் என்றார். கங்கை, யமுனை, சோனா நதிகள் கலக்கும் இடத்தில் மூன்று நிறங்களில் கலக்கிற மாதிரி அம்பிகை விழியிலும் மூன்று வர்ணங்கள் கலக்கிற அழகை அவர் வர்ணித்தார். பரந்த வெண்மை, அதன் இடை இடையே சிவந்த கோடுகள், மத்தியில் கருமைமிக்க விழி மணிகள் என்று, கருமை வெண்மை, செம்மை கலக்கும் அம்பிகையின் ஈரம் கோத்த விழிகள் சகல பாவங்களையும் போக்கும் திரிவேணி சங்கமம் என்று அதில் நீராட நம்மை அழைப்பார் ஆதிசங்கரர்.

அட்சம் என்ற வடமொழிச் சொல் கண்களைக் குறிக்கும். கண்கள் அழகு காரணமாகவே நிறைய பெயர் பெற்றவள் அம்பிகை. அவை நீலோத்பலம் போன்ற விழிகள் - எனவே நீலாயதாட்சி; விசாலமானவை. எனவே விசாலாட்சி; மீன் போன்றவை - எனவே மீனாட்சி; விருப்பம் தருபவை - எனவே காமாட்சி.

கச்சிப் பதிவாழ் காமாட்சி அம்மைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அங்குள்ள சிவாலயங்களில் தனித்தனியாக அம்பிகை சந்நிதி கிடையாது. சகல ஆலயங்களின் அருட் சக்தியாகவும் உறைபவள் அம்பிகை காமாட்சிதான். 'கா' - சரஸ்வதி; "மா" - லக்ஷ்மி. இருவரையும் கண்களாக உடையவள் காமாட்சி என்றும் விளக்கம் கூறுவர். அன்பர் விருப்பம் நிறைவேற்றும் அருள்விழிகள் என்பதே அவள் கருணைக்கு அடையாளம்.



சுந்தரமூர்த்தி நாயனார் ''திருவொற்றியூர் எல்லையைத் தாண்ட மாட்டேன்'' என்று சிவபெருமான் மீது சத்தியம்

சுகி சிவம்



"திடீர்னு நெஞ்சு வலிக்குது டாக்டர்?"
"உங்க வீட்டுல ஏதாவது ரெய்டு, கிய்டு நடந்திச்சா?"
— சீர்காழி வி. ரேவதி

பண்ணி விட்டு எல்லை கடந்தார். விழிகள் போய் விட்டன. அவரும் விடாக்கண்டர்; சிவனும் கொடாக்கண்டர். பாட்டாலேயே சிவ பெருமானைத் திட்டித் தீர்த்தார். பற்பல ஆலயங்களில் பாடிப்பாடி கேட் டார். பயன் இல்லை. கடைசியில் காஞ்சி வந்து, காமாட்சி யிடம் கரைந்து வேண்டினார். அங்கிருந்து ஏகாம்பரரைத் தரிசிக்கப் போவதற்குள் - சுந்தரருக்குக் கண்கொடுக்கும்படி அம்பிகை யின் 'அட்வைஸ்' சிவனுக்குப் போய்ச் சேர்ந் தது! என்ன குழப்பமோ! என்ன பிரச்னையோ தெரியவில்லை! சிவனுக்குக் கோபம் இன்னும் குறையவில்லையோ என்னவோ! கண்கள் வர வில்லை. சட்டென்று அம்பிகைக்குரிய இடப் பாகத்தின் கண் தெரிந்து விட்டது! அவ்வளவு தான்! திருவாரூர் இறைவரிடம் வலக் கண்ணை யும் சண்டை போட்டே வாங்கிக் கொண்டார் சுந்தரர்! கரை கடந்த கருணைக் கடல் காமாட்சி என்பதற்கு இதைவிட என்ன உதாரணம் தேவை!

ஆகாச பூபதி என்கிற அரசர் காஞ்சியை ஆண்ட போது அவரது பக்தி காரணமாக விநாயகரே அவருக்குப் பிள்ளையாகப் பிறந்து விளையாடினார் என்று ஒரு கதை உண்டு. மழையின்றி வருந்திய மன்னர், யாகங்கள் செய்து பூஜைகள் நடத்தி சுமங்கலி பூஜை செய்த போது காமாட்சியே பந்தியில் அமர்ந்து உணவு கொண்டாளாம். ஆகாச பூபதியின் பிள்ளையாகக் கிடந்த பிள்ளையார் மட்டும், பந்தியில் இருந்த சொந்தத் தாயை, பராசக்தி யைப் பார்த்துப் பார்த்து கை கால் உதைத்து அடிக்கடி சிரித்தார். இந்தப் பிள்ளை காட்டிக் கொடுத்து விடுமோ என்று அம்பிகைக்குக் கொஞ்சம் கவலை.


படைத்த விருந்தை வாயில் வைத்து அம் பிகை சுவைத்த சமயம் 'நறுக்' என்று பல்லில் ஏதோ தட்டுப்பட, அது அரிசியின் கல் அல்ல. அரசியின் நகையில் ஒரு கல்! உணவு தயாரிக் கும் போது தரமாக இருக்கிறதா என்று மூலப் பொருட்களை அரசியார் சோதித்த போது அவள் கை நகையில் இருந்து தங்கமணி ஒன்று தானியத்தில் விழுந்து கலந்து அம்பிகை இலை யில் வந்து சேர்ந்தது! அதற்குள் பிள்ளையார் தவழ்ந்து தவழ்ந்து அம்பிகையை நோக்கி வர, பனிச்சென்று அம்பிகை மறைய, அரசமாதேவி யின் சிறிது தங்கம் அவள் உடன் மறைந்தது!

பெற்றதைக் காட்டிலும் பன்மடங்கு திருப் பித் தரும் பராசக்தி தங்க மழையே காஞ்சியில் பெய்வித்து, மக்கள் மனத்தையும், மண்ணையும் ஒருசேரக் குளிர்வித்தாள் என்று ஒரு கதை உண்டு. அவ்வளவு கருணைமிக்க கண்ணழகு மிக்கவள் காமாட்சி!

விரும்பியதை வழங்கும் விழியழகி காமாட்சி திருக்கோயில், விருப்பத்தை வென்ற துறவியர் நிர்வாகத்தில் இருப்பது இனிய முரண்பாடு. அது இறைவன் ஏற்பாடு. கும்ப நிகும்பர்களை வெல்லும் பொருட்டு, கௌசிகி என்ற உக்ர சக்தியை வெளிப்படுத்திய காமாட்சி, உக்ர நிலையில் இருந்தாள் என்றும், அப்போது காபாலிகர்கள் அம்பிகைக்கு நரபலி கூட வழங்கினர் என்றும் தகவல் உண்டு. பின் னர் இங்கு எழுந்தருளிய ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்ரீசக்ர பிரதிஷ்டை செய்து சௌமிய (சாந்த) சக்தியாக அம்பிகையை அமர்த்தினார் என்பர். அது முதல் காஞ்சி, சங்கரர் வழி வந்த ஆசார்ய மூர்த்திகளின் அருளாட்சியில் இருக்கிறது!

இருபத்து நான்கு தூண்களைக் கொண்ட காயத்ரீ மண்டபத்தில், பஞ்ச பிரம்ம பீடத்தில், பத்மாசனக் கோலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கிறவள் அன்னை காமாட்சி. அங்குசம், பாசம், புஷ்பபாணம், கரும்புவில் ஏந்தும் நான்கு கரங்களுடன் அமைந்தவள் காமாட்சி. மன்மதனை விழிகளால் வென்று அவன் கரும்பு வில்லை வெற்றியின் அடையாளமாகச் சிவபெருமான் பெற்றார். அவரையே தன் அழ கால் வென்றதன் அடையாளமாகக் கரும்பு வில் பெற்றவள் காமாட்சி.

கச்சிக்குக் காமாட்சி வந்ததே ஒரு பெருங் கதை. ஒருமுறை சிவபெருமான் விழிகளை அம் பிகை விளையாட்டாகப் பொத்தினாள். அதன் விளைவு விபரீதமாகப் போனது! சூரிய சந்திரர் தடுமாற, காலம் கணக்கிழக்க, பிரபஞ்சம் நிலை குலைந்தது! அனைத்துலகும் அந்தகாரம் சூழ - சகல தேவரும் தத்தம் பணிகுலைய - பல குழப்பம் நேரிட்டது. கழுவாய் வேண்டி பெரு மானிடம் பிராட்டி வேண்ட, பூமியில் சென்று



என் சிநேகிதியிடம்
சொன்னேன்,
"போதும், உன்
பணம் வீணாவதை
நிறுத்து" என்று

விலை குறைவாக தோன்றும் பேண்ட்டிகளை வாங்கிடும் விருப்பம், புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால், பின்பு தெரியவரும் அதன் கஷ்டங்கள்: உடலை உறுத்திப் பிடிக்கும் எலாஸ்டிக்.



சாயம் போகுதல். துணி தளர்ந்து தொங்கிப் போகுதல். இதில் கவனிக்க வேண்டியது, நீங்கள் இந்த அவதிகளுக்கு உட்படவே வேண்டாம்.

காரணம்: "யூ" எனும் ஒரு பேண்ட்டி இப்போது கிடைக்கிறதே! மகளிருக்கான இளம் கலர்கள். இறக்குமதி செய்யப்பட்ட "ஃப்ரீல்டு" ரப்பர் எலாஸ்டிக். மிருதுவான, 100% தூய்மையான உயர்தர பருத்தியிலிருந்து தயாரிப்பு. உங்கள் உடல்வாகுடன் அணைந்து கொடுத்திடும் தன்மை. அதற்கேற்றபடி நீண்-டு-வ-ளை-ந்-து கொடுக்கும் எலாஸ்டிக் மற்றும் துணி. ஆனாலும் துவைத்தல் பலமுறைகளுக்கு பின்பும் தளர்ந்து போகாது. மொத்தத்தில், பேண்ட்டிகளுக்கு ஆகும் செலவு உண்மையில் குறைவு.

"யூ" இருக்கையில் வேறெந்த, மட்டமான பேண்ட்டிகளை வாங்கி காசு ஏன் வீணாக்க வேண்டும்!

you®

100% பருத்தித்துணி பேண்ட்டிகள்

உடலுக்கு நல்ல சுகம்.
பணத்திற்கு நல்ல பலன்.

ஒரு tt தயாரிப்பு

Distributors in the Middle East : * GULF IND International Co., P.O. Box. 14730, Doha, Qatar. Ph : 974-417606, 428944, Fax : 974-442199, 328770. * AL-BARAHA For Readymade Garments and shoes Est., P.O. Box. 23967, Safat, Kuwait.

Trikaya Grey MAS TTI 6/96



தம்மைக் குறித்துத் தவம் இயற்ற ஆணை விட்டார் இறைவர்.

பிரம்மபுரம், விஷ்ணுபுரம், சிவபுரம், காம பீடம், கன்னிகாப்பு, ஆதிபீடம், மும்மூர்த்தி வாசம், தண்டகபுரம், துண்டீரபுரம், புவன சாரம், கலிசித்து, லயசித்து, சகல சித்திபுரம் என்ற பல பெயர் தாங்கிய காஞ்சியம்பதியில், ஐப்பசி மாதப் பூரத் திருநாளில், பிலாகாசம் என்னும் துவாரம் வழியாக அம்பிகை வெளிப் போந்தாள். ('பிலம்' என்றால் குகை; 'ஆகாசம்' என்றால் வெளி) பெருமான் வழங்கிய இருநாழி நெல்லைக் கொண்டே முப்பத்தி இரண்டு அறங்களையும் முடித்து, அறம் வளர்த்த அன்னையாகி, அருந்தவம் செய்தாள். காஞ்சியின், கம்பையாற்றங்கரையில், மணலால் சிவலிங்கம் அமைத்து, வேதமே வடிவாகிய ஒற்றை மாமரத்தின் கீழ் மனமுருகி வழிபட்டாள் காமாட்சி.

காலம் கனிந்தது; அம்பிகையின் ஆழ்ந்த தவம் கலைக்க எண்ணிய சிவபெருமான் 'கொட்டிச் சேதம்' என்னும் நடனம் நிகழ்த்தினார். தவம் கலையவில்லை. உடன் கங்கை உள்ளிட்ட உலகில் உள்ள சகல தீர்த்தங்களையும் கம்பை ஆற்றில் ஓட விட, வெள்ளம் பெருகி விளையாடியது! பதறித் தவம் கலைந்தார் பார்வதியார். பெருமானின் மணலால் அமைந்த திருமேனி வெள்ளத்தால் கரையக் கூடாதே என்று கவலைப்பட்டு, பெருமானை இறுக்கித் தழுவினார்! அம்பிகையின் வளையல் தழும்பும், திருமார்பு பதிந்த தழும்புமாக இறைவர் காட்சி தந்து, "வளைத் தழும்பர், முலைத் தழும்பர்" என்று திருப்பேர் பெற்றார் என்கிறது காஞ்சிப் புராணம். உலகின் சகல தீர்த்தங்களும் ஓடியதால் உலகாணித் தீர்த்தம் உயர்ந்த தீர்த்தம் ஆயினது. இத்தீர்த்தம் பஞ்சகங்கை என்றும் அழைக்கப்படுகிறது!

பிருகு முதலான நாற்பத்தெண்ணாயிரம் மகரிஷிகள் காஞ்சியில் வந்து பிரஜை ஆயினர் என்றும் காஞ்சியில் பிறப்போர் எல்லோருமே ரிஷிகள் என்றும் ஒரு கதை உண்டு. முக்தி அடையும் போது உடம்பில் உள்ள ஒன்பது துவாரங்கள் வழியாகவும் உயிர் பிரியாது, கபாலத்தைப் பிளந்து வந்தால் கபால முக்தி எனப்படும். அதுவே கேசாந்த முக்தி எனப்படும். எல்லாத் தலங்கட்கும் சிரசு (கேசம்) காஞ்சி என்பதால் இங்குள்ள எல்லா உயிர்களும் கேசாந்த முக்தி பெறுகின்றன. அதனால் இங்கு இறந்தவர்களை எரிக்கும் போது தலை வெடிப்பது இல்லை என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது!

இந்தக் காமாட்சியைப் பாடிய போது நகைச்சுவை உணர்வுடன் பாடியவர் காளமேகப்புலவர். அம்பிகை குரல் இனிமை கருதி குயில் என்றார். அந்தக் குயில் எங்கிருக்கும்? மரத்தின் மேல் இருக்கும். இந்தக் குயிலோ கொக்கின் கீழ் இருக்கும் குயில் என்றார். கொக்கு என்றால் மாமரம். மாமரத்தின் அடியில்தானே அம்பாள் தவம் இருந்தாள்! கொக்கின் கீழ் இந்தக் குயில் ஏன் வந்தது தெரியுமா? 'காக்கைக்கு!' என்றார் கவி. காப்பாற்றுவதற்கு என்று ஒரு பொருள். காக்கை, கொக்கு, குயில் என்று பறவையாக வரும்படி பாடியது சாமர்த்தியம். "காக்கைக்கொரு கொக்கின் கீழே இருக்கும் கருங்குயிலே" என்றார்.

"சிங்கத்தை வெல்லும் சரபப் பட்சியாகிய சிவபெருமானின் வலிமையான மேனி எவ்வாறு குழைந்தது? உலகை ஆக்கி (படைத்து) பெருக்கி (வளர்த்து) முப்பத்திரண்டு அறம் வளர்த்து, அன்னமிட்டு காக்க என்றே ஒரு கொக்கின் கீழ் (மாமரத்தின்) இருக்கும் கருங்குயிலே" என்கிற பொருளில்,

"மாக்கைக் கிரங்கும் குருகும் வளர்சக்ர வாகப்புள்ளும்
தாக்கச் சாபம் குழைந்த(து) எவ்வாறு சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருவறச் சாலையில் அன்னமிட்டுக்
காக்கைக் கொரு கொக்கின் கீழ் இருக்கும் கருங்குயிலே

என்று பாடினார் காளமேகப் புலவர்.

இன்றைய சூழ்நிலையில்
- ஒவ்வொருவரும்
விபத்துக் காப்பீடு
செய்ய வேண்டியது
ஒரு சேவை அல்ல.



தன்னை நம்பி
இருப்பவர்களுக்கு
செய்யும் முக்கிய கடமை.

உங்கள் கடமையைச் செய்ய

மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ்

பெருமையுடன் அறிமுகப்படுத்தும் 10-வது திட்டம்


ஜீவன் விருட்சம்

ஒரு யூனிட் விலை ரூ.2100/-தான்



பலன்கள்

- விபத்துக் காப்பீடு ரூ 1 லட்சம், தொடர்ச்சியாக 6 ஆண்டுகளுக்கு
- 3 செண்ட் சொந்த நிலப்பட்டா (ரிஜிஸ்டிரேஷன் செலவு நீங்கலாக)
- ரூ 75000/-* மதிப்புள்ள தேக்குப்பத்திரம் 20 ஆண்டின் முடிவில்



* in association with The Oriental Insurance Co. Limited

மேலும் விவரங்களுக்கு: அணுகவும்:

GROWTH ECOLOGY SECURITY

மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்

7-B ஸ்பென்ஸர் பிளாசா (2-வது மாடி) 769 அண்ணா சாலை, சென்னை 600 002
போன்: 8521417, 8520109 ஃபேக்ஸ்: 044-8522148

YOGA SAVITH

சாய முகங்கள்

தோப்பில் முஹம்மது மீரான்

ஐம்பது, அறுபது ஆண்டுகளாக நச்சுக் காற்றையே சுவாசித்து நரகித்து வாழ்ந்ததில் இப்போது எஞ்சியிருப்பது உயிர் மட்டும். அந்த உயிரையும் கொண்டு நினைவிலிருந்து எப்போதோ நீங்கிவிட்ட பிறந்த கிராமத்திற்கு இரயில் ஏறும் போது, நகர வாழ்க்கையே இனி வேண்டாமென சபதம் செய்தார். எவ்வளவு சீக்கிரம் நகரைவிட்டுப் போக வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாகப் போவதற்கு முதலில் செல்லும் ரயிலிலே ஏறிவிட்டார்.

விடிந்தால் அனுபவிக்கப் போவது கிராமத்துப் பச்சை இலைக் குளிர்ச்சியும் தூய்மையான தென்றலும் என்ற பெருமிதம். எப்போதும் போல் படுத்து விட்டார். ஆனால் படுத்ததும் உறக்கம் மூடவில்லை. அவர் நிரந்தரமாகத் தங்கச் செல்லும் கிராமச் சூழலைக் கற்பனையில் வரைய முனைந்தார்.

'இனி மிதிக்கமாட்டேன்' என்று சபதம் செய்து, முன்பு வெளியேறிய கிராமம். இன்று அவருக்கு ஒரு நினைவுப் புள்ளி மட்டுமே. முகங்கள் இருந்திருந்த கிராமத்து மனிதர்களுக்கு இன்று அவர் நினைவில் முகங்கள் இல்லை. அங்கு இருந்திருந்த முடுக்குகளும் இடை வழிகளும் மணல் திட்டைகளும் வரப்புகளும் அவரைப் பொறுத்த மட்டில் புதை பொருட்களாகி விட்டன. சில மட்டும் பச்சையாகவே நிற்கின்றன. அலறி அலை எழுப்பிக் கொண்டிருந்த கடல், பாலம், அதற்கடியினூடே ஓடிக் கொண்டிருந்த எலப்ப வீட்டு கை ஆறு...

கடற்கரைச் சீனி மணலில் புரண்டது; கடக்குளி பெரு நாட்களில் கடலில் குளித்தது; வெள்ளாம்பல் பூக்கள் பூத்து, இலைகள் மிதந்து கிடக்கும் எலப்ப வீட்டு கை ஆற்றில் குளித்தது; பாறைகள் மீது வெள்ளாரம் கல்லால் சித்திரங்கள் வரைந்தது... இழப்புகள் நெஞ்சில் ஏக்கக் குமிழ்களை உருவாக்கியது.

இடுக்கமான குளியல் அறையில் சொட்டுச் சொட்டாக வடியும் உப்பு நீரில் குளித்து வந்த, பின்னிட்டுச் சென்ற ஆண்டுகளை நினைக்க, பயமாகவே இருந்தது. வெள்ளாம்பல் பூத்து நிற்கும் எலப்ப வீட்டு ஆற்றுத் தெளிநீரில் கண் சிவக்க மூங்கிக் குளிக்க ஆவல் வந்தது.

இரயில் இறங்குமிடத்திலிருந்து வேறு ஒரு பஸ் ஏறிப்போக வேண்டுமென்று நண்பர் ஒருவர் மூலம் ஊருக்கு வழிகேட்டுத் தெரிந்து கொண்டார். மொரார்ஜிதேசாய் துவக்கி வைத்த இரயில், அந்தக் கிராமம் வழியாகச் செல்லவில்லை என்று அறிந்து மகிழ்ந்தார்.



தங்கி வந்திருந்த பழைய அடுக்கு மாடிக் கட்டடத்தின் கொல்லைப்புறமாகப் பூமியை உலுக்கிச் செல்லும் இரயிலின் ஊத்தும், விசை அமறலும் இரவு பகலாகக் கேட்டுக் கேட்டு, செவிப்பறை நொறுங்கியே போச்சு. இனி எஞ்சியுள்ள காலம், கடல் காற்றின் ஈரக்குளிர்ச்சி நல்கும் சிலிர்ப்பில் ஆற்றுத்தெளி நீரில் மூங்கிக் குளித்துக் கொண்டு 'என்னாண்டவனே' என்று சுகமாக வாழலாம். கிராமத்துக் கன்னி அழியாத சூழலில், கடலிலிருந்து பிடித்து வரும் மீன்களைச் சாப்பிட்டு!

அவளிப்போது பேரப்பிள்ளைகளுடன் எங்கு வாழ்கிறாளோ? அதே கிராமத்திலோ, வேறு ஊரிலோ? எலப்ப வீட்டு ஆற்றிலிருந்து குளித்து வந்த அவளைப் பார்த்தவினாடி, மனத்தில் சுழன்று அடித்தப் புயலில் அன்று அது நிகழ்ந்து போனது. உணர்ச்சி வேகத்தின் விளைவு.

அவளுடைய கூக்குரல் கேட்டதுதான் தாமதம். விட்டில் போல் ஒரே கூட்டம்; காக்கான் குளம் வழியாக சேன்டைப் பள்ளிப் பாறை ஏறி, இறங்கி உசரத்துவிளை கோயில் முன் வந்த போது, கல்ரோட்டில் சந்தையிலிருந்து திரும்பிய பார வண்டிகளின் கடகட சப்தம். அங்கிருந்து கீழ்க்குளம் வாய்க்கால் கரையோரமுள்ள ஒற்றையடி கருக்குப்பாதை வழியாக போய்ச் சேர்ந்தது கருக்கலில்! அப்போது சந்தையில் சன சந்தடி இல்லாமலிருந்தது.

அன்றைய தொங்கலோட்டம், ஊரை வெறுத்துக் கொண்டுள்ள நீண்டகால வெளியேற்றம்.

எப்படி நாலு மனுச முகங்களை நிமிர்ந்து பார்ப்பது?

அப்படி இந்தப் பெரு நகரத்திற்கு வந்து, கன்னி கம்பில் சேக்கையேறியதே பெரும் கதை. குடியிருந்தது வீடா? ஒரு குருவிக் கூண்டு. சமைப்பதும், சுருண்டுறங்குவதும் வெளிக்காற்று புகாத ஒரு நரகக் குழியில். மின்தடைபடும் போதெல்லாம் கிடந்தது, நூற்றாண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டுப்போன காட்டுப் புதர்கள் நிறைந்த ஒரு சுரங்கத்திற்குள். இடிந்து விழும் நிமிடத்திற்காகக் காத்துக் கிடக்கும் ஒரு இதிகாசகால கட்டடத்தின் நான்காவது மாடிக்கு ஏறிச் செல்லும் படிகளுக்கடியிலுள்ள இடுங்கிய இருட்டறை அது. ஆட்களின் கால் மிதிபடும் போது ஆட்டம் காணும் மரப்படிக்கட்டு, அதன் மேற்கூரை. புலரும்போது தான் உயிரோடு இருக்கிறோம் என்ற நிம்மதி. பல் விளக்க வரிசை. கக்கூசுக்குச் செல்ல... குளிக்கச் செல்ல... எல்லாவற்றிற்கும் வரிசை. அதை எல்லாம் இப்ப நினைத்தாலே பைத்தியம் பிடித்து, ஓடும் ரயிலிலிருந்து கீழே குதித்தாலும் குதித்து விட நேரிடும்.

நான்காவதாக மனைவி என்று சேர்த்துக் கொண்டவள் மவுத்தானது இரண்டு ஆண்டுகளுக்கு முன், ஒரு நோம்பு நாளில். முதல் மனைவி ஒரு பகட்டுக்காரி. வேறு ஒருவனோடு ஓடிப்போனாள். இரண்டாவதாகச் சேர்த்துக் கொண்டவளை, விரட்டி அடிக்க வேண்டியதாயிற்று. கீழ்மாடியிலுள்ள ஒருவனோடு தொடர்பு. அந்தத் தொடர்பு தன்னுடைய ஆண்மையைக் கேள்வி கேட்பதாக இருந்தது. நாற்பத்தி எட்டாவது வயதில் மூன்றாவதாக சேர்த்துக் கொண்டவள், ஒரு சின்னம்சிறு பொண்ணு. அடுக்கு மாடிகளிலுள்ள தீப்பெட்டிகளில் குடியிருக்கும் சிறு பசங்களுக்கு அவள் மீது ஒரு கண்ணு. அவளைப் பாதுகாப்பதே பெரும்பாடு. ஒருநாள் அவள் மீன் வாங்க மார்க்கெட்டுக்குப் போனவதான்.

இந்தச் சீர்குலைவு கிராமப் புறங்களில் இருக்காது என்ற நினைப்பில் கிராமத்து ஆண்கள் மீது அவருக்கு எப்பவும் உள்ள பொறாமை. தன் மூலம் குழந்தை பெறமாட்டாள் என்று தெரிந்தது முதல், நாலாவதுகாரியின் முகம் இருண்டு தொங்கியது. அவள் மவுத்துக்குப்பின், ஒரு தனிமை உணர்வு இரவு பகலாகத் தொத்திக் கொண்டிருந்தது. அவளுடைய மய்யித்தை நட்டுக் குத்தாக உள்ள இடுக்கான மாடிப்படிகளிலிருந்து கீழிறக்கப் பட்டச்சிரமம்!

அந்த இருட்டு அறையில் ஒருபோது அவள் மய்யித்து(சடலம்) எறும்பு அரித்துக் கிடப்பதை நினைக்கும் போதெல்லாம் நடு நடுங்குவார். அந்த நடுக்கத்தின் உந்து சக்தியால் கிராமத்தை நோக்கிப் புறப்பட எடுத்த முடிவு.

நகர வாழ்க்கையே வெறுத்துப்போச்சு.

தம்பி வாழும் சொந்தக் கிராமத்தைப் பற்றி நினைப்பு வந்ததே அப்போதுதான். ஊரில் யார் யாரெல்லாம் உயிரோடு இருப்பார்கள் என்று திட்டமில்லை.

நகரத்தின் மாலை நெரிசலில் ஒரு ரெஸ்டாரண்டில் சந்திக்க நேர்ந்த நடுத்தர வயதுக்காரர், தன் ஊருக்காரராகயிருந்தார். அந்தச் சந்திப்பின்போது அவர் சொன்ன நினைவு, ஊரில் தம்பி பெரும் பண வசதியுடன் இருப்பதாக; வாப்பாவின் சொத்தில் தனக்குள்ள சொத்தைத் தனியாகப் போட்டு வைத்திருப்பதாக.

ஊரைவிட்டு ஓடும்போது தம்பி தொட்டிலில் கிடந்திருந்தான். அவனாகத்தானிருப்பான். பெயர் மட்டும் நினைவிலிருந்து பெயர்ந்து போகவில்லை.

கால்சராயுடன் கிராமத்தில் பஸ் இறங்கும்போது, கிராமத்துச் சனங்கள் தன்னைக் காட்சி மிருகமாகப் பார்க்க நேரலாம் என்ற கூச்சம். தொளதொளவென்று மாட்டியிருந்த கால்சராயை இரயில் இறங்குமுன் மாற்றி

கலியுகத்தின் கற்பக விருட்சம்

மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ்

வழங்கும்



தேக்கு விருட்சம்

நலம் தரும் பத்து திட்டங்களின் ஐந்து வித பலன்கள்

	திட்டம்	யூனிட் விலை ரூ.
1.	ஸ்ரீதன விருட்சம்	3,000
2.	தன விருட்சம்	3,000
3.	சந்தான விருட்சம்	9,000
4.	ஸ்தல விருட்சம்	9,000
5.	ஸ்ரீ விருட்சம்	3,000
6.	வித்யா விருட்சம்	2,500
7.	லட்சுமி விருட்சம்	3,000
8.	மாதா விருட்சம்	1,500
9.	பிரேம விருட்சம்	1,200
10.	ஜீவன் விருட்சம்	2,100

1	சொந்த நிலம்
2	12% (முதலீட்டுக்கு வருடாந்திர) ஊடுபயிர் வருமானம்
3	ரூ.3 லட்சம் வரை விபத்துக் காப்பிடு
4	ரூ.75,000 மதிப்புள்ள தேக்குப் பத்திரம்
5	200% வரி விலக்கு வருமானம்

YOGA SAVITH

மேலும் விபரங்களுக்கு அணுகவும் :

GROWTH ECOLOGY SECURITY

மதர் எர்த் பிளாண்டேஷன்ஸ்

பிரைவேட் லிமிடெட்

7-B, ஸ்பென்ஸர் பிளாசா (2-வது மாடி), 769, அண்ணா சாலை, சென்னை 600 002.
☎போன்: 8521417, 8520109, 8522701, 8522702, 8523536, 8526459, 8526488. ☎பேக்ஸ்: 044-8522148

இனிப்பும் ...... களிப்பும்

"சாய்கிருஷ்ணா" இனிப்பகம் உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்க்கிறது

இளைஞர் முதல் முதியோர் வரை தீபாவளித் திருநாளை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறீர்கள். வண்ணவண்ணக் கோலங்கள் உங்களை வரவேற்கும் அந்நாளில் **உங்கள் கனவிலும் நினைவிலும் தோன்றுவதென்ன**

கதிரவன் உதயமுன் பல்துலக்கி நீராடி நெற்றித்திலகமிட்டு
புத்தாடையுடுத்தி இறைவனை தொழுதபின்

"என்ன செய்வீர்கள்"

கங்காஸ்னானம் ஆச்சோ!! என்று வினவிவரும் விருந்தினர்களுக்கு எதை முதலில் கொடுப்பீர்கள்

"சாய்கிருஷ்ணா" தயாரிக்கும் பற்பல இனிப்பு வகைகள் வண்ண வண்ணத் தட்டுகளில் வரிசையாக வைத்திருக்கும் அழகை பார்க்கும் போதே தயக்கம் ஏன்?

ஓர் இனிப்புத் துண்டை உடன் எடுத்து சுவைத்துப் பாருங்கள்

புத்துருக்கு நெய்யிலே புத்தம் புதிதாக தயாராகும் இனிப்பு வகைகள் புத்துணர்ச்சி தரும் உங்கள் நாவினிலே அது ருசிக்கும். மணக்கும். இனிக்கும். அதைச் சுவைக்கும் நீங்கள் விரும்பிக் கேட்போரிடம் சிபாரிசும் செய்து எங்கள் இனிப்புக்களை வாங்கச் சொல்வீர்கள் இதுதான் **"சாய்கிருஷ்ணா"** இனிப்பகம் உங்களிடம் எதிர்ப்பார்ப்பது. உங்களுக்காகவே **"சாய்கிருஷ்ணா"** இனிப்பகம் தீபாவளியை முன்னிட்டு பற்பல இனிப்பு வகைகளை வழங்கவிருக்கிறது.

தேவைக்கு முந்துங்கள்

குறைந்த விலையில் உயர்தரமான இனிப்பு வகைகளை வழங்கும் ஒரே ஸ்தாபனம் **"சாய்கிருஷ்ணா"** உங்கள் இனிப்பகம்.

வாருங்கள் : வரவேற்கிறோம்
வாழ்த்துங்கள் : வளர்கின்றோம்

கல்யாணம் மற்றும் எல்லாவிதமான சுபகாரியங்களுக்கும் எங்களிடம் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கல்யாண மண்டபடங்கள் தி. நகர், மைலாப்பூர், ஆர்.ஏ. புரம் ஆகிய இடங்களில் கிடைக்கும்.



சாய்கிருஷ்ணா
ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

65, சி.பி. ராமசாமி சாலை,
அபிராமபுரம்,
சென்னை – 18.
போன் : 4996807

J.D. கேட்டரிங் சர்வீஸ்
பிளாட் நம்பர் 13,
3வது தெரு,
B.B காலனி,
சென்னை - 88 போன்: 2348164

தீபாவளி ஆர்டர்கள் வரவேற்கப்படும்



விட்டு, கிராம வாழ்க்கை வாழ்வதற்காக வாங்கிப் பேணியிருந்த நாலு முழ வேட்டியை உடுத்திக் கொண்டார்.

கிராமம், நகரத்தின் முகமூடி அணிந்திருப்பதாகத் தோன்றியது அவருக்கு. முன் பாத்திராத முகங்கள்; பரிச்சயமில்லாத பாதைகள்; பஸ் இறங்கிய இடத்திலேயே பெரும் அமளி; பஸ்ஸில் இடம் பிடிக்க, வேறு பஸ்ஸில் ஓடி ஏற, சீருடை அணிந்த மாணவர்களின் முகங்களில் பள்ளிக்கு நேரமாய் விட்ட பரபரப்பு. 'ஆனா, ஆவன்னா' சொல்லித்தர முன்பு அங்கு ஒரு பள்ளிக்கூடம் இல்லாமலிருந்ததை நினைத்துப் பார்த்தார்.

தம்பி பெயரைச் சொல்லி வழி கேட்டார். நின்று சொல்ல யாருக்கும் பொறுமை இல்லை. ஒரு பெட்டிக்கடைக்காரர் காட்டிய வழியே நடந்தார். சென்றிராத ஒரு வெளிநாட்டு நகரத்தில், பாதை குழம்பிப்போய் நடப்பது போலிருந்தது அவருக்கு. அந்நேரம் தம்பியின் குழந்தைகளின் நினைப்பு வந்தது. 'மூத்தாப்பா' என்று கட்டி அணைக்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்க எதுவும் வாங்காத கை வெறுமை. எதிர்ப்பட்ட ஒரு கடையிலிருந்து விலை உயர்ந்த பிஸ்கட்டின் ஒன்றை வாங்கி பைக்குள் வைத்தார்.

நடந்து செல்லும் தார்ரோட்டின் இருமருங்கிலும் பலதரப்பட்ட கான்கிரீட் கட்டடங்களில் துபாய் பிரதாபங்கள். முன்பு பலா மரங்களும் மாமரங்களும் கமுகும் தென்னைகளும் அடர்த்தியாக நின்று கொண்டிருந்த இடங்கள். காய்த்துத் தொங்கும் மாமரத்தில் கல்லெறியும் போது, தோப்பின் உடைமையாளர் பிடித்து, மாமரத்தில் கட்டி வைத்து நாய் அடி அடிக்க விரட்டுவதும் தலைதெறிக்க ஓடுவதும்! அன்று ஓடி, கால்கள் கிளறிய மணல் பாதைகளெல்லாம் இப்போது மாருதி கார்கள் ஓட, தார் கொண்டு மூடப்பட்டிருக்கின்றன.

திடீரென பழைய பாலம் எதிர்ப்பட்டது. அதனடியில் எலப்ப வீட்டு ஆறு. அதில் குளித்து விட்டு ஈரமுடி விரித்துப்போட்டு வந்த அவனைத்தான் அன்று வெள்ளாம்பல் பூத்து நின்று கொண்டிருந்த தெளி நீருள்ள கை ஆறு. ஆம்பல் மொட்டுப் போல் தண்ணீரில் தலை நீட்டி நிற்கும் நீர் நாகங்கள்.

கவரைப் பிடித்துக் கொண்டு எட்டிப் பார்த்ததும், மூக்கைப் பொத்தி விட்டார். குப்பை கூளங்களால் நிரம்பி, கட்டுப்பட்டு, நீர் கறுத்துப்போய் கிடந்தது எலப்ப வீட்டு ஆறு. இரயில்வே காலனிக்கு பின்பக்கமாக ஓடும் சாக்கடைக்கும் இந்த வீச்சமில்லை.

வழுக்கைத்தலை வியர்த்துக் கொட்டியது. அன்று, வெயில் துளிகள் நிலத்தில் விழாமல் தடுத்திருந்த கிராமத்தின் மேற்கூரை, கழன்று தெறித்து விழுந்த இடம் புரியாமல் நடந்தார். கிராமம் கன்னி அழிந்து விட்டதே என்று தனக்குள் முணுமுணுத்தார்.

பெயர் சொல்லிக் கேட்டபோது காட்டப்பட்ட வீட்டு முற்றம் சிமெண்டால் மெழுகப்பட்டிருந்தது. வீட்டுக்கு முன் சிமெண்டு தொட்டிகளில் பிளாஸ்டிக் தென்னம் கன்றுகள், பிற மரக்கன்றுகள், சங்கிலியில் தொங்க விட்டிருந்த சட்டிகளில் மலர்ந்து நின்றிருந்த பூக்கள், காகிதப் பூக்கள் என்று தெரிந்ததோடு, நேதாஜி நகரில் சினிமா நடிகரின் வீட்டைப் பார்த்தது போலிருந்தது அவருக்கு.

வாசலில் ஒரு பொத்தான் இருக்குமென்று முதலில் எதிர்பார்க்கவில்லை. துலங்கும் கைப்பிடியுள்ள பிளஷ் டோரின் மத்தியில் மோதிரக் கல் போல் ஒரு சிறு கண்ணாடி பதித்திருந்தது எதற்கென்று புரியவில்லை.

தொண்டையைக் கனைத்தும், 'தம்பீ' என்று உரக்கக் கத்தியபோதும், வாசலைத் திறப்பதாகத் தெரியவில்லை. கிராமத்தின் கலகலப்பு இல்லாத மயான அமைதியைக் கண்டு, மனித வாடை இல்லையோ என்ற முதல் ஏமாற்றம்.

பொத்தான் அழுத்த படிகளில் மிதித்த கால்கள் நடுங்கின. நேதாஜி நகரிலுள்ள பாங்கு மானேஜரின் பெரிய வீட்டில் ஒரு முறை சென்ற அனுபவ நடுக்கம்.

ஜடை நாய்கள்!

சிறிது நேரம் தாழ்ந்து, ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்த பெண், குரல் கொடுத்தாள்.

"யாருங்க... எந்த ஊரு...?"– நாகரீகமான மொழி.

"நான் அகம்மது ஷெரீப், தம்பியெப் பாக்க வந்தேன்!"

"உக்காருங்கொ. வரச் சொல்றேன்."

சிட்டவுட்டில் கிடந்த பிளாஸ்டிக் நாற்காலியில் உட்காரும் போது அவருடைய கற்பனை



"இந்தத் தீபாவளியை என்னால் மறக்கவே முடியாது!"
"ஏன்?"
"மத்தாப்பு கொளுத்தி தீபாவளியைத் தொடங்கி வைக்க இந்தியன் வங்கித் தலைவர் கோபாலகிருஷ்ணன் எங்க வீட்டுக்கு வரேன்னு சொல்லிருக்கார்!"
— ஞா. ஞானமுத்து

கள் உடைந்து நொறுங்கிச் சிமெண்டு முற்றத்தில் கிடந்தன.

"புரியல்லை" - டீ ஷர்ட்டும் பேண்ட்டும் அணிந்திருந்த வீட்டுக்காரர் கேட்டார்.

நாலு முழ வேட்டி வாங்கக் காசு செலவு செய்திருக்க வேண்டாமென்று அவருக்கு அப்போது தோன்றியது.

"நான்தான் அகம்மது ஷரீப்; உன் அண்ணன். சின்னதில் ஊரைவிட்டுப் போன அண்ணன்!"

"அப்படியா? எனக்கு ஒரு பிரதர் உண்டு என்னு மம்மி அடிக்கடி சொல்லுவாங்கொ. அது நீங்கதான் என்னு எப்படித் தெரியும்?"

மம்மியா?

என்ன சொல்வதென்று தெரியாத சிறிது மௌனத்திற்குப்பின், சொன்னார்—

"தகப்பனாருடைய சொத்தில் எனக்குள்ள பங்கு கிடப்பதாக யாருட்டையாவது சொன்னியா...?"

"சொல்லியிருப்பேன். பிரதருக்குள்ள பங்கு கிடக்குது. நீங்கதான் என் பிரதர் என்னு நான் எப்படி நம்ப முடியும்?"

ஒரு நீண்ட மௌனம் நிலவியது.

"யப்பா... நா சொத்து எடுக்க வரல்ல... எனக்கு வாரிசில்லை. நீ தந்தாலும் எனக்குப் பிறகு உனக்குதானப்பா. நீயே எடுத்துக்கோ!"

"வாரிசு இல்லையா?"

"இல்லையப்பா, தனிமரம். பத்து அறுபது வருசமா உஷ்ணக்காற்றும் கரிப்புகையும், சாக்கடை வாடையும் சுவாசிச்சு வாழ்ந்தாச்சு. இன்னோ, நாளையோ? மிச்சமுள்ள நாளுகளை நான் பிறந்த இந்த கிராமத்திலே உன்னோடையே கழிச்சு, இந்த மண்ணிலே படுக்கவாமுன்னுதான்ப்பா ஒதுங்கி வந்தேன்."

வீட்டுக்காரர் அவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவருடைய நாடிக்குழியில் தகப்பனார் உயிர் பெற்றிருப்பதைக் கவனித்தார்.

"தம்பி, புள்ளைங்க எங்கப்பா?" பையிலிருந்த பிஸ்கட் டின்னை வெளியே எடுத்தார்.

"வெளிநாட்டிலெ..."

"எத்தனை புள்ளைங்க...?"

"ஒரு ஆணும் ஒரு பெண்ணும்."

"என்ன செய்றாங்க...?"

"மூத்தது டாக்டர். அவெளா ஹஸ்பன்டோட, ஸ்டேட்ஸ்லெ! சன்னும் பேமிலியும் குவைத்துலெ."

"உன் சம்சாரம்?"

"ஸ்டார் டீ.வி.யிலெ. இங்கிலீஷ் புரோக்கிராம்!"

"தொந்தரவு குடுக்கண்டாம்!"

"பரவாயில்லை. பினு!" மனைவியைக் கூப்பிட்டார்.

அவள் தோற்றம், அவருக்குத் திடுக்கிடலாகவே இருந்தது. சுடிதார். உதட்டுச் சாயம்.. கரும் மையால் வளைத்து விட்ட வில் புருவம்.

அவர் பிஸ்கட் டின்னை அவளிடம் நீட்டினார்.

"புள்ளைகளுக்கென்னு வாங்கி வந்தேன்!"

அவள் தயங்கினாள்.

"வாங்கு. புருஸ்லிக்காவது ஆவும்."

பிஸ்கட் டின்னில் பார்வையை ஊன்றினாள்.

"இந்தியன் மேடு. புருஸ்லிக்கு இதையா குடுக்கா?"

"பரவா இல்லை. உமயம்மை பாட்டிக்குக் குடு!"

அவர் அப்படியே குறுகி உட்கார்ந்து விட்டார்.

"நீங்கெ வந்திட்டிங்க. பக்கத்துலெ பழைய குடும்ப வீடு இருக்கு; அங்கெ தங்கலாம். மற்ற விஷயங்களையெல்லாம் பிறகு பார்ப்போம்!"

"எந்த விஷயம்?"

"சொத்து விஷயம்!"

"எனக்கு சொத்து வேண்டாம்பா, நீயே வச்சுக்கோ!"

"பினு..." மனைவியிடம் சொன்னார்—

"குடிக்க ஏதாவது?" வந்தவரிடம் கேட்டார்—

"ஹாட்டா? கூலா?"

முன்பு விளையாடிக் களைத்து வரும்போது உம்மா நாட்டரிசித் தண்ணீர் தந்த ருசி நாக்கிலிருந்து இப்பவும் நீங்கவில்லை.

"சாயா போதும்பா!"

"ஏதாவது டிபின் சாப்பிட்டீங்களா?"

"ரயில் இறங்கி, பஸ் ஏறி நேராக வாறேன்..."

தம்பி வீட்டு உபசரிப்பில் திக்கு முக்காடிப் போவோம் என்று நினைத்ததால், ஏற்பட்ட பிசகில் தானாக வருந்திக் கொண்டார். வயிற்றுச் சுவரில் கண்டெலி முகம் குத்தி ஓடியது.

"இன்னு மதியம், என் கஸ்ட் நீங்கெ!"

அப்படியானால் இன்று இரவு? நாளை?

"பிரிட்ஜிலெ மீன் இருக்கு...இறச்சி இருக்கு... எது விருப்பம்...?"

கை எட்டும் தொலைவில் கடல். கடற்கரையில் மீன் பட்டுச் சொரியும் கூச்சல். ஐசில் வைத்த மீனும் இறைச்சியும் சாப்பிட்டு அலுத்துப் போச்சு. கிராமத்திற்கு வந்தாலாவது கடற்கரையிலிருந்து மீன் பிடித்து குழம்பு சாப்பிட மூக்களவு ஆசை. என்ன செய்ய?

"எனக்கு வேண்டாம்ப்பா. உனக்கு எதுக்குப்பா தொந்தரவு?"

"பழைய வீட்டை உமயம்மை பாட்டிக்கிட்டெ சுத்தம் செய்யச் சொல்றேன். அங்கேயே தங்கிக்கிடுங்கெ. அங்கெ புருஸ்லியெப் போட்டிருக்கு. இரவுநேரம் இங்கெ கொண்டு விடுவோம். மற்ற விஷயமெல்லாம் பின்னெ பார்ப்போம்!"

"எந்த விஷயம்...?"

"சொத்து."

"நான்தான் சொன்னேனே, சொத்து வேண்டாமெண்ணு!"

"தேங்க்யூ... போய் ரெஸ்ட் எடுங்கோ. வெளியே ஒரு நார் கட்டில் கெடக்கு."

"யார் இவர்...?" அவள் கேட்டாள்.

"இவர் என்னுடைய காணாமல் போன பிரதர் எண்ணு சொல்றார். இவர்தான் அவர் எண்ணு நம்புவதற்கு எந்த எவிடன்கம் இவர்க்கிட்டெ இல்லை!"

அவள், அவரை அடி முடி பார்த்தாள்.

"இவரா உங்கெ பிரதர்...?" அவள் உள்ளே சென்றாள்.

"நீங்கெ அங்கெ போய் ரெஸ்ட் எடுங்கொ" வீட்டுக்காரர் பிளஷ்டோரை உள்ளே கொண்டு போட்டார்.

அந்த இரண்டு நிலை நாகரிகக் கட்டடத்தின் பின் பக்கமுள்ள பழைய வீட்டை நோக்கி நடந்தார்.

உமயம்மைப் பாட்டி கையில் விளக்குமாற்றுடன் அங்கு நின்று கொண்டிருந்தார்.

அவர் கேட்டார்– "உமயம்மை பாட்டியா?"

"அமா!"

அவர் கொண்டுவந்த கட்டுக் கிழிகளை அங்கு வைத்தார். ஒரு துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு தோளில் போட்டுக் கொண்டார்.


வீட்டுக்காரர், டாட்டா பாரஸ்டை கேட்டுக்கு வெளியே கொண்டு வந்தார்.

"ரெஸ்ட் எடுக்கல்லியா...?" அவரைக் கண்டதும் கேட்டார்.

"ஊரை சுற்றிப் பாக்கட்டு..."

"ஜங்சனிலெ நல்ல ரஸ்டாண்டுகள் உண்டு..." டாட்டா பாரஸ்ட் புகை துப்பியது.

ஊரைச் சுற்றி வந்தார். கிராம முகமல்ல. கான்கிரீட் முகங்கள். கான்கிரீட் காடாகவே காணப்பட்டது. ஒரு கூரை வீடாவது? ஒரு ஓட்டு வீடாவது?



"எழுதறதை ஏன் நிறுத்திட்டீங்க?"
"அதுக்கெல்லாம் எங்கே நேரம்? பத்திரிகைகளில் வர்ற குலுக்கல் கூப்பன்களை வெட்டி, ஒட்டி அனுப்பறதுக்கே நேரம் பத்தலையே!"

— ஞா. ஞானமுத்து

கடல் காற்று வாங்கி கடற்கரை மணலில் நடக்க கடற்கரைக்கு வழிகேட்டார். அங்கே தெரிந்தது கடற்கரையின் கல்லறை. பெரும் பாறைக்கற்கள் நெடுகிலும் அடுக்கப்பட்டிருக்கிறது. கடல் அரிப்பைத் தடுக்கக் கடல் சுவர். அங்கு நின்றபோது குமட்டியது. கற்களுக்கிடையிலுள்ள குழிகளில் பன்றிகளும் நாய்களும் முகம் தாழ்த்தி அலைந்தன.

அடிமண் தெரியும் நிர்மலமான குளம் ஒன்று இருந்தது. கரை இடிந்து கிடக்கும் குளத்தில் சங்கமிக்கும் சாக்கடைக் கால்வாய்களைக் கண்டு துண்டை உதறித் திரும்பி நடக்கும் போது, பெரும் ஏமாற்றம். முகம் சிதைந்துபோய், முகமற்றுக் காணப்படும் வெறிச்சோடிய கிராமம்.

அவர் அங்கு எதையோ தேடிக் கொண்டிருந்தார். தேடுவது கிடைக்கப் போவதில்லை என்ற உணர்வு அவரைச் சோர்வால் வரிந்து கட்டியது. வீட்டுக்கு வந்தார்.

இருட்டியதும், புருஸ்லியை அவிழ்க்க அங்கு வந்த உமயம்மைப்பாட்டி சற்று தயக்கத்துடன் கேட்டாள்–

"அன்னு போனதுக்கு, இன்னைக்குத்தான் வாறீயளா?"

அவர் திடுக்கிட்டார்.

"நீ.....?"

உமயம்மைப் பாட்டி பதில் சொல்லவில்லை. சுருக்கம் விழுந்த அவளுடைய முகத்தில் வெட்கச்சாயல் படர்வதைக் கவனித்தார். அவர் ஏதோ கேட்க முயலுமுன், உமயம்மைப் பாட்டி புருஸ்லிக்குப் பின்னால் போய் விட்டாள்.

மனசிற்குள் உமயம்மைப்பாட்டி ஓர் ஆல மரம் போல் கொப்பு பரப்பி நின்றதால், உறக்கம் வரவில்லை.

சூரியோதத்திற்கு முன், உமயம்மைப்பாட்டி புருஸ்லியுடன் பழைய வீட்டிற்கு வந்தாள்.

நார்க்கட்டிலில் வெறுமனே அங்கு கிடந்தது. அவன் கையிலிருந்து நாய்ச் சங்கிலி நழுவி விழுந்தது.

பெருங்கூரில் சிக்கிய சுருங்க மெடல்!

பம்பாய் ஒருகாலத்தில் கடத்தல்காரர்களின் தொழில் கேந்திரமாக இருந்து வந்தது எல்லோருக்கும் தெரியும்.

மக்கள் தொகை மிகுந்த, போக்குவரத்து வசதிகள் மிக்க, தொலைத் தொடர்பு வழிவகைகளுக்குச் சிறந்த, எல்லாவற்றுக்கும் மேல் பரந்த கடற்கரையைக் கொண்ட பம்பாயைத் தலைமை அகமாகக் கொண்டு, பலர் அன்று ஏகபோகமாகக் கடத்தல் தொழில் நடத்தி வந்தார்கள்.

மூன்று பேர் அதில் மிக முக்கியமானவர்கள். பம்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட ஹாஜி மஸ்தான், குஜராத்தைச் சேர்ந்த பாக்கியா (BAKIA), குஜராத்தைச் சேர்ந்த இன்னொரு ஆள் - பெயர் நினைவுக்கு வரவில்லை.

இம்மூவரின் அட்டகாசம், அன்று எப்போதும் அரசுக்குப் பெரும் தலைவலி. கையாட்களையும் ஏஜெண்ட்களையும் கொண்டு, வெகு ரகசியமாகவே இவர்கள் 'தொழில்' நடக்கும். பின்னணியில் மட்டுமே இயங்கும் இவர்களை சட்டத்தின் பிடியில் கொணர்ந்து தண்டிப்பது சாத்தியமில்லாமலிருந்தது. காரணம், கிடைக்கிற ஆதாரங்களைக் கொண்டு, அந்தக் கையாட்களைத்தான் மடக்க முடியுமே தவிர, 'தலைவர்'கள் தப்பி விடுவார்கள். மீசா போன்ற வலுவான சட்டங்கள் கூட, பொது ஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்போரை அடக்க உதவுமே தவிர, 'கடத்தல்' விஷயத்தில் உதவாது.

வேறென்ன செய்து இவர்களைப் பிடிப்பது?

கள்ளக் கடத்தலால் கறுப்புப் பணப் புழக்கம் அதிகரிக்கிறது. தவிர, அந்நிய செலாவணி இருப்பு பெருமளவில் பாதிக்கப்பட்டு, நாட்டின் பாதுகாப்புக்கே இடைஞ் சல் உருவாகிறது. ஆக, நம் அரசியல் சாசனப்படி, 'கடத்தலைத் தடுக்கப் பிரத்யேகமாக ஒரு தடுப்புக் காவல் சட்டம் உருவாக்கலாம்' என்று சட்ட வல்லுநர்கள் சொன்னார் கள்.

சாதாரணமாகக் கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்களைக் கவனிக்க வேண் டிய பொறுப்பு, நிதித் துறையினுடையதுதான். ஆனால் இது வெளியே தெரியாமல், மிக ரகசியமாகச் செயல்படுத்த வேண்டிய விஷயமென்பதால், பிரதமர் இந்திரா காந்தி, இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தும் பொறுப்பை, உள்துறை வசம் ஒப்படைத்தார்.

உள்துறைச் செயலாளர் முகர்ஜி, கூடுதல் செயலர் சீனிவாசவரதன், இணைச் செயலரான நான், தவிர பிரதமரின் நேரடிச் செயலாளர். எங்கள் நால்வரைத் தவிர, இப்படி ஒரு சட்டம் வரப் போகிற செய்தி - உள்துறையிலேயே கூட - வேறு யாருக்கும் தெரியாது!

'நாங்கள் செயல்படத் தொடங்கினோம். மீசாவை விட பலமான, சக்திவாய்ந்த ஒரு சட்டத்தைக் கொண்டுதான் கடத்தல்காரர்களை ஒடுக்க முடியும் என்று தெரிந்த வுடன் 'COFEPOSA' கொண்டு வரப்பட்டது, மிக ரகசியமாக.

Conservation of foreign exchange and prevention of smuggling activities act என்கிற மிக நீளமான பெயரின் சுருக்கம்தான் 'COFEPOSA.'

இந்த 'COFEPOSA'வின்படி, கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக நாம் சந்தேகிப் பவரைக் கைது செய்து, கோர்ட் விசாரணை இன்றி, தடுப்புக் காவலில் ஓராண்டு வரை சிறை வைக்க முடியும்!

இப்படி 'வசதிகள்' மிக்க ஒரு சட்டம் வரப் போகிறது என்பதை வெளியே தெரியவிடாமல், நாங்கள் நால்வர் மட்டும் செயல்பட்டு, மிக ரகசியமாக வைத்திருந் தோம். காரணம், மற்ற சட்டங்கள் போல செய்தித்தாள்களில், இதர மீடியாக்களில் இதுவும் அறிவிக்கப்பட்டு விட்டால் பட்சிகள் பறந்து விடுமே?

செப்டம்பர் 1974.

சி. வி. நரசிம்மன்

உங்கள் குதூகலத்தை இரட்டிப்பாக்க

"Family-Deposit"

CRISIL FA+

குடும்பம் முழுமைக்கும் பயன் தரக்கூடிய ஒரே திட்டம்

வேடிக்கை கலந்த கேளிக்கை! பளபளக்கும் புத்தாடைகள்! தித்திக்கும் தின்பண்டங்கள்! எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பம் முழுவதும் ஒன்று கூடுவது. இதுதான் பண்டிகையின் சிறப்பு! 'ஃபேமிலி டெபாஸிட்'டில் முதலீடு செய்ய இதைவிட தக்க தருணம் வேறு எதுவும் இல்லை.

ட்வென்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரியின் நூறு சத 'ஃபேமிலி டெபாஸிட்' திட்டம் ஒரு குடும்பத்தின் புகைப்படத் தொகுப்பு இதழைப் போன்றது. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் கால ஓட்டத்தில் அதன் மதிப்பும் கூடிக் கொண்டே வருவது. உங்கள் குடும்பப் புகைப்படத் தொகுப்பைப் போல உங்கள் முதலீடும் பத்திரமாக இருக்கும். உங்கள் எதிர்காலத்திற்கும், உங்கள் சந்ததியினருக்கும் ஒரு பொக்கிஷமாக விளங்கும்.

இதில் மாதம் தோறும் அல்லது காலாண்டு, அரையாண்டு கால அளவில் வட்டி பெறும் **'செஞ்சுரி பிளஸ்'** திட்டத்தையோ, டெபாஸிட் முதிர்ச்சி அடையும் காலத்தில் வட்டி முழுமையும் பெறும் **'டபுள் செஞ்சுரி'** திட்டத்தையோ நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

ட்வென்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட், காலத்திற்கு ஏற்ப விரைந்து பயன் அளிக்கும் சக்தி வாய்ந்த முதலீட்டு நிறுவனம். இதன் வேரோடிய பரந்துபட்ட அலுவலகங்கள், பரோடா, பம்பாய், ஹைதராபாத், சென்னை, கோவை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதன் மொத்த மதிப்பு ரூ.50 கோடியாக நான்கே வருடங்களில் வளர்ந்துள்ளது.

எதிர்காலக் கண்ணோட்டம் மிகும் எங்கள் நிறுவனத்தின் வளர்ந்து வரும் குடும்பத்தில் நீங்களும் ஒருவராக வேண்டும் என்பது எங்கள் விருப்பம். மேலும் பெண்களுக்கென்றே உருவாக்கப்பட்ட **'வுமன்ஸ் ஒன் டெபாஸிட்'** திட்டத்தில் வட்டி பெறும் தேதியையும், டெபாஸிட் முதிர்ச்சி பெறுகின்ற காலத்தையும் முன்கூட்டியே தீர்மானிக்கும் உரிமை ஒரு சிறப்பம்சமாக அமைந்துள்ளது.

எங்களது பல தரப்பட்ட மற்றைய முதலீட்டுத் திட்டங்கள் பற்றிய விபரங்கள் அறிய, கீழே கொடுத்துள்ள கூப்பனை நிரப்பி அனுப்புங்கள். அதையும் விட மேலானது தொலைபேசியில் எங்களுடன் தொடர்பு கொள்வதோ அல்லது எங்கள் அலுவலகங்களுள் ஒன்றிற்கு நேரடியாக விஜயம் செய்வதோ ஆகும். ஏனெனில் உங்களைப் போன்ற முதலீட்டாளர்களின் மகிழ்ச்சிக்காக நாங்கள் செய்கின்ற பணியின் தரத்தையும், அளவையும் நீங்களே அறிந்து அனுபவிக்கலாமே!

Special Festive Deposit Mobilisation Drive 21st Sept. to 21st Oct. 1995

21st Century
Investor's Favourite.
Depositor's Delight!

ட்வென்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீஸஸ் லிமிடெட்,
"ஸ்ரீவித்யா" 32, டி.டி.கே. சாலை,
சென்னை-600 018. போன்: 4994821, 4995155.
ஃபாக்ஸ் எண்: 044-4994826. அடையார், போன்: 4918669
கிளைகள்: பம்பாய், போன்: 2042264.
ஹைதராபாத், போன்: 319371, கோயம்புத்தூர் போன்: 213673
கும்பகோணம், போன்: 24487, பங்களூர், போன்: 3320777.

உங்கள் 'ஃபேமிலி டெபாஸிட்' திட்டம் பற்றி மேலும் கூறுங்கள் :

பெயர் : ....

விலாசம் : ....

....

.... போன் : ....

ட்வென்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீஸஸ் லிமிடெட்,
"ஸ்ரீவித்யா" 32, டி.டி.கே. சாலை, சென்னை-600 018.

KL

Managers to Deposit Schemes: **Integrated Enterprises (India) Ltd.**
42/1, Motilal Street, T.Nagar, Madras-600 017. Ph: 4347830. And their various branches.

...பட்டு வந்துள்ள இந்த விளம்பரத்தின் பகுதி, விண்ணப்ப ஃபாரத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளதால் திட்டத்தில் முதலீடு செய்வதற்குமுன் அதைச் சரிபார்த்துக் கொள்ளவும்



'சுருக் நறுக்'கென்று ஒரு சொல்லோவியம்

அழகு என்பது என்ன...?

நீட்டி முழக்கிச் சொன்னால்தானா அழகை விளக்க முடியும்? ஒரே வரியில் கூட அதன் சாரத்தை அடக்கிவிடலாம்.

உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்... கீழேயுள்ள கூப்பனில் அழகுக்கான 'சுருக் நறுக்' விளக்கம் எழுதி, மற்ற விவரங்கள் பூர்த்தி செய்து, 23.10.95 க்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உறை மீது 'சுருக் நறுக் போட்டி - 1' எனக் குறிப்பிடுவது அவசியம்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் சுருக் நறுக் விளக்கங்கள் ரூ. 50 பரிசு பெறும். தவிர... இன்னும் இருபத்தைந்து வாரங்களுக்குத் தொடரப் போகும் இப்போட்டியில், மிக அதிகமான முறைகள் பரிசு வாங்கும் ஒரு நபருக்கு மெகா பரிசு காத்திருக்கிறது. (விவரங்கள் விரைவில்) போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

— ஆர்.

அழகு என்பது..

....

....

....

....

என் பெயர் :..

விலாசம் :...

....

....

பிரதமர் ஒப்புதல் பெற்று, குடியரசுத் தலைவரின் அவசரப் பிரகடனம் மூலம் திடீரென்று ஒரு நாள் COFEPOSAவை அமுலுக்கு வரச் செய்தோம். நாடெங்கிலுமுள்ள கடத்தல் புள்ளிகள் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டனர்.

மிக முக்கியமான அந்த இரு குஜராத் கடத்தல்காரர்களும் உடனே கைது செய்யப்பட்டனர். ஹாஜி மஸ்தான் மட்டும் தப்பித்து விட்டார்.

எங்களுக்குச் சற்று ஏமாற்றம்தான். இவர்கள் கைதாகி விட்ட விஷயம் எப்படியோ தெரிந்து, மஸ்தான் பம்பாயை விட்டு நீங்கி விட்டது தெரியவந்த போது, எல்லா மாநிலங்களுக்கும் அவசரத் தகவல் பறந்தது. வேட்டை முடுக்கி விடப்பட்டது. நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான கடல், தரை, விமான வழிப் பாதைகள் அனைத்திலும் காவல் துறையினரைக் குவித்தோம்.

பம்பாயை விடுத்தால், மஸ்தானின் அடுத்த புகலிடம் – உள்நாட்டில் – பெங்களூராக இருக்கலாம் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. பெங்களூர் காவல் துறையை உஷார்படுத்தி விட்டுக் காத்திருந்தோம்.

முன்னதாக உள்துறைச் செயலாளர் என்.கே. முகர்ஜி, ஒலிம்பிக் பாஷையில் என்னைக் கேட்டது, அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தது.

"என்ன நரசிம்மன்! குஜராத் கடத்தல் மன்னர்கள் இருவரைக் கைது செய்து, வெண்கல, வெள்ளி மெடல்கள் வாங்கி விட்டீர்கள். தங்க மெடல் எப்போது வாங்கப் போகிறீர்கள்?"

நான் எதிர்பார்த்தது போலவே, பெங்களூர் போலீஸார், மஸ்தானை ஒரு வாரத்திற்குள் கைது செய்து விட்டனர். தகவல் வந்தவுடன் முகர்ஜிக்கு போன் செய்தேன்:

"சார், தங்கமெடல் கிடைத்து விட்டது!"

அந்தச் சட்டம் கொண்டு வந்து, செயல்படுத்தி, அன்று பம்பாயில் கடத்தலை பெருமளவு ஒடுக்க முடிந்ததற்கு, நாங்கள் நால்வரும் இணைந்து ஒரே கருத்துடன் செயல்பட்டது தான் முக்கியக் காரணம்.

குடியரசுத் தலைவரின் அவசரப் பிரகடனமாக முதலில் வெளிவந்த COFEPOSA, பிறகு பார்லிமெண்ட்டில் சட்டமாக இயற்றப்பட்டது. அதுவரை உள்துறை கவனித்து வந்த இவ்விஷயத்தைப் பின் முறைப்படி நிதித்துறை ஏற்றுக் கொண்டு, இன்று வரை கவனித்து வருகிறது.

COFEPOSA பற்றிச் சொல்லும் போது, இதே போன்ற இன்னொரு சட்டம் கொண்டு வரப்பட்ட சூழலை விவரிக்கத் தோன்றுகிறது.

தீபாவளி மாதமான ஐப்பசி மாதத்தை 'துலா மாதம்' என்று சொல்வார்கள். ஏன் தெரியுமா? துலாக் கோல் என்றால் தராசு. தராசின் இரு தட்டுகளும் சம நிலையில் இருக்கும். அதுபோல் ஐப்பசி மாதத்தில் மட்டும் இரவும் பகலும் சம அளவில் இருக்கும். எனவே இது 'துலா மாதம்' என்றழைக்கப்படுகிறது.

— வயலூர் ஆர். பார்த்திபன்

அது, FCRA என்கிற Foreign Contribution Regulation Act. 1976-ல் கொண்டு வரப்பட்ட இச் சட்டம், வந்த புதிதில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்று. காரணம் வெகு நுட்பமானது.

1960களின் பிற்பகுதியில் ஏராளமான வெளிநாட்டுப் பணம் நம் நாட்டில் நுழைந்து, இங்குள்ள சில அரசியல் கட்சிகளுக்குக் கிடைத்திருப்பதாகப் பரவலாக, பலமான வதந்தி உலவ ஆரம்பித்தது.

அந்நிய சக்திகள் மூலம் இங்கே பணம் பெறப்படுகிறது; அதுவும் அரசியல் கட்சிகளில் என்றால் – விஷயம், தேசத்தின் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியது. தவிர, நாட்டின் பாதுகாப்புக்கே ஆபத்து விளைவிக்கக்கூடியது! எந்த ஒரு சுதந்தர நாடும் இதை அனுமதிக்காது.

அந்த வகையில், இந்த விவகாரம் பார்லிமெண்ட்டில் வெடித்த போது, உள்துறை அமைச்சர், "இன்டலிஜென்ட் ப்யூரோ இதனை விசாரித்து, எந்த அளவுக்கு அயல்நாட்டுப் பணம் நம் நாட்டில் ரகசியமாக நுழைந்து, அரசியல் கட்சிகளால் பெறப்பட்டிருக்கிறது என்பதை உடனே கண்டறிந்து, அறிக்கை அளிக்கும்; அதன் பேரில் மேல்நடவடிக்கைகள் தொடங்கப்படும்" என்று அறிவித்தார்.

அதன்படி, IBயின் ரகசியப் புலனாய்வு தீவிரமாக நடக்க ஆரம்பித்து, மிக விரைவில் அறிக்கை தயாரானது! அயல்நாட்டுப் பணம், நம் நாட்டு அரசியலில் புகுந்து விளையாட ஆரம்பித்திருப்பது வெட்டவெளிச்சமானது!

உடனே இதைக் கவனித்தாக வேண்டிய அவசியத்தை உணர்ந்து, கொண்டு வரப்பட்டதுதான் அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்.

இந்தச் சட்டத்தை வடிவமைக்கும் பணியை, உள்துறையில் நான் ஏற்றேன். அது நான் உள்துறையில் சேர்ந்த புதிது.

ஆயினும் மாநில போலீஸ் துறையில் இருந்தவனாதலால் சட்டஒழுங்கு முதல் கடத்தல், கொலை, கொள்ளை வரை, பலவிதமான குற்றங்களையும் எதிர்கொண்ட அனுபவம் - field experience என்பார்கள் – இருந்ததால் அந்தச் சட்ட வடிவமைப்புப் பணியிலும் என்னால் விரைவாகச் செயல்பட முடிந்தது.

எமர்ஜென்ஸிக்கு முன்பு கொண்டு வரப்பட்டு, எமர்ஜென்ஸி சமயம் அமுல்படுத்தப்பட்ட FCRA சட்டப்படி, வெளிநாட்டிலிருந்து பணம் பெறுவதை முழுவதுமாகத் தடை செய்யாவிட்டாலும், ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்தது. இந்த வகையில், இது தொடர்பான நபர்களை மூன்று பிரிவாகப் பிரித்தோம்.

1. எக்காரணம் கொண்டும் வெளிநாட்டு நிதி ஏற்கக் கூடாதவர்கள்.

2. முறையான அரசு அனுமதிக்குப் பின் ஏற்கக் கூடியவர்கள்.

3. ஏற்றுக் கொண்டபின், அரசுக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவர்கள்.

அரசியல் கட்சிகள், கட்சி நிர்வாகிகள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள், நீதிபதிகள், பத்திரிகைத் துறையினர், இதர அனைத்து அரசு அதிகாரிகளும் முதல் பிரிவில் அடங்குவர். அதாவது, எக்காரணம் கொண்டும் வெளிநாட்டிலிருந்து இவர்கள் எந்த வகையிலும் பண உதவி பெறக் கூடாது.

(சமீபத்தில் ஒரு புத்தக ராயல்டி விஷயத்தில் மாட்டிக் கொண்ட மகாராஷ்டிர நீதிபதி, இதன் அடிப்படையில்தான் குற்றம் சாட்டப்பட்டார்.)

இரண்டாவது பிரிவில், அரசியல் நோக்கம் கொண்ட – ஆனால் அரசியலில் நேரிடையாக ஈடுபடாத நிறுவனங்கள் அடங்கும். இந் நிறுவனங்கள் யாவை என்று அவ்வப்போது மத்திய அரசு பிரகடனம் செய்யும்.

கல்வி நிறுவனங்கள், அறக்கட்டளைகள் போன்றவை மூன்றாவது பிரிவைச் சேருகின்றன. அதாவது நிதி பெற்றபின் தகவல் தர வேண்டியவை.

இப்படி சட்டம் வகுக்கப்பட்டு, செயல்பட ஆரம்பித்தவுடன் நல்ல பலன் இருந்தது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அமைச்சர்களுக்கு, செயலகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் தான் மிகப் பெரும் உதவி புரிபவர்களாக இருப்பார்கள்.

ஒரு பிரச்னையை அரசியல் ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் எப்படியும் அணுகி, மிகத் துல்லியமான தீர்வுகளைக் கண்டறிந்து நீதி, நேர்மை, பொதுநலம் இவைகளுக்குப் பங்கம் ஏற்படாமல் செயல்படச் செய்பவர்கள் செயலாளர்கள்தாம்!

அந்த வகையில் உள்துறையின் கூடுதல் செயலாளராக அன்று இருந்த சீனிவாசவரதன், அன்றைய அமைச்சர்கள், அதிகாரிகள் அத்தனை பேரும் எண்ணி எண்ணி வியந்து போற்றும்படியான ஒரு 'நிர்வாக ஞானி'யாகத் திகழ்ந்தார்!

அவரோடு இணைந்து பணியாற்றிய நாட்களை என்னால் மறக்க முடியாது!

(அடுத்த வாரம்)

கைது செய்தால் நெஞ்சுவலி வருகிறதே?



• அடிப்படைத் தகுதிகள்...?

● **கண்மணி கப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.**

? இனி வேலையற்றவர்களுக்கு அரைக் கட்டணம் தானாமே...?

! வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தர முடியாத ஒரு கையாலாகாத அரசின் திட்டம் இது!

● **ஆர். ஸ்ரீகாந்தன், சென்னை - 53.**

? அடிக்கடி நடக்கும் வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம் பற்றி...?

! வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஏராளமான சிரமங்கள் ஏற்படுவது ஒருபுறமிருக்க, மற்றொரு பக்கத்தில் நாட்டுப் பொருளாதாரமே இத்தகைய வேலை நிறுத்தங்களினால் பாதிக்கப்படுகிறது. தொடர்ந்து விடப்படும் (காந்தி ஜயந்தி, ஆயுத பூஜை போன்ற) விடுமுறைகளினாலும் இதே மாதிரியான நஷ்டம்தான்!



• திறந்த கதவு!

● **மு. இரவிச்சந்திரன், சேலம்.**

? அ.இ.மு.க.வின் தென் சென்னை மாவட்டச் செயலாளரும் மீன் வளர்ச்சித் துறைத் தலைவருமான ஆதி ராஜாராம், ஒரு வழிப்பறி கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டவராமே?

! இன்று அரசியலுக்கு வருவதற்கான அடிப்படைத் தகுதிகளே இதுபோன்ற செயல்கள்தான் என்னும் போது ஆச்சரியப்படுவதற்கில்லை.



• பரிதாப நெருக்கடி!

● **ம. அருண் இளம்பரிதி, திருச்சி - 9.**

? கல்கி தலையங்கப் பகுதியில் நடந்து வரும் பிள்ளையாருக்கு விளக்கம் என்ன?

! முதல் கல்கி இதழில் விநாயகருடன் ஒரு கற்பனை உரையாடல் எழுதி வெளியிட்டார் அமரர் கல்கி. அதற்கு ஓவியர் சாமா படம் வரைந்தார். அந்த உரையாடல் பகுதி பெரிய 'hit' ஆனது. விநாயகர், கல்கியின் சின்னம் ஆனார்.

● **கந்தசாமி நாகம்மா இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.**

? 'வருமான வரி அதிகாரிகளுக்கு அ.இ.மு.க.வினர் தொல்லை கொடுத்தால், தமிழகத்திலுள்ள ஆயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவார்கள்' என்று குமரி அனந்தன் பேசியிருப்பது பற்றி...?

! மத்திய அரசு, எருமை மாட்டு முதுகில் மழை பெய்த மாதிரி இருப்பதால்தான், தமிழக காங்கிரஸ் தலைவர் இப்படியெல்லாம் பேச வேண்டியிருக்கிறது... பரிதாபம்!



• அதிசய தீர்ப்பு

● **கே. ஆர். ரவிக்குமார், கும்பகோணம்.**

? பஞ்சாயத்துத் தேர்தல் நிச்சயம் நடக்கும் என்று நம்பலாமா...?

! வட கிழக்குப் பருவ மழையின் கருணையைப் பொறுத்தது அது!

● **தக்ஷிணா. சங்கர், திண்டுக்கல் - 1.**

? அசோகமித்திரனுக்கு நல்லுறவுக்கான தேசிய விருது கிடைத்திருப்பது பற்றி...?

! பெயரிலேயே மித்திரன் (நண்பன்) – மனித நேயம் ததும்ப

எழுதும் அவருக்கு அவ்விருது தரப்பட்டுள்ளதில் வியப்பு என்ன...?

● ஈ. ராதாகிருஷ்ணன், திருச்சி - 1. ❑

? 'என்ரான் நிறுவனத்துக்குக் கதவுகள் திறந்து இருக்கின்றன' என மஹாராஷ்டிரா முதல்வர் ஜோஷி கூறியிருக்கிறாரே?

! இத்தனை காலமாக, காங்கிரஸ் என்ரானிடம் கையூட்டு வாங்கியதாக இவர்கள் குற்றம் சாட்டினார்கள். இனி காங்கிரஸ் இவர்கள் பேரில் அதே குற்றச்சாட்டைப் படிக்கும்...!

● பியர்லெஸ் கி. பாஸ்கரன், சென்னை - 39.

? நாவல் அதிகம் பிடிக்குமா? சிறுகதையா...?

! நாவல் – நல்ல விஸ்தாரமான வாழை இலைச் சாப்பாடு என்றால்... சிறுகதை, குசேலரின் ஒரு பிடி அவல்! அதன் வலிமையும் மகிமையும் இணையற்றவை.

● எஸ். தமிழரசி, கொளப்பாடு.

? பெரும்பாலான விளம்பரங்களில், பெண்களுக்கும் விளம்பரப்படுத்தப்படும் பொருளுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. இருந்தும் பெண் மாடல்கள் பயன்படுத்தப்படுகிறார்களே...?

! எந்த விளம்பரமும் ஆண் அல்லது பெண்ணைக் கவரத்தான் என்பதால் முற்றிலும் சம்பந்தமே இல்லை என்று சொல்லி விட முடியாது. பெண்ணை இழிவுபடுத்தும் விளம்பரம் தான் ஆட்சேபணைக்குரியது.

● எம். நாவுக்கரசு, சென்னை - 106.

? வீரப்பனின் தம்பி மற்றும் இருவர் சயனைடு சாப்பிட்டு இறந்தது பற்றி...

! சிறைக் கைதிகளாய் இருந்தவர்களுக்கு எப்படி சயனைட் கிடைத்தது என்பதே பயங்கரமான மர்மம். பதவியுயர்வு பெற்றதற்காகவாவது தேவாரம் சுறுசுறுப்பாகக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வாரா?

● ஆ. சரவணன், திட்டக்குடி.

? அது என்ன சார்... கைது செய்தா நெஞ்சு வலி வந்துடுது...?

! ஜெயில்லல்லாம் பிரியாணி கிடைக்காது என்கிற உண்மை தெரிய வரும்போது நெஞ்சு பொறுக்காமல் வலி வந்துவிடும் போலிருக்கு...!

● எஸ். சங்கரநாராயணன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

? போக்குவரத்துத் துறை அமைச்சர் மதுரை சென்ற போது, அவரது காருக்கு முன் சென்ற கே.டி.ஸி. பஸ்ஸின் டிரைவர் ஒதுங்கி வழி விடவில்லை என்பதற்காக அவர் விரலையே துண்டித்து விட்டார்களே? இது தான் போக்குவரத்துத் துறையின் நிர்வாகமா?

! எல்லா துறை நிர்வாகமும் இதே லட்சணம் தான். காரணம், தலைமை பொறுப்பு சரியில்லை. சென்னை வானொலி நிலையம் முன்பு மறியல் செய்த கட்சித் தொண்டர்களை, தொலைக்காட்சி நிலையம் முன்பு போய் அதைச் செய்யும்படி திசை திருப்பித் தூண்டிவிட்டு... விஷயம் முற்றிய பிறகு, ஏதோ ரொம்பவும் கவலைப்படுவது போன்ற தொனியில், மறியல்களை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்தது அ.தி.மு.க. தலைமை... 'அடிக்கிற மாதிரி அடிக்கிறேன்; நீ அழுகிற மாதிரி அழு' என்கிற கதைதான்... இந்த மாதிரி சூழ்நிலையில் தடியெடுத்தவன் தண்டல்காரனாகி விடுவான்.



• சுறுசுறுப்பு வருமா?

• வியப்பு இல்லை...



● எம். பிரபு, குமராட்சி.

? இந்த வார காதில் பூ விஷயம்...?


! காந்தி ஜெயந்தி கொண்டாட்டம். காந்திஜி சிலைக்கு அரசியல் தலைவர்கள் மாலை போட்டு வணங்கிய விஷயம்!

● டி.ஆர். பாலசந்தர்,
திருநெல்வேலி.

? சமீபத்தில் தங்களை ஆச்சரியப்பட வைத்த செய்தி...?

! பயங்கர கொலையாளியாகக் குற்றம் சாட்டப்பட்டு பரபரப்பாகப் பேசப்பட்ட அமெரிக்க ஓ.ஜே. சிம்ஸன், வழக்கின் முடிவில் தண்டனையின்றித் தப்பியிருப்பது!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஈ. ராதாகிருஷ்ணன்,
அறை எண் : 7 (மாடியில்)
ரெட் ரோஸ் காம்ப்ளெக்ஸ்,
கருமண்டபம், திருச்சி - 1.



மேன்மேலும் இலக்கை நோக்கி...

வாடிக்கையாளர்களின் வலுவான வரவேற்போடு

மகத்தான 6வது வருடம்

Esemar -ன் உறுதியான வளர்ச்சி அதன் நம்பிக்கையான செயல்பாடுகள்,
முதலீட்டிற்கான உத்திரவாதம், நிறைவான துரிதசேவை
ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் பலம்!

ESEMAR CHITS (MADRAS) PRIVATE LIMITED.

5-A, Poes Road, Off. Eldams Road, Madras - 18.

Phone : 451462, 455936

Subscription/Rs.	Duration Months	Chit Value Rs.
500	20	10,000
1,250	20	25,000
750	40	30,000
1,000	50	50,000
2,500	20	50,000
2,500	40	1,00,000
5,000	20	1,00,000
10,000	20	2,00,000
Mode of Auction 30% Ceiling		

வைப்பு நிதிக்கு 24 % மாதாந்திர வட்டி!
வட்டிக்கான காசோலை முன்தேதியிட்டுத் தரப்படும்!
சுலபத்தவணைகளில் வாகனங்களுக்கான கடனுதவி!

Enroll as ESEMAR agent and Ride away TVS-XL absolutely free or take home a refrigerator, 8 grams gold coin, Titan Quartz Watch.

For further details contact nearest ESEMAR Office.

ESEMAR MARKETING (P) LTD.
ESEMAR CREDIT CORPORATION

5-A, Poes Road, Off. Eldams Road, Madras - 18.

Phone : 451462, 455936

Branches

Arakkonam
271, Mosur Road,
First Floor,
Arakkonam - 631 001.
Ph: 22882

Tiruvottiyur
802/5, T.H.Road,
Thiruvottiyur Market,
Madras - 600 019.
Ph: 544828

Madipakkam
1, Medavakkam Road,
Madipakkam Koot Road,
Madras - 600 091.
Ph: 2342869

GROW WITH ESEMAR CONFIDENTLY

கி. ராஜேந்திரன்

11

கல்யாணத்துக்கு முன்னதாக சாயாவுக்குக் காதல் என்றால் என்ன என்ற உணர்வு கிடையாது. கோடிக்கணக்கான வேறு பல இந்தியப் பெண்களைப் போலவே அவளும் பெற்றோர் பார்த்த வரனுக்குச் சரி சொல்லி, திருமண தினத்தன்று தாலி ஏற்று, புருஷன் வீட்டைப் புகலடைந்தாள்.

கணவனிடம் அவள் குறை கண்டாள். நிறைகளையும் பார்த்தாள். ஆனால் குறை நிறைகளை எடை போட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. குறைகள் இல்லாத மனிதர் யார்? என்னிடம் குறைகள் இல்லாமலா போகும்? அவை இன்பாவுக்குத் தெரிய வராமலா இருக்கும்?

குற்றம் குறைகளை மீறி ஒரு நெருக்கம் அவர்களிடையே வளர்ந்தது. ஒருநாள் அவன் சீக்கிரம் வந்து விட்டால், 'ஏன்? உடம்புக்கு ஏதாவதா?' என்று மனம் துடித்தது. நேரம் கழித்து வந்தால், 'இன்னும் வரக் காணோமே? ஏன்?' என்று கவலை வாட்டியது. இரவு அவன் மெல்லிய குறட்டை ஒலியுடன் தூங்கிய பிறகும் அவன் கரத்தைப் பற்றி விரல்களைக் கோத்துக் கொண்டு இருக்க ஆவல் உண்டாயிற்று. அவன் தோளிலே தலை வைத்து நெஞ்சிலே கோலம் போடத் தோன்றியது.

காரணமின்றி அவன் கோபித்துக் கொண்டால் வீரியத்துடன் எதிர்வாதம் பண்ணுவதில் ஆனந்தம் உண்டாயிற்று. உரிமையோடு பேசலாம், எதிர்க்கலாம் என்ற துணிவில் ஒரு கிளுகிளுப்பு இருந்தது. தன் தரப்பில் தப்பு இருப்பதாகத் தெரிந்தால் அதை ஒப்புக் கொண்டு 'வெரி ஸாரி' சொல்லி குழைவதில் மகிழ்ச்சி பொங்கியது. வருத்தம் தெரிவிக்கச் சின்ன அளவில் கூடத் தயக்கமே ஏற்படவில்லை.

பிடிக்காத காரியங்கள் நடந்து, அதனால் டென்ஷனாகி விட்டால், கண்மூடி அவனிடம் ஒட்டிக் கொண்டு விடுவதில் இறுகிய மனம் தளர்ந்தது. தனக்கு என்று ஒருவன் இருக்கிறான்; அவனிடம் ஒண்டிக் கொண்டு பிரச்னைகளைச் சொல்லி விட்டால் மனம் சமாதானப்பட்டுப் போகும்.

இல்லறம் என்பது உடலுறவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்ல; அதற்கும் மேலே எத்தனையோ விஷயங்களில் தோழமையோடு கைகொடுத்து உதவுகிறது என்பதை சாயா நாளடைவில் உணர ஆரம்பித்தாள். இவையெல்லாம் ஒன்று சேர்ந்துதான் காதல் என்று பெயர் பெற்றதோ என்று யோசித்தாள்.

ஓராண்டுக்குப் பிறகும் அவள் கருவுறாத போது அவன் முதலில் தன்னை சோதனைக்கு உட்படுத்திக் கொண்டு, பிறகுதான் தன்னை டாக்டரிடம் அழைத்துப் போக எண்ணினான் என்பது தெரிய வந்த போது நெகிழ்ந்து போனாள். அது விரைவில் தன் கணவனைப் பற்றிய பெருமிதத்தை உண்டாக்கியது. தனது முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான பாதுகாவலன் அவன். அதே போல்தான் அவளும் அவனுக்கு என்று நினைத்த போது மனம் பூரித்தது.

'கல்யாணத்துக்குப் பிறகும் காதல் மலர முடியும்; கணவனைக் காதலனாகக் காண முடியும்; காதல் அனுபவங்களைப் பெற முடியும்' என்று அவளிடம் யாராவது கல்லூரி நாட்களில் சொல்லியிருந்தால் சிரித்திருப்பாள். ஆனால் இன்று அது உண்மை என்று தெரிய வந்தது. பல தம்பதிகளிடையே கல்யாணத்துக்குப் பிறகு காதல் மலராமலே போய் விடலாம்; பல காதல் திருமணங்களும் கல்யாணத்துக்குப் பிறகு ஏமாற்றத்தில் முடியலாம். இதை அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? அப்படியிருக்க, கல்யாணத்துக்குப் பிறகு காதல் மலர்ந்த தன் வாழ்க்கை எவ்வளவு ஜாஜ்வல்யமானது! எவ்வளவு பெரிய பாக்கியசாலி நான்!

இன்னும் பலவிதமாகவும் தனது அதிர்ஷ்டத்தை நினைத்து கர்வம் கொண்டிருந்த சாயாவுக்கு, லஞ்ச் டயம் வரை காத்திருந்து அந்த உறையைப் பிரித்துப் பார்த்ததும் கடும் பூகம்பத்தில் சிக்கியது போலிருந்தது. 'பூகம்பமும் இல்லை, ஒன்றுமில்லை, தன் உடல்தான் அப்படி நடுங்குகிறது' என்று புரிந்து கொண்டு மேஜையைப் பற்றி சமாளிப்

முன்கதை...

சென்னையில், 'அகில பாரத ஹிந்து பரிவார்' அமைப்பின் தலைமையகத்தில் ஒரு குண்டு வெடிக்கிறது. ஒருவன் இறக்கிறான். இறந்தவனின் ஒரு கரத்தை, தன் வீட்டு மாடியில் கண்டெடுக்கிற இளம்பெண் ரஸியா, சி.பி.ஐ. அதிகாரி இன்ப சாகரனிடம் ஒப்படைக்கிறாள். தொடர்வதான நாட்களில் அவளுக்கு இன்பா மேல் காதல் உருவாகிறது.

தனக்குக் கிடைத்த அந்தக் 'கை'யை இன்பா, ஃபாரன்ஸிக் லாபில் பரிசோதிக்கக் கொடுக்கிறான். அங்கு பணியாற்றும் அனுபமா, இன்பாவின் கல்லூரி நாள் காதலி! அவள் தந்த தகவலின்படி, அந்தக் கையில் பச்சை குத்தியிருக்கும் கிளாவர் சின்னம், ஊட்டியில் வசிக்கும் பிரபல 'சூர்யா சுவாமி'யின் ஆசிரமச் சின்னம் என்பது தெரியவர, இன்பா ஊட்டி போய் சூர்யா சுவாமியை விசாரிக்கிறான்; பயன் ஏதுமில்லை.

இடையே, முகம் தெரியாத ஒரு வில்லன், இன்பா–ரஸியா இருவரையும் புகைப்படங்கள் எடுத்து இன்பாவின் மேலதிகாரிக்கு அனுப்புகிறான். கூடவே ஒரு கடிதம் – "இதே படங்களை இன்பாவின் மனைவிக்கும் அனுப்பப் போகிறேன்!"

அதன்படியே அவன் மனைவி பணிபுரியும் பள்ளி முகவரிக்கு – அவள் பெயருக்கு ஒரு கவர் வருகிறது. போட்டோக்கள் உள்ள கவர். இனி...

பதற்குள் டீச்சர்கள் அறையின் நாலாதிசைகளிலிருந்தும் "என்ன? என்ன?" என்ற கேள்விகள் பிறந்தன. "ஒண்ணுமில்லே" என்று அமைதிப்படுத்தி, வெளியே இழுத்திருந்த படங்களை சட்டென்று மீண்டும் உறைக்குள்ளே தள்ளினாள். "லேசா தலை சுத்தறது; அவ்வளவுதான்."

"மசக்கை ஆரம்பிக்கிறதோ, என்னமோ" என்றாள் ஒரு டீச்சர். மற்றவர்கள் 'குபீர்' என்று சிரித்தனர். சாயாவுக்குக் கோபம் வரவில்லை. டீச்சர்களுடைய கவனத்தை அந்த உறையிலிருந்து திசை திருப்ப கேலிப் பேச்சு உதவியது என்பதால் அவளும் சிரிப்பில் கலந்து கொள்வது போல நடித்தாள்.

நடுங்கும் கரத்தை கஷ்டப்பட்டு இயக்கி அரை நாள் லீவு எழுதி எச்.எம்.முக்கு அனுப்பிவிட்டுப் புறப்பட்ட போது அவளுடைய ஜகஜ்ஜோதியான காதல் அரண்மனை இருண்டு போனதுடன், இடிந்து, தகர்ந்து, நொறுங்கியும் விட்டிருந்தது. பட்டப் பகலில் பஸ்ஸுக்காகக் கொளுத்தும் வெயிலில் நின்றபோதிலும் வாழ்க்கையே இருள்மயமாகத் தோன்றியது. ஏமாற்றம் இதயத்தைக் கவ்வியது. எத்தனை நம்பிக்கை, எத்தனை அன்பு, எத்தனை பெருமிதம் கொண்டிருந்தாள் கணவனைப் பற்றி! எல்லாம் போய் நடுத்தெருவில் அநாதையாக விடப்பட்டது போன்ற உணர்வு.

வீட்டிலே யாரும் இல்லை. தனிமை தந்த துணிவில் மறுபடி உறையிலிருந்து படங்களை உருவி எடுத்தாள். கோபம், ஏமாற்றம் இவற்றினிடையே 'எத்தனை அழகான பெண்!' என்ற பிரமிப்பும் ஏற்பட்டது. மதன சாம்ராஜ்யத்தின் வாசலை நெருங்கும் பருவம். மலர் மாலை போல் கரங்களை அவன் தோள்கள் மீதாகப் போட்டு, கழுத்தை அணைத்து குதிகால் எம்ப, நெஞ்சில் சிரம் புதைத்து... ஒரு வேளை எதற்காகவாவது வருத்தப்பட்டு அழுகிறாளோ? இன்பா ஆறுதல் சொல்கிறானோ? அவன் கடமைகளில் ஓர் அங்கமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்குமோ? அப்படியானால் இதோ இந்தப் படத்தில் அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு சற்று எட்ட நின்று தலை உயர்த்தி சிரிக்கிறாளே, அதற்கு என்ன அர்த்தம்?

இரண்டு மூன்று படங்களைத் தள்ளியதும் ஒரு கடிதம் நழுவி ஊஞ்சலாடியபடி தரை இறங்கியது. எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். "இந்த போட்டோக்கள் சின்ன வீடு நெ. 2. சின்ன வீடு நெ. 1 பார்க்க, மாலை நேரத்தில் அசோக் நகர் போகவும்!" அவன் பெயர் குறிப்பிடாமல் அனுபமா வீட்டு விலாசம் மட்டும் எழுதப்பட்டிருந்தது. மொட்டைக் கடிதம்தான்; அனுப்பியவன் விலாசம் இல்லாததோடு, கையெழுத்து மூலம் தன்னைக் கண்டுபிடித்து விடக் கூடாது என்பதற்காக இடது கரத்தால் சிரமப்பட்டு கடிதம் வரையப்பட்டிருந்தது. கோணலான, நெளிநெளியான எழுத்துக்கள்.

சில மந்திரிகளுக்கும் மாஜி அமைச்சர்களுக்கும் தான் இரண்டு மூன்று வைப்புகள் என்று கேள்வி. இவருக்குமா? எப்படி என்னை ஏமாற்ற முடிந்தது? ஏன் எனக்கு சந்தேகமே ஏற்படவில்லை? பொய்யாக இருக்க முடியாது. போட்டோக்கள் சாட்சி சொல்கின்றனவே! நெ. 2 மெய்யானால் அசோக்நகர் விவகாரமும் உண்மையாகத் தானே இருக்க வேண்டும்!

உடனேயே அசோக் நகருக்குக் கிளம்பத் தோன்



நியது. ஆனால் கடிதத்தில் "மாலை நேரத்தில்" என்ற சொற்கள் அடிக்கோடிடப்பட்டு வேகத் தடை செய்தன. வாசல் கதவைத் தாளிட்டு விட்டு வந்து மறுபடி உட்கார்ந்து படங்களை நிதானமாகப் பார்த்தாள். ஆவேசத்தோடு விட்டெறிந்தாள்; திரட்டி எடுத்து வந்து உறையிலிட்டு மேஜை மீது வைத்தாள். கடிதத்தைப் படித்துக் கசக்கினாள். திரும்பவும் பிரித்து சுருக்கம் நீக்கி மடித்து உறையிலிட்டாள். விலாசம் மனப்பாடமாகி விட்டது.

அமர்ந்திருந்த நாற்காலி, முள்ளாகக் குத்தியது. வீட்டின் வெறுமை அவளைப் பார்த்து கிண்டலாகச் சிரித்தது. மின்விசிறி ஓடியும் புழுக்கத்தில் வியர்த்துக் கொட்டியது. அவர் தன்னைத் தொட வந்தால் எப்படி அனுமதிப்பது; அணைக்க முற்பட்டால் எவ்வாறு சகிப்பது? அருவருப்பு முட்டி மோதிக் கொண்டு வர, வயிற்றைக் குமட்டியது.

பிரச்னைகள் வரும் போது அவரிடம் போவேன்; இப்போது அவரே பிரச்னை யாகி விட்ட நிலையில் யாரிடம் போக? நேருக்கு நேராகக் கேட்டு விடலாம். ஆனால் உண்மை வருமா? சற்றுமுன் எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொள்ள முற்பட்டது போல, அவரும் தன் கடமையின் ஓர் அங்கமாக இப்படி நடந்து கொள்ள நேர்ந்தது என்று ஏதேனும் விளக்கமளித்தால்...? சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒரு கதை பண்ணுவது சிரமமா என்ன? அப்பாவிடம் முறையிட்டால் அவரும் மகனுக்கு சாதகமாகத்தான் பேசுவார்.

அசோக் நகருக்கு சாயந்திரம் போய் விட்டு வந்தால் எல்லாம் உறுதியாகி விடும். அப்புறம் சால்ஜாப்பு ஏதும் சொல்ல முடியாது. அதான் இதை அனுப்பினவனே வழி சொல்லித் தந்திருக்கிறானே! சரி, போகிறோம்; விஷயமும் ஊர்ஜிதமாகிறது என்றால் அப்புறம் இந்த வீட்டுக்கு எப்படித் திரும்பி வருவது? இப்போதே - இங்கு இருக்கும் ஒவ்வொரு வினாடியும் - சித்ரவதையாக இருக்கிறதே. உடம்பெல்லாம் பற்றி எரிகிறதே! முள் சாட்டையை உடலைச் சுற்றி சொடுக்கி ரணப்படுத்துவது போலிருக்கிறதே!



முடியாது! அசோக் நகரிலிருந்து இங்கே திரும்பி வரவே முடியாது! சின்னியுடன் சேர்ந்து வாழ முடியாது என்று ஆத்திரப்பட்டு இரைந்தேனே? இப்போது இன்பாவுடன் சேர்ந்து வாழ்வதே முடியாத காரியமாகி விட்டதே!

இங்கே திரும்பி வர முடியாது என்றால் எங்கே போவது? பெற்றோரிடம் போகலாம். அப்பா உபதேசம் செய்வார். திரும்பவும் கணவனுடன் சேர்த்து வைக்க முயற்சி மேற்கொள்வார். அதை நான் ஏற்காது போனால் வேண்டாவெறுப்பாகத்தான் வீட்டில் இடமளிப்பார்; அப்பா-அம்மாவின் புலம்பலைச் சகித்துக் கொண்டு அங்கே தங்கலாம். ஆனால் முதல் காரியமாக அங்கேதானே என்னைத் தேடிக் கொண்டு இன்பா வருவார்? தன்னை அனுப்பி வைக்கும்படி அப்பாவிடம் கேட்பார். 'வர முடியாது' என்றால் யார் எனக்கு ஆதரவாகப் பேசுவார்கள்? சட்டத்தின் உதவியைக் கூட அவர் நாடலாம். சட்டம் என் சார்பில் பேசாது, நிச்சயம்.

தலைவலி பிளந்தது. பாத்ரூம் அலமாரியில் விக்ஸ் அல்லது மெடாஸின் மாத்திரை ஏதாவது இருக்குமே? விஷமே இருந்து விட்டால் தேவலாம். ஒருவழியாகப் போய்ச் சேர்ந்து விடலாம்.

அலமாரி கதவு திறந்த போது அப்பாவுக்காக ஞாபகமாக மகன் உதகையிலிருந்து வாங்கி வந்திருந்த யூகலிப்ட்ஸ் தைல பாட்டில் கண்ணில் பட்டது. உடனேயே, 'சூரியா சுவாமியைப் போய்ப் பார்த்தால் என்ன?' என்ற எண்ணம் பளிச்சிட்டது. ஆ! அதுதான் சரி!

இன்பா என்ன சொன்னார்? 'ஆச்சர்ய

மான "மனுஷன்; நிமிஷமா என்னை இனம் கண்டு கொண்டார்' என்றாரே? அப்படி என்னையும் புரிந்து கொள்வாரா? அவர் ஆசிரமத்திலேயே சேர்ந்து சந்நியாசினி ஆகி விட முடியுமா? விஷம் குடித்து செத்துப் போவதைக் காட்டிலும் இது மேலல்லவா? இந்த உலகில் இனி எனக்கு என்ன இருக்கிறது? குழந்தையா, குட்டியா? கணவரும் இனி இல்லை என்றாகி விட்டது. சின்னிக்காகவோ அப்பாவுக்காகவோ நான் இங்கே இருக்க அவசியம் இல்லை. அவர்களுக்கு நான் தேவையில்லை. நான் இல்லாமலிருப்பதே அவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். தெய்வத்தினிடமாவது மனசைச் செலுத்தி மன அமைதி பெற முயற்சிப்பது தான் நல்லது.

ஒரு முடிவுக்கு வந்ததும் சாயாவுக்கு பசி கூடத் தெரிந்தது. லஞ்ச் டயத்தில் சாப்பிடப் பிடிக்காமல் திரும்ப எடுத்து வந்திருந்த டிபன் பொட்டலத்தைப் பிரித்தாள். மிளகாய்ப் பொடி தடவிய இட்டிலிகள் மளமளவென்று மறைந்தன! வாட்டர் பாட்டில் காலியானது. கான்டீன் காப்பி இல்லாவிட்டால் என்ன? அதைவிட நல்ல காப்பி போட்டு சாப்பிட்டால் போயிற்று! கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு வீம்புடன் எழுந்து போய் மணக்க மணக்க காப்பி தயாரித்து அருந்தினாள். இந்த வீட்டில் கடைசி காப்பி.

புதிய தெம்புடன் படுக்கை அறைக்குள் நுழைந்து ஸூட்கேஸ் நிரப்ப ஆரம்பித்தாள். இவ்வளவு பெரிய பெட்டி வேண்டாம் என்று சற்று சிறிய பெட்டிக்கு மாற்றினாள். சந்நியாசினி ஆகப் போறவளுக்கு ரெண்டு மாற்று உடை போதாதா? தூக்கிக் கொண்டு போக போர்ட்டர் தேடவும் வேண்டாம் அல்லவா?

பர்ஸில் பணம் கொஞ்சமாக இருந்தது. பீரோ திறந்து வீட்டுச் செலவுக்கு வைத்திருந்த பணத்தில் தாராளமாக எடுத்துக் கொண்டாள். ரெடி! பெட்டியோடு அசோக் நகர் போக வேண்டியது. அங்கே சின்ன வீடு நெ. 1 தரிசித்த பிறகு சென்ட்ரல் போய் நீலகிரி எக்ஸ்பிரஸ் ஏற வேண்டியது. ஸ்லீப்பர் அல்லது ஸிட்டிங் ரிஸர்வேஷன் கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறி, தரையில் உட்கார்ந்தபடி பயணம் செய்தாவது மேட்டுப்பாளையம் போய் விட வேண்டும். கூடியவரை ஆட்டோ தவிர்த்து அசோக் நகருக்கும் சென்ட்ரலுக்கும் பஸ்ஸிலேயே போகலாம். ஆட்டோ டிரைவர்கள் விசாரணைக்கு உள்ளாவார்கள்.

'போய் வருகிறேன்; தேட வேண்டாம்' என்று கடிதம் எழுதி வைப்பதா? அல்லது இந்தப் படங்களைப் பார்வையாக மேஜை மேல் வைத்து விட்டுப் போகலாமா? இரண்டுமே வேண்டாம்; அவர்தான் ஸி.பி.ஐ. சூராச்சே! கண்டுபிடிக்கட்டுமே!

'என்னை சூர்யா சுவாமி ஏற்பாரா? 'திரும்பி கணவனிடமே போ' என்று கூறி அனுப்பி விட்டால்? காலில் விழுந்து கெஞ்சியாவது ஆசிரமத்தில் சேர அனுமதி பெற வேண்டியதுதான்... சரி, சின்னி வருகிற நேரம்; கிளம்பி விடலாம்.'

பெட்டியைத் தூக்கிக் கொண்டு வாசலுக்குச் சென்று கதவைத் திறக்க முற்பட்டவள், திரும்பி ஒருமுறை அந்த இல்லத்தைப் பார்த்தாள். துயரம் பீறிட, விம்மி விம்மி அழுதாள்.

இரவு வழக்கத்தை விடவும் சற்று தாமதமாக வந்த இன்பசாகரன், சின்னி குனிந்த தலை நிமிராமல் பாடப் புத்தகம் படிப்பதையும், அப்பா ராகம் போட்டு நாளிதழ் படிப்பதை மறந்து மேற்கூரையைப் பார்த்தபடி இருப்பதையும் கண்டான். அவர்களின் வழக்கத்துக்கு மாறான இந்தப் போக்கு திகைப்பை உருவாக்க, "அப்பா என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" என்று கேட்டான்.

அவர் தலை தாழ்த்தி, தொண்டை செருமி, தயக்கத்துடன் "சாயா..." என்று ஆரம்பித்தார்.

"சாயாவுக்கு என்ன?" என்று பதறியதில் இன்பசாகரனின் கரிசனமும் காதலும் ஜோடியாக நர்த்தனம் புரிந்தன.

"அவள் இன்னும் வீடு திரும்பவே இல்லே, இன்பா. கவலையா உட்கார்ந்திருக்கேன்" என்றார்.

இன்பசாகரனுக்கு உடனடியாக, தன் மேலதிகாரிக்கு வந்து சேர்ந்த புகைப்படங்களும் அவற்றுடன் இணைந்திருந்த குறிப்பும் நினைவுக்கு வந்தன. அவன் இதயத்துக்குள்ளேயே இப்போது குண்டு வெடித்தது!

(தொடரும்)




"வளர்ப்பு மகனுக்குப் பொண்ணு குடுத்தது தப்பாப் போச்சு..."

"ஏன்...?"

"தலை தீபாவளிக்கு கம்பி மத்தாப்புவெல்லாம் தங்கக் கம்பில தான் செஞ்சு வாங்கணும்ங்கறான்!"

— எஸ். இராஜேந்திரன்


தீபாவளித் திருநாளில் உங்கள்
செல்வங்களுக்கு ஒளி கூட்டுங்கள்
DUGAR
DIWALI
DEPOSIT SCHEME
நீங்கள் தீபாவளியை கோலாகலமாகக் கொண்டாட, துகர் உங்களை வாழ்த்துகிறது. கொண்டாட்டங்களுக்கு இடையே துகரில் உங்கள் சேமிப்பை துவக்க மறவாதீர்கள். இந்த தீபாவளி உங்கள் எதிர்கால வளத்திற்கு வழி காட்டும் ஒளிவிளக்காக விளங்க துகர் அளிக்கும் சிறந்த வழி.
DUGAR
FINANCE INDIA LTD
REGD. OFFICE: DUGAR TOWERS, 123 MARSHALLS ROAD, MADRAS 600 008. PH; 8553535(10 LINES) FAX: 8554864
■ HIRE PURCHASE ■ LEASING ■ PROPERTY DEVELOPMENT ■ PUBLIC DEPOSIT ■ MERCHANT BANKING ■ FOREIGN EXCHANGE ■ SHARE POINT ■
BRANCHES:
MADRAS
ADYAR
MOUNT ROAD
T.NAGAR
MYLAPORE
BANGALORE
JAYANAGAR
MALLESWARAM
BOMBAY
CALICUT
COIMBATORE
ERNAKULAM
GUDUR
GUNTUR
MADURAI
NELLORE
SALEM
SECUNDERABAD
TIRUPATI
TRICHY
VISHAKAPATNAM
VIJAYAWADA
TAKEWING 840 - D1 - TN - K

ஜெய்

தன் முன் நிறுத்தப்பட்டிருந்த நபரை ஏற இறங்கப் பார்த்தான் எமன்.

"அண்ணே, வணக்கம்! நல்லாயிருக்கீங்களா?" என்று எல்லா பற்களும் தெரிய, விசாரித்தபடியே கட்டித் தழுவ முற்பட்ட நபரை, சித்திரகுப்தன் தடுத்து நிறுத்தினான்.

"யோவ், வுடுய்யா, ரெண்டு தலைவருங்க பேச்சு வார்த்தை நடத்தும்போது நீ ஏன் நடுவிலே வரே?" என்று சித்திரகுப்தன் மீது பாய்ந்தான் அந்த ஆள்.

"சித்திரகுப்தா, யார் இந்த நரன்?"

"பிரபோ! இவர் பெயர் அப்பாசாமி. பூலோகத்திலிருந்து அழைத்து வரப்பட்டிருக்கிறார். அங்கு இவர் ஒரு அரசியல் தலைவராக இருந்தவர். நீதிதேவன் என்று எண்ணற்ற குற்றவாளிகளால் பாராட்டப்பட்டவர். தற்போது தங்கள் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறார்!"

"இவர் செய்த குற்றம்?"

"எண்ணிக்கை தெரியாத குற்றம்"- என்று வீர பாண்டிய கட்டபொம்மனைப் போல் பாய்ந்த அப்பாசாமியை, தடுத்து நிறுத்தியபடியே கூறினான் சித்திரகுப்தன் :

"பிரபோ! முறைகேடாக கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து, அதன் காரணமாகவே மக்களைப் பெரிதும் கவர்ந்தவர். இவர் சேர்த்த பணத்தை வைத்துக் கொள்ள இடமில்லாததால் ஸ்விட்ஸர்லாந்து என்ற நாட்டின் ஒரு வங்கி, இவருக்காகவே தனி கிளை ஒன்றைத் துவக்கியிருக்கிறது."

'அந்தப் பணத்தையெல்லாம் எமலோக பேங்குக்கு மாற்ற வழியிருக்கிறதா. ஸ்விட்ஸர்லாந்து பேங்குக்கு எமலோகத்தில் கிளை இருக்கிறதா? விசாரிக்க வேண்டும்' என்று சிந்தித்தபடியே நின்று கொண்டிருந்தார் அப்பாசாமி.



எமனின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"அவ்வளவு பெரிய ஊழல் பேர்வழி என்றால் விசாரணை எதற்கு? நிறைவேற்றுங்கள் தண்டனையை!"

"அதில் ஒரு சிக்கல் பிரபோ! எமலோகத்தை ஜனநாயக வழியில் நடத்திக்காட்ட முடியுமா என்று பரீட்சார்த்த முறையில் சோதித்துப் பார்க்கும்படி, இறைவனிடமிருந்து கட்டளை வந்திருக்கிறது!"

சித்திரகுப்தன் கூறியதைக் கேட்டவுடன் அப்பாசாமிக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. இங்கேயும் ஜனநாயகமா? ஒரு நிமிடம் எமனின் அரியாசனத்தில் தான் அமர்ந்திருப்பது போல் கற்பனை செய்து கொண்டார்.

"ஜனநாயக வழியா? அப்படியென்றால்?"

ஜனநாயக வழி பற்றி எப்படி விளக்கினால் எமனுக்குப் புரியும் என்பது தெரியாமல் சித்திரகுப்தன் குழம்பினான். பிறகு ஒரு முடிவோடு,

"ஜனநாயகம் என்பது அதர்மவாதிகளால் விரும்பப்படும் தர்மவழி" என்று விளக்கினான்.

எமனுக்கு மேலும் குழம்பியது.

"எதுவாக இருந்தாலும் சரி. இறைவன் சித்தம் நம் பாக்கியம். ஜனநாயக வழிமுறைகளைப் புரிந்து கொண்ட பின் விசாரணையைத் தொடங்குவோம்!"

எமன் கூறி முடித்ததும் "வெற்றி வெற்றி" என்று கத்தினார் அப்பாசாமி.

மறுநாள் பந்தாவாக எமதர்பாருக்குள் நுழைந்தார் அரசியல் தலைவர் அப்பாசாமி.

'போடாதே, போடாதே, பொய் வழக்குப் போடாதே. எமன் அண்ணாச்சி - உன் பேரன் வழக்கு என்னாச்சி? ஒழிக, ஒழிக எமன் ஒழிக' போன்ற கோஷங்கள் பின் தொடர்ந்தன.

"சித்திரகுப்தா! ஏன் இவ்வளவு அமர்க்களம்? இங்கே என்ன நடக்கிறது? நான்தானே எமன்?" - பரிதாப

ஜனநாயகம்!

சத்யா

மாகக் கேட்டான் எமன்.

"பிரபோ! பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. எமதர்பார் ஜனநாயக வழியில் இயங்க ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான்!"

"யார் இவர்கள்? ஏன் இப்படி கோஷம் இடுகிறார்கள்? அவர்களைத் தடுத்து நிறுத்து!"

''மன்னிக்க வேண்டும் பிரபோ. அவர்களைத் தடுக்க சட்டத்தில் இடமில்லை. ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் கோஷம் இடலாம். இவர்களெல்லாம் குற்றம் சாட்டப்பட்டுள்ள அப்பாசாமியின் தொண்டர்கள். அவரது கோரிக்கையின்படி நரகத்திலிருந்து ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நடக்கும்போது இவர்களும் இங்கிருப்பார்கள்!'

எமனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"அந்தப் பெண் தொண்டர்களையாவது வெளியே அனுப்ப முடியாதா? அவர்கள் நிற்கிற கோலத்தைப் பார்க்கவே பயமாக இருக்கிறதே!"

"கவலை வேண்டாம் பிரபோ. அப்பாசாமியின் தொண்டர்களால் நமக்கோ, இந்த நீதிமன்றத்துக்கோ ஆபத்து நேராமல் இருக்க பாதுகாப்பு கோரியுள்ளோம்!"

"ஜனநாயகத்தில் நமக்கும் பாதுகாப்பு இருக்கிறதா? நல்ல வேளை. விசாரணை ஆரம்பமாகட்டும்"- உத்தரவிட்டான் எமன்.



விசாரணை தொடங்கியது. அப்பாசாமி அலட்சியமாக எழுந்து ஒரு மனுவைத் தாக்கல் செய்து விட்டு அமர்ந்தார்.

"சித்திரகுப்தா! என்ன அது?"

''பிரபோ! குற்றவாளி ஒரு மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த வழக்கை விசாரிக்கும் உரிமை தங்களுக்கு இல்லை என்று தமது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்."

"ஷேம், ஷேம்!" என்று பார்வையாளர்கள் மத்தியிலிருந்து கூக்குரல் கிளம்புகிறது.

''என்ன? எனக்கு அதிகாரம் இல்லையா? என்ன உளறல்? நான்தான் இங்கு எமன். எல்லா அதிகாரங்களும் என்னிடம் தான்!"

''அதைக் குற்றவாளி ஏற்கவில்லை. எமனை மாற்றுங்கள் என்கிறார்" என்றான் சித்திரகுப்தன்.

எமனுக்கு மீசை துடித்தது.

"அக்கிரமம். குற்றம் சாட்டப்பட்டவரின் விருப்பப்படி வழக்கை நடத்த வேண்டுமா அல்லது நீதிபதியின் விருப்பப்படி வழக்கை நடத்த வேண்டுமா?"

"ஜனநாயகத்தில் இருவரும் சமம் பிரபு. தாங்கள் நியாயமான தீர்ப்பை வழங்க மாட்டீர்களோ என்று இவர் சந்தேகப்படுகிறார்."

"என்ன? நான் தவறாகத் தீர்ப்பு வழங்கி விடுவேன் என்று இந்த நரனுக்கு சந்தேகமா? நான் எமதர்மன்! எம அதர்மன் அல்ல!"

எமனைப் பார்க்க சித்திரகுப்தனுக்கே பரிதாபமாக இருந்தது.

"இருக்கலாம் பிரபோ! ஜனநாயகத்தில் எல்லோருக்கும் கருத்துரிமை உண்டு. தாங்கள் எமதர்மன்தான் என்பது தங்கள் கருத்து. இவர் கருத்து வேறாக இருக்கிறது!

"இந்த உளறலை நான் ஏற்க முடியாது. நரனே, அப்பா

சாமி! உண்மையைச் சொல், நீ குற்றவாளி தானே?

எமனின் கேள்வியால் அப்பாசாமி அதிர்ச்சியடைந்தார்.

"இல்லை. மறுக்கிறேன். வன்மையாகக் கண்டிக்கிறேன். என்னைக் குற்றவாளி என்று கூறும் எமனே, உமது லட்சணம் என்ன? நீர் வந்த பாதையைத் திரும்பிப் பாரும். மார்க்கண்டேயன் மீது பாசக் கயிற்றைத் தூக்கிக் கொண்டு பாய்ந்த நீர், முகத்தில் கரிபூசிக் கொண்டு திரும்பியது மறந்து விட்டதா? அப்போது 'எங்கே போயிற்று உம் நீதி?"

எமன் வெலவெலத்துப் போனான்.

"அது மட்டுமா? சத்தியவானின் உயிரைப் பறிப்பதற்காக வீறாப்புடன் புறப்பட்ட நீர் அதைச் செய்யத் தவறியது ஏன்? யாரைக் கேட்டு சாவித்திரிக்கு வரம் கொடுத்தீர்? இதற்காகக் கைமாறிய தொகை எவ்வளவு? விசாரணை நடத்தத் தயாரா?"

எமனுக்கு மண்டையே வெடித்துவிடும் போலிருந்தது. ஜனநாயகம் எவ்வளவு ஆபத்தான விஷயம் என்று தோன்றியது.

"சித்திரகுப்தா, வழக்கு போகிற போக்கே விநோதமாக இருக்கிறது. எனக்கு பதிலாக மேற்கொண்டு நீயே விசாரி!"

"உத்தரவு பிரபோ! நரனே! உம் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு நீர் என்ன பதில் கூறுகிறீர்?"

"அவற்றையெல்லாம் நான் ஏற்கெனவே மறுத்து விட்டேன். என் மீது முன்விரோதம் கொண்டவர்கள் கற்பனையாகத் தயாரித்த பட்டியல்தான் அது!"

உறுதியாகக் கூறினார் அப்பாசாமி.

"ஆதாரங்களைப் பரிசீலிக்கும்போது ஊழல் நடந்திருப்பது உறுதியாகத் தெரிகிறது!"

"ஆதாரங்கள் எப்படிக் கிடைத்தன? யாரிடமிருந்து திரட்டினீர்கள்?"

விவாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்த எமன் குறுக்கிட்டான்.

"அது தேவையில்லை. ஊழல் புரிந்ததை ஒப்புக் கொண்டால் தண்டனை குறையக் கூடும்."

சிலிர்த்தெழுந்தார் அப்பாசாமி.

"என்னை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. நானே ஒரு கமிஷன் அமைக்கிறேன். நான் சொல்கிற ஆள் அதற்குத் தலைவராக இருப்பார். அந்தக் கமிஷனின் முடிவு எனக்குச் சாதகமாக இருந்தால் தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறேன்"– நியாயமாகக் கூறினார் அப்பாசாமி.

"அதெல்லாம் பூலோகத்தில். இங்கு இது ஒன்றுதான் நீதிமன்றம். இதன் தீர்ப்புதான் இறுதியானது."

முடிவாகச் சொன்னான் எமன். அப்பாசாமியாவது ஏற்பதாவது!

"அப்பீலே கிடையாது என்றால் இது என்னய்யா ஜனநாயகம்?"

எமனின் சிம்மாசனத்தை நெருங்கி முரட்டுத்தனமாகக் கேட்டார் அப்பாசாமி.

"சித்திரகுப்தா! அப்பீல் என்றால் என்ன?"

"தாங்கள் வழங்கும் தீர்ப்பில் இவருக்கு திருப்தி இல்லையென்றால் தங்களின் மேலிடத்திற்கு முறையிடுவதுதான் அப்பீல்!"

விளக்கினான் சித்திரகுப்தன்.

"எனக்கும் மேலே இன்னொரு எமனா?"

"ஆம் பிரபோ! தாங்கள் கீழ்கோர்ட் எமன். தங்கள் தீர்ப்பை எதிர்த்து இவர் அப்பீல் செய்தால், மேல் கோர்ட் எமன் அதை விசாரிப்பார். இப்போது நாம் வழக்கின் ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறோம். இவர் விசாரணைக்கு உட்பட்டவர்தானா, இவரை விசாரிக்கும் தகுதி தங்களுக்கு உண்டா, அப்படி இருந்தாலும் இந்த வழக்கை எமலோகத்தில் நடத்த முடியுமா, நடத்தினாலும் தீர்ப்பு வழங்கும் உரிமை தங்களுக்கு உண்டா – போன்ற ஏராளமான விஷயங்களை மேல் கோர்ட் எமன் விசாரிப்பார்."

"அக்கிரமம்! குற்றவாளிகளுக்குச் சாதகமாக யாரோ சட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். இதில் நீதி கிடைக்காது."

"அப்படிச் சொல்ல முடியாது பிரபோ! சுமார் பதினெட்டாயிரம் சாட்சிகளை விசாரித்த பின் வழங்கப்படும் தீர்ப்பு தவறாக இருக்க முடியாது"– என்றான் சித்திரகுப்தன்.

திடுக்கிட்டான் எமன். "பதினெட்டாயிரம் சாட்சிகளா?"

அப்பாசாமி ஆத்திரத்தோடு குறுக்கிட்டார்.

"குறுகிய நோக்கத்தோடு விசாரித்தால் அவ்வளவுதான் இருக்கும். ஆனால், நான் விடப் போவதில்லை. 1890–ஆம் ஆண்டிலிருந்தே வழக்கை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுப் போராட்டம் நடத்துவேன்."

பற்களை நறநறவென்று கடித்தான் எமன்.

"சித்திரகுப்தா! யார் கண்டுபிடித்தார்கள் இந்த ஜனநாயகத்தை? இதையெல்லாம் நான் ஏற்க முடியாது! ஏமாற்று வித்தைக்கு யாரோ ஜனநாயகம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். நிறைவேற்றுங்கள் தண்டனையை!"

பொங்கியெழுந்தார் அப்பாசாமி.

"எச்சரிக்கிறேன். எனக்கு தண்டனை விதித்தால் எனக்கு ஆதரவாக அனுதாப அலை வீசும். எமலோகமே தூள் தூளாகிவிடும். ரத்த ஆறு ஓடும். என் ஆதரவாளர்கள் உணர்ச்சி வசப்பட்டு விட்டால் அவர்களை என்னால் கட்டுப்படுத்த முடியாது. அந்த வழக்கம் என்னிடம் இல்லை."

அப்பாசாமி வீர உரை ஆற்றிக் கொண்டிருந்த போது ஒரு கல் எமனின் சிம்மாசனத்தின்மேல் வந்து விழுந்தது.

எமன் விசாரணையை ஒத்தி வைத்தான்.

மீண்டும் வழக்கு தொடர்ந்தது.

ஜனநாயகமும் தொடர்ந்தது!

விமான நிலையத்திலேயே அந்த குண்டு சர்தார்ஜியைப் பார்த்தேன். புல்டோஸர் அளவுக்கு தொந்தக்கா பொந்தக்கா என்று நடந்து வந்து பருமனான வெள்ளரி விரல்களால் தன் டிக்கெட்டை எடுத்துக் கவுண்டரில் நீட்டினார்.

"கடவுளே! இந்த ஆசாமி என் பக்கத்தில் வந்து தொலைக்கக் கூடாது" என்று வேண்டிக் கொண்டேன். ட்ரான்சிட் லவுன்ஜில் பெண்டுலம் போல அசைந்து அசைந்து மிகுந்த பிரயாசையுடன் ப்ளாஸ்டிக் நாற்காலியில் உட்கார விழைந்த போது அது விரிந்து சப்தம் போட, இடம் போறாமல் நின்று கொண்டார். பைக்குள் வைத்திருந்த பொட்டலத்தில் மடித்த ஒரு கட்லெட், ஒரு கேக் இவைகளை எடுத்து உண்ணத் தொடங்கினார். வாழ்க்கை பூராவும் நிறுத்தாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் போலத் தோற்றமளித்தார். 'ஏரோ ப்ரிட்ஜை'க் கடந்து உள்ளே சென்றதும் கடவுள் என் பிரார்த்தனையைக் கேட்டு விட்டார்.

ஏர்பஸ் விமானத்தில் இருபத்தேழாம் வரிசையில் சீட் கிடைத்தால் அதிர்ஷ்டம். கால் நீட்டிக் கொள்ள நிறைய இடம், சாப்பாட்டுத் தட்டுக்கு முன் சீட்டின் முதுகைப் பிரித்து, மார்பு வரை அசௌகரியமாக அழுத்திக் கொள்ள வேண்டியதில்லை. 'ஆரா'மாகப் பிரயாணம் செய்யலாம். மேலும் டேக் ஆஃப் – லாண்டிங் போது விமானப் பணிப்பெண் இருவர் எதிர் இருக்கையில் ஒரே திசையில் பார்த்துக் கொண்டு அமருவார்கள். சிலவேளை புன்னகைப்பார்கள். இதெல்லாம் போனஸ் சந்தோஷங்கள்.

ஆனால் இருபத்தேழாம் வரிசையில் ஓர் அபாயம் உள்ளது. கைக்குழந்தைத் தாய்மார்கள் அல்லது நிறை கர்ப்பவதிகளுக்கு சௌகரியத்தை உத்தேசித்து அந்த வரிசையில் இடம் கொடுப்பார்கள். சில சமயம் மந்திரிகள். அப்படி யாரும் கர்ப்ப ஸ்திரீயோ, மந்திரியோ வராததால் நான் மகிழ்ச்சியுடன் கால்மேல் கால் போட்டுக் கொள்ள, என் சந்தோஷம் அதிக நிமிஷங்கள் நீடிக்கவில்லை.

செக் – இன் கவுண்டரில் பார்த்த அந்த குண்டு சர்தார்ஜி ஒவ்வொரு வரிசை எண்ணாகத் தன் டிக்கெட்டோடு ஒத்துப் பார்த்துக் கொண்டே வந்தவர், என் வரிசையில் நின்றார், என் அருகில் அமர்ந்தார். ஒரு சர்தார்ஜி என்று சொல்வதை விட கிட்டத்தட்ட மூன்று சர்தார்ஜி. ஏராள தாராளமாக இருந்தார். முழுசாக சீட்டில் உட்கார முடியவில்லை. வயிற்றில் இறுக்கிக் கொள்ள சீட் பெல்ட் நீளம் போதவில்லை. உட்கார்வதற்குள் கொல்லன் துருத்தி போல் மேல் மூச்சு வாங்கியது. என் அருகே உட்கார இருக்கையின் பக்க நீட்டலில் வைத்துக் கொண்ட கை பிதுங்கி, என் மார்மேல் வந்து இடித்தது. நான் எத்தனைதான் இந்தப் பக்கம் ஒதுங்கிக் கொண்டாலும் அவர்மேல் படாமல் இருக்க முடியவில்லை. நான் அவ்வளவு தொட்டாற் சுருங்கி இல்லையென்றாலும் இரண்டரை மணிநேரப் பிரயாணம் முழுவதும் குண்டு சர்தார்ஜியால் இவ்வாறு நெருக்கப்பட்டு இருபத்தைந்து விழுக்காடு சீட்டில் முழங்கால்களுக்கு இடையில் இரண்டு கைகளையும் செருகிக் கொண்டு பயணம் செய்வதை நிச்சயம் விரும்பாதவன்.

ஹோஸ்டஸைக் கூப்பிட்டு வேறு சீட்டு கிடைக்குமா என்று தாழ்ந்த குரலில் விசாரித்தேன். சர்தார்ஜி என்னை ஓரக் கண்ணால் பார்த்து, பையிலிருந்து பிரயாசையுடன் ஒரு புத்தகத்தை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டு அரைக் கண்ணாடி அணிந்து கொண்டார். நான் அதற்கு மேல் முடியாதபடி நெற்றியைச் சுருக்கிக் கொண்டு உலகத்தின் சகல ஜீவராசிகள் மேலும் வெறுப்பாக இருந்தேன். இன்னும் ஒதுங்கி உட்கார, இன்னும் நெருக்கப்பட்டு, என்னைக் கால்பாகமாக சுருக்கிக் கொண்ட பின்னும் உடல் அவர் மேல் பட்டது.

"**சா**ரி சார்! தி ஃப்ளைட் இஸ் ஃபுல்" என்று புன்னகைத்தாள், என்னை நோக்கி வந்த விமானினி.

'இந்த மாதிரி ஆட்கள் எல்லாம் ரெண்டு டிக்கெட் வாங்கி, இடையில் இருக்கும் தடுப்பை நீக்கும் வசதி மேல் நாட்டில் உள்ளது என்று சொல்ல விரும்பினாலும் சர்தார்ஜியின் ஆகிருதியை யோசித்துப் பேசாமல் இருந்து, முகத்தையும் நெற்றியையும் இன்னமும் சுண்ட வைத்துக் கொண்டேன். சர்தார்ஜி என் தர்மசங்கடத்தைப் பற்றிக் கவலைப்படாமல் திமிங்கல மூச்சு விட்டுக்

சுஜாதா

கொண்டு இகனாமிஸ்ட் பத்திரிகையைப் பிரித்து வைத்து படிக்க முற்பட்டார். அரைக் கண்ணாடி மூலம் என்னைப் பார்த்து "எம்ஜ இன்கன்வீனியன்சிங் யூ?" என்றார்.

உலகத்திலேயே மிகையற்ற வாக்கியம்.

"இல்லை" என்றேன், 'ஆம்' என்பதற்கு பதில்.

இந்த மாதிரி ஆட்கள் எல்லாம் ஏன் மனுஷராய்ப் பிறக்கிறார்கள்? திமிங்கலமாகவோ, காண்டாமிருகமாகவோ அல்லது அன்று 'இந்தியன்' ஷூட்டிங்கில் பார்த்தேனே, அந்த ஓவர் சைஸ் பறவையாகவோ பிறந்து, கடலிலோ கூண்டிலோ இருக்க வேண்டியவர்கள்,



என்னத்துக்காக ஏ 319ல் வருகிறார்கள்!

இல்லை, இது சில வேளை வம்சத்தில் உண்டு என்றும் சொல்வார்கள். பார்த்தால் சாப்பிட்டுப் பெருத்தவர் போலத்தான் தோன்றுகிறார். இவர் யார்? பிறக்கும் போது எத்தனை பவுண்டு இருந்திருக்கும் குழந்தை? சாப்பிட்டு சாப்பிட்டு இப்படி பருமனான 'சூமோ' சண்டைக்காரனா, இல்லை டீவியில் பாசாங்கு சண்டைபோடும் ரெஸ்லிங் பவுண்டேஷன் ஆசாமியா என்றெல்லாம் பலவாறு யோசித்தேன்.

ஹாஸ்டஸ் வழக்கம்போல் ஆக்சிஜன் மாஸ்க் இத்யாதிகளை இயந்திரத்தனமாக அறிவித்துவிட்டு எங்கள் எதிரில் டேக் ஆப் சமயத்துக்காக உட்கார்ந்து கொள்ள, அவளைப் பார்த்து "இஸ் மோனா ஆன் டியூட்டி?" என்று கேட்டார்.

"ஷி இஸ் ஆன் பாம்பே ஃப்ளைட் சார்" என்றாள் அவள் புன்னகை மாறாமல். அத்தனை க்ன'வருடன் பேசுவதில் எவ்வித தர்ம சங்கடமும் சலனமும் இன்றி. இதற்கெல்லாம் அவர்களுக்குப் பயிற்சி தருகிறார்கள் போல! நான் மட்டும் ஹாஸ்டஸாக இருந்தால் சுருக்கென்று சிரித்திருப்பேன்.

"கேன் யு கெட் மி எ கிளாஸ் ஆப் வாட்டர்?"

"டேக் ஆப் ஆனதும் முதல் காரியமாகக் கொண்டு வருகிறேன்" என்றாள்.

விமானம் உயர்ந்து, சீட்பெல்ட் விளக்குகள் அணைந்ததும் ப்ளாஸ்டிக் தம்ளரில் அந்தப் பெண் தண்ணீர் கொண்டு வந்து கால் பட்டனை அணைக்க, சர்தார்ஜி தன் பைக்குள்ளிருந்து மாத்திரை எடுத்து அதை வாய்க்குள் அனுப்ப முற்பட்ட போது அது உருண்டு கீழே விழுந்தது.

சர்தார்ஜியால் குனிந்து பார்க்க முடியவில்லை. வயிறு மறைத்தது.

"சாரி, நீங்கள்தான் அந்த மாத்திரையை எடுத்துத் தரவேண்டும்! என்னால் குனிந்து பார்க்க முடியாது."

"ப்ளீஸ் கால் தி ஹோஸ்டஸ்" என்றேன்.

கால் பட்டனை மறுபடி அழுத்தி அவளைக் கூப்பிடுவதற்குள் அவருக்கு அலறலாக ஒரு தும்மல் வந்து தும்மி, மூக்கை ஹன்ர் என்று பண்ணிக் கொண்டு 'எக்ஸ்யுஸ்மி' என்று பொதுவாக சொல்லிக் கொண்டே என் பக்கத்தில் இருந்த 'ஸ்டேட்ஸ்மன்' பேப்பரை எடுத்து வைத்து அதன் க்ராஸ்வோர்டை மடக்கிக் கொண்டார்.

எனக்கு ஆத்திரம். என் ஜாதகராசி! எந்த நல்லது ஏற்பட்டாலும் கூடவே ஒரு குறுக்களி இருக்கும். இருப்பதற்குள் நல்ல சீட் கிடைத்தால் இந்த மாதிரி சக பயணி வந்து சேருவான்.



"ராங் நம்பர்னு சொல்லிட்டு இவ்வளவு நேரம் என்ன பேச்சு...?"
"யாராயிருந்தால் என்னங்க? என்னுடைய தீபாவளி பட்டுப் புடைவையைப் பத்தி சொல்லிக்கிட்டிருந்தேன்!"
— ஞா. ஞானமுத்து

ஹாஸ்டஸைக் கூப்பிட்டு, "வேறு சீட்டில் யாரேனும் சிறுவர்கள் இருந்தால் இடம் மாற்றிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கும் சௌகரியம்; என் சக பயணிக்கும் சௌகரியம்" என்றேன்.

"லெட் மி ஸீ சார். ப்ரேக் பாஸ்ட் பரிமாறிய பின் முதல் காரியமாக இதை கவனிக்கிறேன்" என்றாள். சர்தார்ஜி என் முறையீடுகளைக் கவனித்தாலும் கவனிக்காததுபோல் சாக்லேட் சிப்ஸிலும் க்ராஸ் வோர்டிலும் ஆழ்ந்திருந்தார். டைம்ஸ் குறுக்கெழுத்தைப் படபடவென்று நிரப்பிக் கொண்டிருந்தது வேறு எனக்கு வெறுப்பாக இருந்தது. சாக்லேட் வாசனையுடன் கரக் கரக்கை ஒரு முறை நிறுத்திவிட்டு என்னைச் சிறிய கண்களால் பார்த்து, "ஸாரி! நான் இரண்டு சீட்டு கேட்டுத்தான் வழக்கமாக வாங்கிக் கொள்வது. இன்று ப்ளைட் நிரம்பியிருந்ததால் கிடைக்கவில்லை. எனக்கு எப்படியும் டில்லி போயே ஆக வேண்டும்! ஒரு டிஸ்கஷன் இன்று.

"எனக்கு இந்த உடல் பெரிய பிரச்னை. எங்கு போனாலும் இதையும் கூட எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது" என்று சிரித்து பதில் புன்னகையை என் முகத்தில் தேடினார்.

முப்பத்தைந்து, நாற்பது வயதுதான் இருக்கும். முகத்திலும் தோள் பட்டையிலும், முழங்கையிலும் வயிற்றிலும் தொடைகளிலும் மடிப்பு மடிப்பாக கிடைத்த இடங்களில் எல்லாம் அவன் சாப்பிட்ட சாப்பாடெல்லாம் மழைக்காலத்துக்கு சேகரித்து வைத்திருந்தது போல.

"சில ஓட்டல்களிலும் இந்தப் பிரச்னை உண்டு! ரூம் கதவுக்குள் நுழைய முடியாது. மல்லாக்காகப் படுக்க முடியாது. படுத்தால் எழுந்திருக்க க்ரேன் வேண்டும். அதனால் எப்போதும் குப்புறத்தான் படுப்பேன்."

இப்போதாவது சிரிக்கிறேனா என்று பார்த்தார். நான் ஒத்துழைக்காததால், டைம்ஸ் குறுக்கெழுத்தைத் தொடர்ந்து நிரப்பி விட்டார். எனக்கு அது வேறு எரிச்சல். என்னால் அதில் ஒன்றிரண்டுதான் போட முடியும்.

ஹாஸ்டஸ் வந்து, "சாரி சார்! அந்த சிறுவன் தாயின் பக்கத்தில் வீற்றிருக்கிறான். இடம்மாற்ற மறுக்கிறான்."

"வேறு யாரும் சிறுவர்கள் இல்லையா விமானத்தில்?"என்றேன் அலுப்புடன்.

"ஐல் ட்ரை" என்று அவள் புன்னகை மாறாமல் சென்றாள். அவள் முகத்தில் சற்றே கவலை ரேகை படர்ந்திருந்தது. சாப்பாட்டு தட்டுகள் வைத்த போது அதை நான் தொடவில்லை. ஏர்லைன்ஸ் சாப்பாடு எதையும் தொடுவதில்லை.

ஆனால் அவரோ, கட்லெட், ஐஸ்க்ரீம் கூட விடாமல் உண்ட பின், "யு ஆர் டெம்ப்ட்டிங் மி யங் லேடி" என்று மற்றொரு ஐஸ்க்ரீமையும் கேட்டு வாங்கி விரலில் ஒரே வழிப்பில் உள்ளே செலுத்தி விட்டு "ஒரு சமயம் சாப்பாட்டை குறைத்து தேகப் பயிற்சி, ஆப்பரேஷன் என்றெல்லாம் யோசித்தேன்! என்ன, இன்னும் பத்து வருஷமோ பதினைந்து வருஷமோதான் இருப்பேன். சாப்பிட்டாவது கழிக்கலாம் என்று எல்லா சிகிச்சைகளையும் நிறுத்தி விட்டேன்" என்றார்.

காப்பி சாப்பிடும் போது என் மேல் கொட்டி விட்டார்.

விடுவித்துக் கொண்டு "ஐம் ஸாரி" என்று என் கோட்டைத் தட்டும் போது ஐஸ்க்ரீமையும் என் மேல் கொட்டி விட்டார்.

தன் பையிலிருந்து கைக்குட்டை எடுத்து துடைத்து விடுகிறாற்போல் பண்ணி, தட்டிய போது நிஜமாகவே வலித்தது. அத்தனை தாட்டியான புறங்கை. என் உடைகளை இன்னும் மோசமாக்கி விட்டார்.

"ஐம் சாரி! வெரி சாரி."

நான் தாங்காமல் பெல்ட்டைக் கழற்றிக் கொண்டு எழுந்து பின்பக்கம் பான்ட்ரி அருகில் போய் ஹாஸ்டஸிடம் முறையிட்டேன்.

"என்னால் அந்த இருக்கையில் உட்கார முடியாது. மூச்சுத் திணறுகிறது. நான் இங்கே நின்று கொண்டாவது பிரயாணம் செய்கிறேன்" என்றேன்.

அவள் "உங்கள் சங்கடம் எங்களுக்குப் புரிகிறது. நிச்சயம் முயற்சி செய்கிறோம்" என்றாள்.

ஹாஸ்டஸ் ஒவ்வொரு வரிசையாகப் போய், சிறுவர் சிறுமியர் இருந்தால் "இந்த அங்கில் சீட்டுக்குப் போகிறாயா? நிறைய சாக்லேட் தருகிறோம்" என்று ஆசை காட்டி, மாற்றிக்



அருள்வாக்கு

ஸந்தோஷமாக இருப்பதாகச் சொல்வது மனஸின் அநுபவங்களை வைத்துத்தான். ஆனால் ஸந்தோஷாநுபவம் பெறுகிற இந்த மனஸ்தான் நாமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? எதெதையோ தெரிந்து கொள்வதிலும் எதெதையோ ஆராய்ச்சி பண்ணி உண்மைகளைக் கண்டுபிடிப்பதிலும்தான் மனுஷ்ய ஜீவனின் பெருமையே இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறோம். அணுவிலிருந்து galaxy வரையிலும் எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றின் உண்மைகளைத் தினந்தினமும் தெரிந்து கொண்டு கர்வப்படுகிறோம். இப்படித் தெரிந்து கொள்கிற நாம் வாஸ்தவத்தில் யார் என்று ஆராய்ச்சி பண்ணித் தெரிந்து கொள்ள வேண்டாமா? தன்னுடைய ஸத்யமான ஸ்திதியையே தெரிந்து கொள்ளாமல் மற்றவற்றைத் தெரிந்து கொண்டு, "ஸயன்ஸால் ஸத்யங்களைத் தெரிந்து கொள்கிறோமாக்கும்!" என்று மார்தட்டிக் கொள்வது பரிஹாஸத்துக்கு இடமானதல்லவா? ஸத்ய ஸத்யமானதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அறிகின்ற அறிவை அறிய வேண்டும் என்றால் ஆத்ம சாஸ்த்ரத்தை அப்யஸிக்க வேண்டும்.

ஆத்ம சாஸ்த்ரங்களை இப்போதே தீவிரமாக அப்யஸிப்பதற்கில்லாத பெரும்பாலானோரும் கூட, மெய்யான ஆத்மாவை அடியோடு மறந்து பொய்யான மனஸுக்காகவே ஸதா பாடுபட்டுக் கொண்டிருப்பதாக இருக்கப்படாது. அப்படியிருந்தால் நாம் ஏமாளி என்று ஆகிவிடும். அதனால்தான், எப்படிப்பட்டவராயிருந்தாலும், தினம் ஒரு அஞ்சு நிமிஷம் பத்து நிமிஷமாவது, 'நம்முடைய கார்யம், எண்ணம், லோகம் முதலான ஸகலமும் பொய்யாகப் போய்விடும்; ஒரு பெரிய சாந்த பதம் ஆத்மா என்று இருக்கிறது' என்பதாக நினைப்பூட்டிக் கொண்டு, அந்த அஞ்சு பத்து நிமிஷம் சாந்தமாக உட்கார்ந்திருக்க வேண்டும் என்பது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

தீயவருக்கு உலகம் தீய நரகமாகத் தெரிகிறது. நல்லவருக்குச் சுவர்க்கமாகத் தெரிகிறது. அருளாளர்களுக்கு அருள்வடிவமாகத் தெரிகிறது. பகையுணர்ச்சி உடையவர்களுக்கு வெறுப்புமயமாகத் தெரிகிறது. சண்டை, சச்சரவு செய்வோருக்குப் போர்க்களமாகத் தெரிகிறது. அமைதியாளருக்கு அமைதிக் களஞ்சியமாகத் தெரிகிறது. முழுமையுற்ற மனிதனுக்கு எல்லாமே தெய்வமாகத் தெரிகிறது. அவன் அனைத்தையும் தெய்வமாகவே காண்கிறான்.

- விவேகானந்தர்

கொள்ள விருப்பமா என்று கேட்க, அனைவரும் தத்தம் பெற்றோரை நோக்க, அவர்கள் சர்தார்ஜியைப் பார்த்த மாத்திரத்தில் மறுக்க, ஒரே ஒரு பெண் சம்மதித்து விட்டு போன கையோடு பயந்துபோய் திரும்ப வந்துவிட்டாள்.

"மம்மி அங்கே ஒரு பூதம் உட்கார்ந்து கொண்டிருக்கிறது'' என்று இரைச்சலாகச் சொல்ல, வரிசை எண் இருபத்தெட்டிலிருந்து முப்பத்தாறு வரை எல்லாரும் சிரித்தார்கள்.

சர்தார்ஜியும் பின்னால் திரும்பிப் பார்த்து சிரித்தார்.

"சாரி சார்'' என்றாள் ஹாஸ்டஸ் அனுதாபத்துடன்.

நான் இங்கேயே நின்று கொண்டு பயணம் செய்யலாமா?"

"அதற்கு அனுமதி இல்லை. டர்புலன்ஸ் வந்தால் ஆபத்து."

"சரி, மேலும் கீழுமாவது நடக்கிறேன்'' என்று உலவ ஆரம்பித்தேன்! யாராவது தெரிந்தவர்கள் தென்படுகிறார்களா என்று பார்த்தேன். அன்றைக்குப் பார்த்து எந்த நண்பரும் இல்லை. பாத்ரூம் போயிருப்பவர்களின் காலி சீட்டுகளில் சங்கீத நாற்காலி போல் இடம் பெயர்ந்து இரண்டரை மணி நேர ப்ளைட்டில் ஒருவாறு இரண்டு மணி இருபது நிமிட நேரத்தைக் கழித்து விட்டேன்.

கடைசியில் திரும்ப என் இடத்துக்குப் போய் உட்கார முயன்றேன். இருக்கைக்குத் திரும்பிய போது, அவர் என் இருக்கையின் இடைத் தடுப்பை உள்ளே தள்ளிவிட்டு இரண்டு சீட்டையும் ஆக்ரமித்துக் கொண் டிருந்தார். நான் வந்ததும் மிகுந்த சிரமத்துடன் எழுந்து தடுப்பை மீட்டு எனக்கு உட்கார கால் இடம் கொடுத்தார்.

"எங்கே காணாமற் போய் விட்டீர்கள். நடுவில் எங்கேயாவது இறங்கி விட்டீர்களோ இந்த குண்டனின் அசௌகரியம் தாங்காது!'' என்றார். நான் பேசாமல் இருக்க "என்னால் உங்களுக்கு மிகுந்த துன்பம். அதற்கு ஈடாக உங்கள் கார்டு கொடுத்தால் புத்தகம் அனுப்புகிறேன்'' என்றார்.

"தேவையில்லை. இதெல்லாம் விமானப் பயணத்தில் உள்ள அனிச்சயங்கள்'' என்றேன்.

"உண்மைதான்! நான் ஒரு முறை தென் அமெரிக்காவில் முன்னூறு மைல் ஒரு ஆட்டுடன் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அதன் சொந்தக்காரன் என்னருகில் ஸ்பானிஷ் பாஷையில் தன் வாழ்க்கை சரிதத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான்! பயணம் முடிவதற்குள் பிரசவித்து விட்டேன்'' என்றார். நான் பிடிவாதமாக சிரிக்க மறுத்தேன். இந்த குண்டனுடன் என்ன வேடிக்கைப் பேச்சு!

இரண்டு மணி நேரம் கால்கடுக்க அவஸ்தை

வைத்தவனுக்கு நான் பதில் சொல்லவில்லை. அதைவிட அவமானம் இருக்க முடியாது. இருந்தும் அவர் மதிக்காமல் "யு ஆர் ப்ரம் தி சௌத்?" என்று கேட்டார்

"யா"

"ஆர்யு ஓர்க்கிங்?"

ஆங்கில உச்சரிப்பில் கொஞ்சம் பிரிட்டிஷ் தனம் இருந்ததை கவனித்தேன்.

''யா''- இதை விட சின்ன வார்த்தை கிடைக்காததால்.

அதன் பின் சர்தார்ஜி மௌனமாகி விட்டார். எப்படியாவது என்னிடம் பேச எடுத்த முயற்சிகள் எதும் பலிக்காமல், "இன்னும் சிறிது நேரத்தில் நாம் டில்லி விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம். சீட்டு பெல்டுகளை இறுக்கிக் கொண்டு சீட்டு இருக்கையை நேராக வைத்துக் கொள்ளவும்" என்று அறிவிப்பு வர,

"எனக்கு மட்டும் விதிவிலக்கு! நான் உங்கள் அருகில் உட்கார்ந்திருப்பதால் விமானம் மெத்தென்று இறங்கும். சீட்பெல்ட்டே தேவையில்லை! என்னால் சீட் பெல்ட் அணிந்து கொள்ளவும் முடியாது."

"நீ என்ன இன்ஜினியரா?"

"கம்ப்யூட்டர் சைன்ஸ்."

''என் கஸின் குஷ்வந்த் ஒரு கம்ப்யூட்டரைக் கொடுத்து பயன்படுத்த என்னை வற்புறுத்திக் கொண்டிருக்கிறான். எனக்கு இன்னும் பழகவில்லை. பழைய டைப்ரைட்டர் தான். சின்னதாக தொப்பை மேல் வைத்துக் கொண்டே டைப் அடிப்பேன். சுண்டு விரலால்தான்! மற்ற விரல்கள் பெரிசு''

எனக்கு முதல் தடவையாகச் சிரிப்பு வந்தது. அவரும் தண்ணீர்ப் படுக்கை குலுங்குவது போல் சிரித்தார்.

வாழ்க்கையில் எத்தனை தற்செயலான பரிச்சயங்கள் ஏற்படுகின்றன. அவைகளில் குண்டு சர்தார்ஜியுடன் என் வாழக்கையில் செலவழித்த ரெண்டரை மணி நேர சகபிரயாணத்தை நான் மறக்காததற்குக் காரணம், ஆகிருதி அல்ல. பின்?

சொல்கிறேன்.

பாலம் விமான நிலையத்தில் சுந்தரம் என்னை அழைத்துச் செல்ல வந்திருந்தான். சரோவில் குண்டு சர்தார்ஜி என்னைப் பார்த்ததும் "நைஸ் மீட்டிங் யு. சாரி! உங்களுக்கு அசௌகரியத்தை அளித்து விட்டேன். பாத்ரூம் அருகிலேயே நின்று கொண்டிருந்தீர்கள் என்று தேவிகா சொன்னாள்."

ஒரு வெண் சீருடை டிரைவர் சலூகையுடன் உள்ளே வந்து அவர் கைப்பையை வாங்கிக் கொள்ள, அவர் கூட்டத்தில் இலைமறை காய்மறையாகத் தெரிந்தார்.

சுந்தரம், "எப்படி இருந்தது பயணம்?" என்றான்.

"என் ஜாதக ராசிடா சுந்தர். உலகத்திலேயே குண்டு சர்தார்ஜி ஒருத்தன் வந்து பக்கத்தில வந்து உக்காந்தான். இடம் போறலை, ஏறக்குறைய நின்னுண்டே வந்தேன். மொபசல் பஸ்ல கிருத்திகைக்குப் போற மாதிரி!"

ப்ரி பெய்டு டாக்ஸிக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு வெளியே வந்தபோது, சர்தார்ஜி ஒரு பெரிய காண்டேஸா காருக்குள் திணித்துக் கொள்வதை சுந்தரத்துக்குக் காட்டினேன்.

"அதோ அவர்தான்!"

''அவரா! அவரோடயா பிரயாணம் செய்தே?"

"ஆமா பக்கத்து பக்கத்து சீட்டில."

''கை குடு! என்ன ஒரு பாக்கியம்டா உனக்கு! அவர் யாரு தெரியுமா? சந்தோக் சிங் அலுவாலியா!"

"எங்கோ பேர் கேட்டா மாதிரி இருக்கு."

''கேட்ட மாதிரியா! ரொம்ப பெரிய இன்டலக்சுவல்! எகனாமிஸ்ட். அவர் கூட பத்து நிமிஷம் பேசினா போதும், அவருடைய அறிவினுடைய பரப்பு எவ்வளவு விஸ்தாரமானதுன்னு தெரியும். பெரிய இகனாமிஸ்ட்! அவர் கூட ரெண்டு நிமிஷம் கிடைக்குமான்னு நூத்துக்கணக்கான பேர் காத்துண்டிருக்கா. ரெண்டரை மணி நேரமா! என்ன லக்டா உனக்கு!"

"மை காட்! இந்த வருஷம் நோபல் பரிசுக்கு பேர் போயிருக்கே, அவரா" என்றேன்.

"சாட்சாத் அவரேதான்! வாங்காத அவார்டு இல்லை. அவர் கூடப் பேசினா, போது போறதே தெரிஞ்சிருக்காதே! இந்த முறை எகனாமிக்ஸ் ப்ரைஸ் கிடைச்சுருன்னு சொல்றா."

கால்ப்ரெய்த் கூட அவருக்கு இன்னிக்கு ஒரு டிஸ்கஷன். அதுக்குத்தான் வந்திருக்கார்!

''அந்தக் காரை நிறுத்தி சர்தார்ஜி என்னை அடையாளம் கண்டு கொண்டு ''நைஸ் டாக்கிங் டு யு சார்'' என்று கண் சிமிட்டினார். அவர் கார் புறப்பட, "குடுத்து வெச்சவன்டா நீ'' என்றான் சுந்தரம்.

"என் ஜாதக ராசி'' என்றேன்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



கண்களில் கனவுடன் கனிவும் தேக்கிய இந்தப் பெண்மணி யார்...?

கல்கி தீபாவளி மலரின் மங்கையர் மலர் பக்கங்களைப் படித்து, தெரிந்து கொள்ளுங்கள்...

குழந்தைகள் குதூகலிக்க-கோகுலம் பக்கங்கள்.

கவிதைப் பிரியர்களுக்கு- நிறைவான கவிதைகள்.

ஆன்மிக ஆர்வலர்களுக்கு - அருமையான கட்டுரைகள்.

இலக்கிய விரும்பிகளுக்கு - ஏராளமான கதைகள்.

சிரிப்பின் ரசிகர்களுக்கு - தாராளமாக ஜோக்குகள்.

தேடினாலும் கிடைக்காத ஓவியங்கள்.

பார்க்கப் பார்க்கத் திகட்டாத வண்ணப் படங்கள்!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் கலைக் களஞ்சியம்...

கல்கி தீபாவளி மலர்-1995

மறவாமல் ஏஜென்டிடம் சொல்லி வையுங்கள்; அல்லது மானேஜர், கல்கி, சென்னை-97 என்ற முகவரிக்கு மணியார்டர் அனுப்புங்கள்

விலை ரூ.45. பதிவுத் தபாலில் பெற ரூ.60 அனுப்ப வேண்டும்.


இவற்றைக் கண்டு மிரளாத பிராண்டுகளிடமிருந்து,
உலகிலே முன்னேற்றம் கண்ட சில நாடுகளில்
இப்போது இதே போன்ற பிராண்டுகள்
மெதுவே தலை தூக்கி இருக்கலாம்.
ஆனால் அவற்றோடும் போட்டியிடத் துடியாய் துடிக்கிறது
ஒனிடா கேஷுய். வெற்றி வாகை சூடப்போவது ஒனிடாதான்...
மற்றவரை காக்கப்போவது கடவுள்தான்.
ஒனிடா
கேஷுய் சீரீஸ்
இந்தியாவிற்குப் பெருமை... உலகிற்குப் பொறாமை



காற்றின் சலசலப்பு ! ஷார்தாவின் கலகலப்பு!
மங்கையராய் இங்கு தோன்றியதில் உள்ளம்
பொங்கும் மகிழ்ச்சியில் விம்மிடுமே!
Sharda
SAREES
BELGAUM
பாலியஸ்டர் பட்டுப் புடவைகள் மற்றும் பாவாடைகள்
எல்லா பிரபல ஜவுளிக் கடைகளிலும் கிடைக்கும்



Elegance has a new name
ASHIKA SAREES


பராமரிப்பின்றி வாடுகிற கூந்தலுக்கு அழகுண்டோ?
குளித்தபிறகுகூந்தலில் சிக்குகள்ஏற்பட்டால் கூந்தல்வலுவற்றும் பராமரிப்பின்றி வாடுவதாகவும்அர்த்தம்.
இந்நிலைகூந்தலைசோப்பாலும், சாதாரணஷாம்பூக்களாலும், மற்றசாதாரண பொருட்களாலும்கழுவுவதால்கூந்தலின்இயற்கை நலன்களும், ஈரப்பதமும்வற்றிப்போய் ஏற்படுகிறது. எனவேசிக்குகளைசீப்பால்சீவிஎடுக்க முயற்சிக்காதீர்கள். அதனால்வலுவற்றமுடிகள் உடைந்துபோகக்கூடும். அதற்குப்பதில்கூந்தலுக்கு அளியுங்கள் :
புதிய ஸன்ஸில்க் ஆஃப்டர்வாஷ் கண்டிஷனர் கூந்தலுக்கு விசேஷ ஊட்டு
புதியஸன்ஸில்க்ஆஃப்டர்வாஷ்கண்டிஷனர் சிக்குகளைஇதமாய்விடுவித்து, கூந்தல் சேதமடைவதிலிருந்துபாதுகாக்கும்.
கூந்தலை கழுவிய பிறகு ஈரக்கூந்தல் முழுவதும் ஸன்ஸில்க் ஆஃப்டர்வாஷ் கண்டிஷனரை தடவவும். நுரைவராது
இரண்டுநிமிடம்நியூட்ராகேர்நலன்களைகூந்தல் எடுக்கவிடவும்.
பிறகுஅலசவும், நன்குபராமரிப்புபெற்றகூந்தல் தொட்டால்வழுவழுப்பாகஇருக்கும். டவலால் துவட்டிலேசானஈரத்தில் சீவவும், பிறகுவழக்கம்போல் காயவைக்கவும்.
ஸன்ஸில்க்ஆஃப்டர்வாஷ் நலன்கள்கழுவியபின்னரும் நீண்டநேரம்தங்கும். அதனால் உங்கள்கூந்தல்சிக்குகளற்றும், வலுவாகவும்இருக்கும். இதமாய்தழுவும்மென்மை, இதுவரைக்கண்டிராதஅழகுடன் திகழும்கூந்தலைப்பெறநேரம் வந்துவிட்டது.
ரூ. 2/- விலையுள்ளசிக்கனமான சாஷேயைபயன்படுத்திப்பாருங்கள்.
Sunsilk
AFTERWASH
CONDITIONER
WITH NUTRACARE
ஸன்ஸில்க்
ஆஃப்டர்வா
கண்டிஷன
நியூட்ராகேர் உள்ள
"இதமாய் தழுவும் மென்மை இதுவரைக் கண்டிராத அழகான கூந்தல்
HTA.1302

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

